மஞ்சரி

நந்தன - மாசி
பிப்ரவரி, 1953

அபூர்வக் கல்யாணம்
கேட்பாரற்ற பணம்
உலகில் பெரிய பதவி
அதிசய இரட்டை
வீட்டு விளக்கு
(மராட்டிக் கதை)

-6-
அணா

யார்மீது குற்றம்?

இயற்கைமீது குற்றம் கூறாதே. அது தன் கடமையைச் செய்கிறது; நீ உன் கடமையைச் செய்.

—மில்டன்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாலை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி — கி. தாமோதரன்
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி — 'ஆர்வி'
கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] நந்தன-மாசி :: :: பிப்ரவரி 1953 [இதழ் 3

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

ஆந்திர மாகாணம் அமைக்க நேரு ஒப்புக் கொண்டார். நீதிபதி வாஞ்சு வந்தார். விசாரித்தார். அவருடைய யாதாஸ்து இந்திய சர்க்காரிடம் போய்ச் சேர்ந்ததும், மேல் நடவடிக்கைகள் தொடங்கும். கூடிய சீக்கிரம் ஆந்திர மாகாணம் அமைந்து விடும். ஆந்திரர் இப்போது புதிய விவகாரங்களைக் கிளப்புவது சரியல்ல. சென்னை நகரம் ஆந்திரருக்குக் கிடையாது என்றால், அதோடு போகவேண்டியதுதானே. 'சென்னையைத் தனி மாகாணம் ஆக்கு', 'அங்கேயே ஆந்திர சர்க்காரின் தலைமைக் காரியாலயமும் இருக்கட்டும்' என்றெல்லாம் வாதிப்பது அழகல்ல. ஆந்திர மாகாணம் என்ன, சர்வாதிகாரம் உள்ள சுதந்தர ராஜ்யமாகவா இருக்கப்போகிறது? இந்தியாவுக்குள்தானே ஓர் உறுப்பாயிருக்கப் போகிறது. ஏன் இந்த மாதிரி விதண்டாவாதம் எல்லாம்?

* *

ஐக்கிய அமெரிக்காவில் ட்ரூமன் விலகினார். ஜனாதிபதி பதவியை ஸோல்ஜர் ஐக்-ட்வைட் ஐஸன்ஹோவர்-ஏற்றுவிட்டார். ட்ரூமன் முதல் தடவை அதிருஷ்டவசமாய்ப் பதவி பெற்றார். அப்போது, அவரை அதற்குத் தகுதியுள்ளவரோ இல்லையோ என்று பலர் சந்தேகித்தார்கள். அவர் தீரமாகச் செயல் புரிந்தார். இரண்டாவது தடவையும் பதவி பெற்றார். தமக்குச் சரி என்று தோன்றியதைக் கடைசிவரைக்கும் துணிச்சலோடு புரிந்தார். ஐரோப்பா முழுவதும் கம்யூனிஸ்ட் மயமாகிவிடாமல், அதன் மேற்குப் பகுதியைப் பலப்படுத்தினார். ஆனால் தூரக் கிழக்கிலும் அவர் முயற்சிகள் பலிக்கவில்லை. எப்படியாயினும் அவர் திறமைமிக்கவர் என்பது நிரூபணமாகிவிட்டது. அவர் போய், ஐக் வருகிறார். சர்வதேச நிலைமையில் ஐக் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்துவிடப் போகிறாரா? "தேசங்களுக்கிடையில் இருக்கும் பயத்தையும் அவநம்பிக்கையையும் போக்க முயல்வேன்", "சுதந்தரத்தின் நண்பர்கள் என்று ருசுவான நாடுகளுக்கு உதவுவேன்", "ஆக்கிரமிப்பவனோடு போலிப் பேரம் செய்து அவனைச்

சமாதானப்படுத்தமாட்டேன்'' என்றெல்லாம் அவர் சொல்கிறார். ஐக் சிறந்த போர்வீரர். ராஜ்ய நிர்வாகத்தில் எப்படியோ? தெரிய வேண்டும்.

* *

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் புதிய தலைவர் ஸ்ரீ கி. சந்திரசேகரன், சமீபத்தில் சென்னை எழுத்தாளர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். எழுத்தாளருக்கு எழுத்துப் பலத்தினாலேயே மதிப்பேற்படும் காலம் வரவில்லையே, இந்த நிலை மாறவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். நிலைமை உயர்வடைவதற்குப் பல உருவான யோசனைகளை அவர் சொல்லியிருக்கிறார். அத்தனையும் பாராட்டத் தக்கவை. அவர் சொல்ல விட்டுப் போன ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட வேண்டும். நவ இலக்கியம் என்று நாம் கொண்டாடும் கதைகளும் நாவல்களும் ஆயிரம் பிரதி விற்க ஐந்து வருஷமானால், எழுத்தாளர் நிலை எப்படி உயரும்? பிரசுரகர்த்தர் எப்படி எழுத்தாளரைக் கௌரவிப்பார்? புதிய நூல்களை வாங்கிப் படிக்கும் வழக்கத்தை ஜனங்களிடம் பரப்புவதற்கு என்ன என்ன வழிகளைக் கடைபிடிக்கலாம்? பிரசுரகர்த்தர்களின் துணை கொண்டு, எழுத்தாளர் சங்கம் இந்த முயற்சியில் ஈடுபட்டால் ஒழிய, எழுத்தாளர் நிலை உயர்வது சிரமம். ஊக்கமும் உற்சாகமும் செல்வாக்கும் உள்ள ஸ்ரீ சந்திரசேகரனின் தலைமையில் எழுத்தாளர் சங்கம் இந்த வருஷம் சிறந்த முறையில் செயலாற்றும் என்று எதிர்பார்க்கிறோம்.

முதுகிலே வீடு!

''அம்மா, இந்த மனிதர்களெல்லாம் 'வீட்டுக் கஷ்டம்; வீட்டுக் கஷ்டம்' என்கிறார்களே; அது என்ன?''

'சங்கர்ஸ் வீக்லி'

பிறக்கும் முன்பிருந்தே தாய் எச்சரிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு விஷயம்—

குழந்தையின் கண்

லூயிஸ் ஃபாக்ஸ் கன்னெல்

பெரும்பாலும், குழந்தையின் கண் பார்வையைப் பொறுத்துத்தான் அதன் சுபாவமும் இருக்கும் என்று சொல்லிவிடலாம். ஒரு சிறுவனுக்குத் தூரத்திலிருக்கும் பொருள் நன்றாகத் தெரியாது. அதனால் அவன் விளையாட்டில் மந்தமாக இருந்ததுடன் புத்தகப் புழு ஆகிவிட்டான். ஒரு சிறுமிக்கோ தூரத்தில் இருக்கும் பொருள்தான் நன்றாகக் கண்ணுக்குத் தெரியும். ஆகவே, அவளுக்குப் படிப்பு, தையல் எல்லாம் கஷ்டமாயிருந்தன; ஆனால் புருஷப் பிள்ளைபோல நன்றாக ஓடியாடி விளையாடுவாள். மற்றொரு சிறுவனுக்கு எல்லாப் பொருள்களும் இரட்டையாகத் தெரிகின்றன. இதனால் ஏற்படும் மனக் கலக்கத்தில் அவன் குணமே கெட்டுப்போய் அடிக்கடி அவனுக்கு வெறி வந்துவிடுகிறது. மற்றொரு சிறுமிக்கு மங்கலான பார்வை. கண்ணைச் சுளித்துச் சுளித்துப் பார்க்கும் துன்பத்துக்காளாகி ஏதாவது முனகிக்கொண்டே இருக்கிறாள்.

சட்டத்தை மீறிய குற்றத்துக்காக ஜுவனைல் கோர்ட்டில் கொண்டு வரப்பெற்ற ஐந்து குழந்தைகளைப்பற்றி ஜான் பி. ஓஷீ என்ற கண் டாக்டர், "கண் சுத்தமாகத் தெரியாததாலேயே அந்தக் குழந்தைகள் அனைவரும் ஸ்கூல் பரீட்சையில் தேறவில்லை" என்கிறார். கண்ணைச் சோதித்துப் பார்த்து அதிலிருந்த குறையை நீக்கியவுடன், அவர்களில் நான்கு குழந்தைகள் நன்றாகப் படித்துத் தேறினார்கள்; பெரியவர்களான பிறகு ஒழுங்கும் நேர்மையுமுள்ள மனிதர்களானார்கள். பியோரியா முதலிய பட்டணங்களிலுள்ள ஸ்கூல்களில் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பார்வைக் கெடுதலினாலேயே அநேகம் சிறுவர்கள் பரீட்சையில் தவறுவதாகத் தெரிகிறது.

குழந்தையின் சைகைகள், அதன் அறிவு வளர்ச்சி, முகவெட்டு அனைத்துமே அதன் கண் பார்வையையே பொறுத்திருக்கின்றன என்று டாக்டர் அர்னால்டு காஸெல் என்பவர் கூறுகிறார். "பதினாறு வயதுக்கு மேல் இருபத்தொரு வயதுக்குள்தான் கண்கள் தம் முழுத் திறமையையும் அடைகின்றன. பிறந்த குழந்தைக்கு வெளிச்சம் தெரியும். ஆனால், கண்பார்வை மட்டும் அப்பொழுது பிறந்த பூனைக்குட்டிக்கு எவ்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்; நவம்பர் '52). சிக்காகோ-39,
ஐக்கிய அமெரிக்கா.

வளவு தெரியுமோ அவ்வளவு தான் தெரியும். மூன்று மாதம் வரைக்கும் குழந்தையின் விழி தானுகப் புரண்டு கொண்டே இருக்கும். சில நாள் சென்ற பின்பே எதை யாவது குறிப்பாய்ப் பார்க்கும் சக்தி அதற்கு ஏற்படுகிறது. சிறு குழந்தையாக இருக்கும் பொழுது இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒரு முறை கண் பார்வை விருத்தியடையும். பிறகு ஒரு வயதிலிருந்து நான்கு வயது வரையில் சில மாதங் களுக்கு ஒரு முறை பார்வைக்கு வளர்ச்சி ஏற்படுகிறது. ஐந்து வயதிலிருந்து பத்து வயது வரை யில் வருஷத்துக்கு வருஷம்தான் கண் பார்வையில் நாம் வளர்ச் சியை எதிர்பார்க்கலாம்'' என்று டாக்டர் காஸெல் கூறுகிருர்.

குழந்தை நல்ல கண் பார்வை யோடு பிறக்க வேண்டுமென் ருல், தாய் கர்ப்பவதியாயிருக் கும்பொழுதே கவனித்து நடந்து கொள்ள வேண்டும். டாக்டர் சொல்லுகிறபடி உணவு கொள்ள வேண்டும்; வாழ வேண்டும். தொத்து வியாதிகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கர்ப்பமாயிருக்கும் பொழுது தாய்க்குச் சின்ன அம்மை வார்த்தால், அது வயிற்றிலிருக்கும் குழந்தையின் கண்ணைப் பாதிக்கும். குறைப் பிரசவம் ஏற்பட்டு விடாதபடி டாக்டர் சொல்லுகிற முன் னெச்சரிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள். ஆறு ஏழுமாதக் குறைப் பிரசவங் களில் பிறந்த குழந்தைகளை இப் பொழுதெல்லாம் டாக்டர்கள் காப்பாற்றி விடுகிருர்கள். ஆயினும் அவைகளுக்குக் கண் பார்வை சரியாக இருப்பதில்லை, சில குழந்தைகள் பொட்டையே ஆகிவிடுகின்றன.

பிறந்த சிலநாள் வரைக்கும் குழந்தையின் கண்ணுக்கு அதிக வெளிச்சம் ஆகாது. கிரகணத் தின்பொழுது சூரியனை உற்றுப் பார்த்தவர்கள் கண் பார்வை யிழந்து போவதைப் பார்த்திருக் கிரும் இல்லையா? கைக் குழந் தையை வெளியே வண்டியில் வைத்துத் தள்ளிச் சென்ருல் முகத்துக்கு நேரே வெயில் படாதபடி வண்டியைத் தலைப் பக்கம் மூடிவைக்க வேண்டும். குழந்தையின் கண்ணை நாம் கழுவிச் சுத்தம் செய்யவேண் டிய அவசியமே இல்லை. அது அழுவதனுலேயே அதன் கண் அலம்பியதுபோல் சுத்தமாகி விடுகிறது. பீளை சேர்ந்து இமை ஒட்டிக்கொண் டிருந்தால்தான் கண்ணுக்கு டாக்டரைக் கேட்டு மருந்து வாங்கிப் போட வேண்டும்.

குழந்தைக்கு அம்மை, டிஃப் திரியா போன்ற தொத்துவியா திகள் வந்தால் கண்பார்வை பாதகமடையும். அப்பொழுது ஜாக்கிரதையாக இருக்க வேண் டும்.

மூன்று மாதம் வரையிலும் சில சமயம் குழந்தையின் கண் பார்வை நேர் பார்வையாக இல் லாதது போல் தோன்றும். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஆயி னும் ஆறு மாதத்துக்குப் பிறகும் பார்வை ஒரு மாதிரியாக இருப்ப தாகத் தோன்றினுல், டாக்ட ரிடம் காட்டவேண்டும். சரி யானபடி சிகிச்சை செய்யாமல்

போனால், ஐந்தாறு வயதாகும் பொழுது பார்வையில் ஊனம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

காலிபோர்னியாவில் பெவர்லி ஹில்ஸ் என்ற இடத்தில் வெகு அழகான ஒரு பெண்குழந்தைக்குப் பார்வைமட்டும் ஒரே கோணலாயிருந்தது. கண் வைத்தியத்தில் தேர்ந்த கண் டாக்டர் ஒருவரிடம் காட்டிய பொழுது, குழந்தைக்குக் கிட்டப் பார்வை, கண்ணாடி தேவை என்று தெரிந்தது. உடையாத மூக்குக் கண்ணாடி ஒன்றைச் சிறுமிக்கு டாக்டர் போட்டு வைத்தார். இதனால் பார்வையில் ரொம்பக் குணம் தெரிந்தது. என்றாலும் ஒரு கண் விழி சற்றுக் கோணலாகவே தோன்றியது ஆபரேஷன் ஆனதும் கண் பார்வை முற்றும் நேராகிவிட்டது. குழந்தையின் அழகைக் குலைத்த கண்கள் ஆபரேஷனுக்குப் பிறகு மிகவும் அழகிய கண்களாக விளங்கின.

குழந்தைக்கு மூன்று வயதானவுடன் வருஷந்தோறும் கண் டாக்டரிடம் குழந்தையின் கண்களைக் காட்டிப் பரிசோதிக்கச் செய்வது நல்லது. அது ஏன் அவசியம் என்பதற்குப் பின்வரும் அடையாளங்களைக் கொண்டு நாம் அறிந்துகொள்ளலாம்; அடிக்கடி முகத்தைக் கடுத்துக்கொள்வது, புரியாமல் விழிப்பது, அரைக் கண்ணால் மேலும் கீழும் பார்ப்பது, கையிலுள்ள புத்தகத்தையோ வேறு சாமானையோ ரொம்பவும் அருகிலாவது அல்லது தூரத்திலாவது வைத்துக்கொண்டு பார்ப்பது (14 அல்லது 16 அங்குல தூரத்தில் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிப்பது தான் சரி), பார்க்கும்பொழுது தலையைச் சாய்த்துக்கொள்வது, வெளிச்சம் தாங்காமல் கண் கூசுவது அல்லது மூடுவது, கண் சிவந்தோ அல்லது நீர் கசிந்து கொண்டோ இருப்பது, கண் சிவந்து இமைகள் தடித்துத் தோன்றுவது, அடிக்கடி தலைவலியால் சிரமப்படுவது, பள்ளிக்கூடப் பாடங்களைக் குனிந்து எழுதும்பொழுது தலை கிறுகிறுத்து வயிற்றைக் குமட்டி வாந்தி எடுக்க முயல்வது, விளையாட்டுக்களில் மிகவும் பின்னணியில் இருப்பது, அடிக்கடி கால் தடுக்கி விழுவது போன்ற குறிகள் குழந்தைக்கு நல்ல கண்ணில்லை என்பதைத் தெரிவிக்கும் ஒன்பது வயது வரையிலும் சில குழந்தைகளுக்குப் புத்தக எழுத்துக்கள் நன்றாக விளங்காமலிருக்கலாம். பிறகு கண்ணாடி தேவையில்லாமலே அவர்கள் கூரிய பார்வை பெறுவதுண்டு.

வாணங்கள், வெடிகள் விஷயமாக எவ்வளவோ சட்ட திட்டங்கள் இருந்தபோதிலும், வருஷந்தோறும் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளுக்குக் குறையாமல், வெடிகள் மூலம் கண்ணுக்குத் தீங்கு நேர்கிறது. வெடிகள், கத்தரிக்கோல், கத்தி, அம்பு போன்ற வஸ்துக்களைக் குழந்தை கையில் எடுக்கும்படி விடக் கூடாது. எடுத்தால் ஜாக்கிரதையாய் உபயோகிக்கும்படி பழக்க வேண்டும். பெண்களைக் காட்டிலும் பையன்கள்தான் அதிகமாகக் கண்ணைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். கண்மேல் பெரியவர்

களோ பிற குழந்தைகளோ ஓங்கி அறை கொடுப்பதனால், சில சமயம் கண்ணுக்குத் தீங்கு ஏற்படுகிறது.

குழந்தையின் கண்ணில் ஏதாவது பட்டுவிட்டாலும் அல்லது குத்திவிட்டாலும் நாமே ஏதாவது பரிகாரம் செய்து காலத்தைக் கடத்தக் கூடாது. உடனே டாக்டரிடம் கொண்டு போய்க் காட்ட வேண்டும். கண்ணில் ஏதாவது தூசி விழுந்தால், கண்ணை ஒன்றும் செய்யக் கூடாது. சிறிது நேரம் கண்ணை மூடிக்கொண் டிருந்தால், கண் ஜலமே தூசியை அப்புறப்படுத்தி விடும். இமையோரத்தில் தூசி ஒதுங்கியவுடன் கையை அலம்பிக் கொண்டு சுத்தமான துணியை எடுத்து அதை ஒத்தி எடுத்து விடலாம். அவசியமாயிருந்தால் டாக்டரிடம் காட்டுவது நல்லது.

குழந்தை நல்ல வெளிச்சமுள்ள அறைகளில் படிக்க வேண்டும். படிக்கும்பொழுதும் எழுதும்பொழுதும் வெளிச்சம் நேர் எதிரே இராமல் சிறிது பின்புறம் இருப்பதே நல்லது. முகத்துக்கு நேரே வெயில் அடிக்கும்பொழுது குழந்தை படிக்கும்படி விடக்கூடாது பள்ளிக்கூடப் பாடங்களை எழுதும்பொழுது குழந்தை சரியானபடி உட்கார்ந்து எழுதுகிறதா என்று கவனிக்க வேண்டும். அடிக்கடி கண்ணைக் கசக்கும்படி விடக்கூடாது. குழந்தை கண்ணாடி அணிந்திருந்தால் அதைச் சுத்தமாய்த் துடைத்துப் போட்டுக்கொள்ளும்படி பழக்க வேண்டும். கண்ணாடி ஃப்ரேம் வளையாமல் இருக்கிறதா என்று சிலமாதங்களுக்கு ஒருமுறை பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வது நல்லது. பெரிய கண் வியாதிகள், பார்வைக் குறைவு இவைகளுக்கு ஆச்சரியமான சிகிச்சை முறைகளை இப்பொழுது தினம் தினம் கண்டுபிடித்து வருகிறார்கள். ஆயினும் கண் கெட்டபின் டாக்டரைத் தேடி ஓடுவதைவிட முன்பே ஜாக்கிரதையாக இருப்பது நலம்.

யார் மொட்டை?

ஒரு பிரபல நடிகர் வெளியே சிறிது தலை காட்டினால் போதும்; ஏராளமான அபிமானிகள் சூழ்ந்துகொண்டு, கையெழுத்துப் போட்டுத் தரும்படி உபத்திரவம் செய்வார்கள். அவர் தலைமயிரில் ஒன்றிரண்டு கேட்டுப் பலர் கடிதம் எழுதுவார்கள். அவரும் கேட்டவருக்கெல்லாம் இல்லையென்னாது ஒன்றிரண்டு மயிரிழைகளை அனுப்பிவந்தார்.

''இப்படி அனுப்பிக்கொண்டே இருந்தீர்களானால், வெகு சீக்கிரத்தில் நீங்கள் மொட்டையாகி விடுவீர்கள்'' என்றார் நண்பர்.

''நானா? நான் மொட்டையாக மாட்டேன். என் நாய்க்குட்டிதான் மொட்டையாகும்'' என்றார் நடிகர்.

—'பேஜண்ட்'

நூதனக் கருவிகள்

இளம்பிள்ளை வாதம் வந்த குழந்தைகளை நீரில் மிதக்க விட்டால் நல்லதாம். ஆனால், நீந்தத் தெரியாத சிறு குழந்தைகளை ஸ்நானத் தொட்டியில் விடுவது எப்படி? அவை முழுகி விடுமே! இதற்காகத் துணி போன்ற ஒரு நூதன வஸ்துவை லண்டன் நிபுணர்கள் தயாரித்திருக்கிறார்கள். அதில் நீர்க் குமிழிகள் அப்படியே ஒட்டிக்கொள்வதால், அது மிதந்துகொண்டேயிருக்கும். அந்த வஸ்துவைக் கொண்டு, குழந்தைக்கு ஸ்நான உடுப்பு ஒன்று அமைத்திருக்கிறார்கள். அதை அணிவித்துக் குழந்தையை நீரில் போட்டால், தலை எப்போதும் நீருக்கு மேலே இருக்கும்படி குழந்தை மிதக்கும்; அமிழாது.

லண்டன் ரேடியோ 1952-ஆம் வருஷக் கண்காட்சியில் புதுமையான டெலிஃபோன் கருவி ஒன்று வைத்திருந்தது. இதற்கு டெலிவிஷன் ஃபோன் என்று பெயர். இந்த டெலிஃபோனில்பேசிக் கொள்கிற இரண்டு பேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளலாம். பேசுகிறவர் உரு, கேட்கிறவருக்கு முன் ஒரு திரையில் ஸினிமா போல் பிரசன்னமாகிவிடுகிறது.

அபூர்வக் கல்யாணம்

புரொபஸர் ஹர்பன்ஸ் சிங்

நூறு வருஷங்களுக்கு முன்பு நடந்த கல்யாண விமரிசையைக் கேட்கும்போதே வியப்பு அடைவோம். 'பஞ்சாப் சிங்கம்' என்று சரித்திரப் பிரசித்தி பெற்றவர் ரண்ஜித் சிங். இவர் ஆங்கிலேயருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் பேரனின் திருமண வைபவம் இது.

ரண்ஜித் சிங்கின் பேரனுக்கு நடந்த கல்யாணத்தைப் போல அந்தக் காலத்தில் எங்குமே நடந்ததில்லை. கல்யாணம்

ரண்ஜித் சிங்

ஒரு திருவிழாவைப் போலவே இருந்தது. செலவான தொகைக்கு அளவில்லை. கல்யாணத்துக்கு வந்த விருந்தாளிகள் 5 லட்சம் பேர். ஒரே ஒரு நாள் ரண்ஜித் சிங் தர்மத்துக்குச் செலவிட்ட தொகை மட்டும் ரூ. 20 லட்சம்.

கல்யாண வரனை இளவரசன் நவ்நிஹால் சிங்குக்கு வயது 16. சிறந்த போர்வீரன். ரண்ஜித் சிங்குக்குக் கீழ்ப்பட்ட சர்தார் ஷாம் சிங் அட்டாரிவாலா என்பவரின் குமாரியே மணமகள். இந்திய கவர்னர்-ஜெனரல் லார்டு பெண்டிங்க், பிரதம ராணுவத் தளபதி ஸர் ஹெனரி ஃபேன், ஆக்ரா கவர்னர் ஸர் சார்லஸ் மெட்காஃப் இவர்களுக்கும் ஃபரீத்கோட், பாடியாலா, நாபா, ஜிந்த், மேலார் கோட், கால்ஸியா, கபூர்தலா, நாராயண்கட், மாந்தி, சுகேத் ஆகிய சம்ஸ்தானத்து மன்னர்களுக்கும் கல்யாண அழைப்புகள் சென்றன. கவர்னர்-ஜெனரலின் சார்பாகப் பிரதம ராணுவத் தளபதி ஸர் ஹென்ரி ஃபேன் தம்பதிகளும் ஆபீஸர்களும் 1837-மார்ச் 3-ஆம் தேதி கல்யாணத்துக்கு வந்திருந்தார்கள். கல்யாணத்துக்கு வந்த விருந்தாளிகளை வழக்கம் போல மிக்க விமரிசையாக அமிர்தஸரஸில் ரண்ஜித் சிங் வரவேற்றார்.

பிரதம தளபதியும் மற்றவர்களும் சட்லஜ் நதியைக் கடக்கும்பொழுது, ஹரீக் என்னும் இடத்தில் ரண்ஜித் சிங்கின் இரண்டாவது மகன் ஷேர்

காப்பிரைட்; மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்; ஜனவரி '53), கல்கத்தா.

சிங்கைச் சந்தித்தார்கள். வைரம், கெம்பு, நீலம், முதலிய ரத்தினங்கள் பதித்த தலைப் பாகையை இளவரசர் அணிந்திருந்தார். ஏராளமான பணியாட்கள் அவருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தார்கள். காம்பீரியமும் அமைதியும் நிறைந்த இளவரசரின் தோற்றத்தைப் பிரதம தளபதியும் மற்றவர்களும் கண்டு பிரமித்து விட்டார்கள். அடுத்த நாள் இளவரசரின் கூடாரத்துக்கு ஸர் ஹென்ரி சென்றார். இரண்டு பேரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, இளவரசருடன் வந்த ஒரு சித்திரகாரர் ஸர் ஹென்ரி ஃபேனைத் தத்ரூபமாக வரைந்துவிட்டார். இளவரசரின் கூடாரத்தில் இருந்த பொருள்களைக் கண்டு விருந்தாளிகள் வியந்தார்கள். பெரிய கண்ணாடிகளும் ஃபிரெஞ்சு வாசனைப் புட்டிகளும் இளவரசரின் படுக்கை அறையில் நிறைந்திருந்தன.

இளவரசர் ஷெர் சிங்குடன் பிரதம தளபதியும் மற்றவர்களும் அமிர்தஸரஸுக்குச் சென்றார்கள். மணமகளின் தந்தையும் பட்டத்திளவரசருமான கரக் சிங் நகரத்துக்கு இரண்டு மைல் தூரம் வரையில் சென்று விருந்தாளிகளை வரவேற்றார். 5,000 ரூபாய் கொண்ட பணமுடிப்பு ஒன்றை ஸர் ஹென்ரிக்கு இளவரசர் அளித்தார். கோவிந்தகட் என்ற கோட்டையிலிருந்து மரியாதைக் குண்டுகளின் சப்தம் எட்ட, நகருக்குள் ராணுவத் தளபதி நுழைந்தார். தம் ஜாகைக்குச் சென்றதும்

நவ்நிஹால் சிங்

ராணுவத் தளபதியும் மகாராஜாவுக்கு மரியாதை செலுத்தும் வகையிலே 21 குண்டுகள் சுடும்படி உத்தரவிட்டார். பிறகு தளபதி, 'ராம் பாக்' என்ற தோட்ட மாளிகையில் தங்கியிருந்த ரண்ஜித் சிங்கைப் பார்க்கச் சென்றார். பச்சைக் காஷ்மீர் தலைப்பாகையை ரண்ஜித் சிங் அப்பொழுது அணிந்திருந்தார். அவருடைய கழுத்தை ஒற்றை வட முத்துமாலையொன்று அலங்கரித்துக் கொண்டிருந்தது. தங்க வெள்ளி ஜரிகை இழைத்த அழகிய காஷ்மீர்ச் சால்வைகளால் தைத்த மெத்தையிட்ட ஆசனத்தில் அவர் உட்கார்ந்திருந்தார். அந்த ஆசனத்தின் கால்கள் வெள்ளியால் செய்தவை. ஆசனம் இருந்த தரையில் விலை உயர்ந்த காஷ்மீர்ச் சால்வைகளையும், ஜமக்காளங்களையும் பரப்பியிருந்தார்கள். மகாராஜாவின் தர்பார் மண்ட

பத்தில் விலை உயர்ந்த அற்புத மான ஆபரணங்களும் ஆடை களும் நிறைந்திருந்தன. சம்ஸ் தானப் பிரதம மந்திரி தியான் சிங்கின் மகன் ஹீரா சிங்கின் மார்பு,கை, கால் எல்லாமே ஆப ரணங்கள் இழைத்தவை போல ஜொலித்தன. ஸர் ஹென்ரி ஃபேனே, ரண்ஜித் இனிய முகத் துடன் எதிர்கொண்டு அழைத்து ஆசனமளித்தார்; அன்பு கனியப் பேசினார்.

கல்யாணத்தின் விசேஷ நிகழ்ச்சி அன்று மாலையே நடை பெற்றது. மணமகனுக்குப் பரி சளிப்பு வைபவம் கோலாகல மாகத் துவங்கியது. ஸர் ஹென்ரி 11,000 ரூபாயும் தியான் சிங் 1,25,000 ரூபாயும், காஷ்மீர் மன்னர் வம்ச ஸ்தாப கரான குலாப் சிங், அவர் தம்பி சுசேதா சிங், மிசார் ரூப்சந்த் இவர்களும் மற்றச் சர்தார்களும் ஆளுக்கு 51,000 ரூபாயும் பரி சளித்தார்கள். பிற தலைவர் களும் விருந்தாளிகளும் அவரவர் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ற தொகையையும் பொருள் களையும் பரிசாக அளித்தார்கள். மணமகனுக்குக் கிடைத்த பரிசு களின் மதிப்பு 50 லட்சம் ரூபாய் என்று மதிப்பிட்டார் கள். ரத்தினங்கள் இழைத்த அம்பாரிகளில் விருந்தாளிகள் அமர்ந்து யானைகளின்மேல் ஊர்வலமாக மணமகளின் இல்லத்துக்குச் சென்றார்கள். அமிர்தஸரஸின் பிரதான வீதி களின் வழியே ஊர்வலம் சென்றது. தர்பார் மண்டபத் துக்குச் சென்றதும், அங்கே ணமகன் ஆசீர்வாதம் மபற்றுக்கொண்டார். அபூர்வ முத்துக்கள் பதித்துத் தங்க ஜரிகைகள் தொங்கும் 'கல் யாணமுடி'யை ரண்ஜித் சிங் இளவரசரான நவ்நிஹால் சிங் கின் தலையில் அணிவித்தார்.

கம்பீரமாகச் செல்லும் யானைகளின்மேல் ஆஜானுபாகு வான வீரர்கள் அமர்ந்து செல்லும் அந்தக் கல்யாண ஊர்வலம் ஒப்பற்ற காட்சியாக இருந்தது. தேசத்தின் பல பாகங்களிலுமிருந்து கல்யாண கோலாகலங்களைக் கண்டு களிக்க ஆயிரக்கணக்கான மக் கள் கூடியிருந்தார்கள். மணப் பெண் இருந்த அட்டாரி என் னும் ஊரிலிருந்து அமிர்தஸரஸ் வரையில் உள்ள ராஜ பாட்டையின் இரண்டு புறமும் வேடிக்கை பார்க்கும் மக்களின் கூட்டம் சாரி சாரியாக நின்று கொண்டிருந்தது. ஊர்வலம் செல்லச் செல்ல மைல் கணக் காக நின்றுகொண்டிருந்த மக் கள் கரகோஷம் செய்து கொண்டே இருந்தார்கள். யானைமேல் அமர்ந்திருந்த விருந் தாளிகளிடம், ஒவ்வொன்றிலும் இரண்டாயிரம் ரூபாய் தங்க மொகராக்கள் நிறைந்த பல பைகளை ரண்ஜித் சிங் ஒப் படைத்திருந்தார். ஊர்வலத் தைக் காண வந்திருந்த மக்க ளிடையே இந்தத் தங்க மொக ராக்களை, ரண்ஜித் சிங்கும் அவரு டைய குடும்பத்தார்களும் பிர தான விருந்தாளிகளும் பொழிந் தார்கள். கண்ணைக் கவரும் வகை யில் அலங்கரித்திருந்த மேடை யொன்று ஊர்வலத்தின் ஆரம் பத்தில் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. அதன்மேல் ஆடலும் பாடலும் வழி முழுவ

தும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்தன.

மணமகளின் தந்தையான சர்தார் ஷாம் சிங்கும் கல்யாண ஊர்வலத்தை வரவேற்கப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்திருந்தார். அவருடைய இல்லத்தை ஊர்வலம் நெருங்கியதும், மரியாதைக் குண்டுகள் வெடித்தன; வாண வேடிக்கைகள் நடந்தன. ரண்ஜித்சிங்குக்கு 101 மொகராக்களும் 5 குதிரைகளும் சர்தார் ஷாம் சிங் பரிசளித்தார். இளவரசர் கரக் சிங்குக்கு 51 மொகராக்களும் ஒரு குதிரையும், மற்ற இளவரசர்கள் ஒவ்வொருவருக்கும் 11 மொகராக்களும் ஒவ்வொரு குதிரையும் அன்பளிப்பாகத் தந்தார். பிறகு விருந்தாளிகள் அனைவரையும் சர்தார் ஷாம் சிங் தம் கோட்டையின் மேல்மாடிக்கு அழைத்துச்சென்றார். பிரதம ராணுவத் தளபதிக்கும் ரண்ஜித் சிங்குக்கும் இடையிலே தங்கமும் வெள்ளியும் வைத்திழைத்த ஆசனத்தில் மணமகன் அமர்ந்தார். பிரசித்தி பெற்ற கோகினூர் வைரத்தை ரண்ஜித்சிங் தம் புஜத்தில் அணிந்திருந்தார்.

ஒன்பது மணிக்குப் பிறகு வைதிக காரியங்கள் தொடங்கின. மந்திர கோஷம் எங்கும் நிறைந்தது. மகாராஜாவைப் பல திசையிலிருந்தவரும் ஆசீர்வதித்தார்கள். மகாராஜாவும் ஸர் ஹென்ரி ஃபேனும் மற்ற இளவரசர்களும் தங்கியிருந்த கூடாரங்களுக்கு எதிரே கண்ணைக் கவரும் வாண வேடிக்கைகள் நடைபெற்றன. இரவு முழுவதும் ரம்மியமான பல நிகழ்ச்சிகளும் கேளிக்கைகளும் நடந்து கொண்டே இருந்தன.

கல்யாணத்தின்போது இனாம் கேட்பதற்காக வந்திருந்தவர்களையும் கல்யாண வேடிக்கைகளைப் பார்க்கவந்த மக்களையும் ஐந்து மைல் விஸ்தீர்ணம் உள்ள பிரதேசத்தில் இருக்கச் செய்தார்கள். அவர்களைச் சிப்பாய்கள் நெருக்கமாகச் சூழ்ந்து கொண்டார்கள். மக்கள் வெளியே வருவதற்காக எண்பது வாயில்கள் அமைத்தார்கள். ஐந்து மைல் சுற்றளவில் கூடியிருந்த மக்களுக்கு இனாம் அளிக்க இந்த வாயில்கள் தோறும் பணப்பைகளுடன் உயர்தர அதிகாரிகள் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் இனாம் ஏற்பாடு செய்தார்கள். இந்தத் தொகையை வாங்கியவர் மீண்டும் அந்த வட்டத்துக்குள் செல்லமுடியாதபடி தடை செய்திருந்தார்கள். இந்த வகையில் இருபது லட்சம் ரூபாய் விநியோகமாயிற்று.

அப்போது தலையிலே ஒரு சட்டியை வைத்துக்கொண்டு ரண்ஜித் சிங்கை ஒருவன் நெருங்கி, தனக்கும் தன் குடும்பத்துக்கும் இனாம் கிடைக்கவில்லை என்று முறையிட்டான். "உன்னுடைய குடும்பத்தினர் எங்கே?'' என்று ரண்ஜித் சிங் அவனை விசாரித்தார். அவன் தன் தலையில் மூடிவைத்துக்கொண்டிருந்த சட்டியைக் கையில் எடுத்துத் திறந்தான். அதில் ஏராளமான எறும்புகள் கிடந்தன. அதைப் பார்த்த ரண்ஜித் சிங், "அப்பா, உன்

குடும்பத்தில் எவ்வளவு பேர் இருக்கிருர்கள் என்று கணக்கிட்டு ஒவ்வொருவருக்கும் உரிய தொகையைப் பெற்றுக்கொள். அது உன்ஞல் முடியாமல் போனுல் உன் சட்டி நிறைய ரூபாய் பெற்றுச் செல்'' என்று சொன்னுர். அப்படியே அவன் சட்டி நிறைய ரூபாய் பெற்றுச் சென்ருன்.

மல்யுத்தம், வாள் போர், யானைச் சண்டை முதலிய பல விளையாட்டுக்களை வந்தவர்களெல்லாம் கண்டு களித்தார்கள். பிற்பகலில் மணமகளுக்குக் கிடைத்த சீர்வரிசைகளைக் கண்காட்சியாக வைத்தார்கள். 11 யானைகள், 101 குதிரைகள் 101 பசுக்கள், 101 எருமைகள், 101 ஒட்டகங்கள், நூற்றுக்கணக்கான தங்க வெள்ளிப் பாத்திரங்கள், 500 ஜோடி சால்வைகள், ஆபரணங்கள், விலை உயர்ந்த ரத்தினங்கள், பட்டாடைகள், லட்சக்கணக்கான ரூபாய்கள் இவை எல்லாம் அங்கே நிறைந்திருந்தன. ரண்ஜித் சிங்குக்கும் மற்ற விருந்தாளிகளுக்கும் சர்தார் ஷாம் சிங் பல பரிசுகளை அளித்தார்.

கல்யாண வைபவங்கள் முடிந்த இரண்டு நாளைக்குப் பிறகு லாகூர் நகரத்தில் ஷாலிமார் தோட்டத்தில் ஒரு பெரிய விருந்துக்கு ரண்ஜித் சிங் ஏற்பாடு செய்திருந்தார். ஷாலிமார் தோட்ட மதில்கள், தடாகச் சுவர்கள், கட்டிடங்கள் எங்கும் அகல் விளக்குகளை வைத்து அற்புதமாக அலங்காரம் செய்திருந்தார்கள். பத்துப் பன்னிரண்டு அடிக்கு ஒன்ருக வர்ண விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. இவைகளுக்கிடையில் அங்கங்கே நீரைப் பொழிந்துகொண்டிருந்தன பல நீரூற்றுக்கள். இந்தக் காட்சி ஏதோ ஒரு வனதேவதையின் கேளிக்கை இடம் போலவே தோன்றிற்று. ஆங்கிலப் பெண்மணிகள், இங்கு நடந்த வாண வேடிக்கைகளைக் கண்டு வியந்தார்கள். ஒவ்வொருவரையும் ரண்ஜித் சிங் விருந்தின்போது தனித்தனியே பார்த்து விசாரித்தார்.

மூன்ருவது நாள் ஸர் ஹென்ரியின் கூடாரத்துக்கு ரண்ஜித் சிங் சென்று பார்வையிட்டார். ஒரு யானை, எட்டுக் குதிரை, இரட்டைவெடித்துப்பாக்கிகள், ரைபிள்கள், பிஸ்டல்கள் முதலிய பலபொருள்களை ராணுவத் தளபதியிடமிருந்து ரண்ஜித் சிங் அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்டார்.

ரவி நதிக் கரையில் நின்றுகொண்டிருந்த ரண்ஜித்சிங்கின் சேனையை ஸர் ஹென்ரி பார்வையிட்டு ராணுவத்தின் அமைப்பையும் கட்டுப்பாட்டையும் வியந்தார். ஸர் ஹென்ரியின் மெய்காப்பாளர் செய்த அணிவகுப்பையும் ரண்ஜித் சிங் பார்வையிட்டார். ஆங்கில வீரர்களைப் பாராட்டி அவர்களுக்கு அவர் 11,000 ரூபாய் பரிசளித்தார்.

கல்யாணத்துக்கு வந்திருந்த விருந்தாளிகள் ஒருநாள் அரண்மனை ஆபரணங்களையும் ரத்தினங்களையும் கண்டு களித்தார்கள். உலகத்திலேயே வேறு எங்கும் காணமுடியாத பல அபூர்வ ரத்தினங்கள்

அங்கே இருந்தன. உலகப் பிரசித்திபெற்ற கோஹினூர் வைரத்தையும் விருந்தாளிகள் அங்கே கண்டு அதிசயித்தார்கள். ஒன்றைவிட ஒன்று விலை உயர்ந்த பதக்கங்களும், கைவளையல்களும், ரத்தினமாலைகளும் அங்கே இருந்தன. ஆங்கிலச் சீமாட்டிகள், அரண்மனைக்குச் சென்று அந்தப்புரத்து மாதர்களைப் பார்த்தார்கள். மகாராஜாவின் மனைவிமார்களுடன் பேசினார்கள். கரக் சிங்கின் தாயான மகாராணி மாயி நகாய் அந்த விருந்தாளிகளை வரவேற்றாள். ரண்ஜித் சிங்கின் தளபதி வெந்துரா அலார்ட் என்பவரும் அவருடைய மனைவியும் ஒருவர் பேச்சை மற்றவருக்கு மொழிபெயர்த்துச் சொன்னார்கள்.

ஷாலிமார் தோட்டத்தில் ஹோலி பண்டிகை நடைபெற்றது. விருந்தாளிகள் அனைவரும் விழாவில் கலந்துகொண்டார்கள். காவிப்பொடியும் மஞ்சள் பொடியும் கலந்த வர்ணநீரை ஒருவர் மேல் ஒருவர் தெளித்துக்கொண்டு வேடிக்கையாகப் பொழுதைக் கழித்தார்கள். இந்த விழாவின் ஆரம்பத்தில் ஸர் ஹென்ரியின் சொட்டைத் தலையின்மேல் ரண்ஜித் சிங் முதவில் வர்ண நீரை ஊற்றினார்; அவர் உடம்பிலே செம்பொடியைத் தியான் சிங் பூசினார். அவ்வளவுதான்; உடனே மற்ற எல்லாரும் விளையாடத் தொடங்கிவிட்டார்கள்.

பதினைந்து தினங்கள் லாகூரில் இன்பமாகக் கழித்தபின், ரண்ஜித் சிங்கிடம் ஸர் ஹென்ரி விடை பெற்றுக்கொண்டார். அவரை வழி அனுப்புவதற்காக ரண்ஜித் சிங் விசேஷ தர்பார் ஒன்றைக் கூட்டினார்: ஒவ்வொருவருக்கும் விசேஷ சம்மானங்கள் அளித்தார். விருந்தாளிகளில் ஒவ்வொருவரின் கையையும் குலுக்கி அவர் விடை கொடுத்து அனுப்பிய காட்சி மிக்க உருக்கமாயிருந்தது. அன்பும் தாராளமும் மிக்க நண்பர் ரண்ஜித் சிங்கை விட்டுப் பிரிய மனமில்லாமல் ஒவ்வொருவரும் விடை பெற்றுச் சென்றார்கள். இளவரசர் ஷெர் சிங், சட்லஜ் நதிவரைக்கும் சென்று அவர்களை வழி அனுப்பினார். அப்போது ஆங்கில மெய்காப்பாளர்களில் ஒருவன் இறந்துவிட்டான். அவனுடைய சமாதியின்மேல் ஷெர் சிங் மலர்மாலை சார்த்தி வீர வழிபாடு செய்தார். சமாதியைச் சுற்றிச் சுவர் எழுப்பும் வரையில் காவல் புரிவதற்காக ஒரு சிப்பாயையும் அங்கே நிறுத்தினார். ஷெர் சிங்கின் பெருந்தன்மையான இந்தச் செயலைக் கண்டு ஆங்கிலேயர்கள் பாராட்டினார்கள். சட்லஜ் நதிக்கரையில் ஷெர் சிங்குக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஸர் ஹென்ரி ஃபேன் ஒரு தர்பார் கூட்டிப் பல சம்மானங்கள் வழங்கினார்.

இளவரசர் நவ்நிஹால் சிங்கின் கல்யாணத்தின்போது பஞ்சாபின் சுபிட்ச தாரகை என்னும் பொருள்கொண்ட கவ்கப்-இ-இக்பால்-இ-பஞ்சாப் என்ற வீரப் பதக்கத்தை ரண்ஜித் சிங் வழங்கினார். இந்தப் பதக்கத்தை முதல் முதலில் பெற்றவர் இளவரசர் நவ்நிஹால் சிங்தான்.

ராம பட்டாபிஷேகம் ★



ஹனுமான் மூலம் ராமன் வருவதை அறிந்த பரதன் சிறந்த ஏற்பாடுகளுடன் ராமனுடைய வரவை எதிர்பார்த்திருந்தான். விமானம் அருகில் நெருங்கியது. அதில் சீதையுடன் ராமனையும் லட்சுமணனையும் சுக்கிரீவனையும் விபீஷணனையும் பரதனையும் மற்றவர்களையும் அங்கே இருந்தவர்கள் கண்டார்கள். பரதன் உடனே கைகூப்பி ராமனை வணங்கினான். அப்பொழுது ராமன் விருப்பப்படி விமானம் கீழே இறங்கி நின்றது. ராமன் பரதனை விமானத்தில் ஏற்றிக்கொண்டான். பரதன் மீண்டும் ராமனைப் பணிந்து வணங்கினான். அவனை எழுப்பி ராமன் மடிமேல் வைத்துக்கொண்டு இறுகத் தழுவிக் கொண்டான். பிறகு பரதன் லட்சுமணனை அணைத்துக்கொண்டான். சீதையை வணங்கினான். சுக்கிரீவன், அங்கதன் முதலியவர்களையும் தழுவிக்கொண்டான். ராமன் சுக்கிரீவனை, "நம் ஐந்தாவது சகோதரன்" என்று கூறிப் பரதனுக்கு அறிமுகப்படுத்தினான். பரதன் விபீஷணனை நோக்கி, உம்முடைய உதவியால் ராமர் பிறரால் செய்ய முடியாத காரியத்தைச் செய்தார்" என்றான். ராமன் தாய்மார்களுக்கும் புரோகிதருக்கும் வணக்கம் செலுத்தினான். பட்டணத்து மக்கள் அனைவரும் ராமனுக்கு அஞ்சலி செய்தார்கள்.

பிறகு பரதன் பாதுகைகளைத் தானே எடுத்து வந்து ராமன் காலில் அணிவித்தான்; கைகூப்பி ராமனிடம், "அரசே, தங்கள் ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டேன். தங்களை மீண்டும் இங்கே பார்த்ததும் என் உள்ளம்

வால்மீகி என்னும் மலையில் பிறந்து ராமக்கடலில் கலப்பது ராமாயணப் பேராறு. வழக்கமாக வெளிவரும் அதன் சுருக்கம் இந்த இதழுடன் முற்றுகிறது

பூரிக்கிறது. பொக்கிஷங்களைப் பாருங்கள். தங்கள் மகிமையினால் எல்லாம் பத்து மடங்கு அதிகமாகும்படி செய்திருக்கிறேன்'' என்றான். வானரங்கள் கண்ணீர் வடித்தன. விபீஷணனும் கண் கலங்கினான். பிறகு ராமன் மடிமேல் பரதனை வைத்துக்கொண்டு விமானத்தை நந்திக் கிராமத்தில் உள்ள பரதனுடைய ஆசிரமத்துக்குப் போகும்படி உத்தரவிட்டான். விமானம் அந்த இடத்தை அடைந்தவுடன் ராமன் எல்லோருடனும் கீழே இறங்கி, குபேரனிடம் அதைத் திரும்பிப் போகும்படி உத்தரவிட்டான். விமானமும் வடதிசையை நோக்கிச் சென்று குபேரன் இருப்பிடம் சென்றது.

ராமன் பிருஹஸ்பதிக்குச் சமமான தன் புரோகிதருக்கு வணங்கி அவரருகில் தேவேந்திரனைப் போல் அமர்ந்தான். பரதன் தலையில் கரங்களைக் குவித்துக்கொண்டு, ''என் தாயைத் திருப்தி செய்துவிட்டேன். எனக்குத் தாங்கள் கொடுத்த ராஜ்யத்தை இதோ அப்படியே திருப்பிக் கொடுக்கிறேன். பலமுடைய எருது தாங்கக்கூடிய பாரத்தைச் சிறு பெண் குதிரை தாங்க முடியுமா? அதனால் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு எங்களைக் காப்பாற்றுங்கள். உலகத்தார் தங்கள் பட்டாபிஷேக வைபவத்தைப் பார்த்து மகிழவேண்டும்'' என்றான்.

ராமன், ''அப்படியே ஆகட்டும்'' என்று சம்மதித்தான். பரதன், லட்சுமணன், சுக்கிரீவன், விபீஷணன் முதலியோர் ஸ்நானம் செய்த பிறகு ராமனும் தன் ஜடையை அவிழ்த்துவிட்டுக் குளித்தான்.

பிறகு சிறந்த ஆடையையும் அணிகளையும் அணிந்து விளங்கினான். லட்சுமணனும் சிறந்த சோபையுடன் விளங்கினான். தசரதன் மனைவிமார் அனைவரும் சீதையை அழகாக அலங்கரித்தார்கள்.

சூரிய மண்டலம்போல் துலங்கும் தேரில் ராமன் ஏறிக்கொண்டான். சுக்கிரீவனும் ஹநுமானும் குளித்துச் சிறந்த ஆடை அணிந்து சென்றார்கள். சுக்கிரீவன் மனைவிமார்களும் சீதையும் அயோத்தியைக் காண மிகுந்த ஆவலுடன் அவர்களோடு கூடவே சென்றார்கள்.

அசோகன் முதலிய மந்திரிகள் முன்னதாகவே அயோத்தியில் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யத் தொடங்கினார்கள்.

ராமன் ஏறிய தேரின் கடிவாளத்தைப் பரதன் பிடித்துக்கொண்டான். சத்துருக்கினன் ராமனுக்குக் குடை பிடித்தான். லட்சுமணன் ஒரு சாமரத்தை ராமன் தலைக்கு நேராக வீச, விபீஷணன் சந்திரன் போன்ற மற்றொரு சாமரத்தை எடுத்து வீசலானான். ஆகாயத்தில் முனிவர்களும் தேவரும் ராமனைப் புகழ்ந்து போற்றினார்கள். அது ராமன் காதில் விழுந்தது. சத்ருஞ்ஜயம் என்ற யானையின் பேரில் சுக்கிரீவன் ஏறிக்கொண்டான். மற்ற வானரங்கள் மனித வடிவம் தரித்துப் பலவிதமாக அலங்கரித்துக்கொண்டு யானைகளில் ஏறிச் சென்றன. ராமன் சங்கொலியோடும் துந்துபி வாத்திய கோஷத்தோடும் பெரிய உப்பரிகைகள் நிறைந்த அந்த நகரில் நுழைந்தான். குங்குமம் தடவிய அட்சதையை எடுத்துக்கொண்டு பசுக்களுடன் பெண்களும் அந்தணர்களும் இன்னும் பலரும் ராமனுக்கு முன் சென்றார்கள். ராமன் மந்திரிகளிடம் சுக்கிரீவனின் நட்புக் கிடைத்த விவரத்தையும் ஹநுமானின் வீரத்தையும் விபீஷணன் அங்கே வர நேர்ந்ததையும் பற்றிக் கூறினான். அதைக் கேட்டு அயோத்தி மக்கள் அனைவரும் ஆச்சரியமுற்றார்கள். ராமனுடைய வருகையை உணர்ந்து மக்கள் வீடுகளில் கொடிகளை உயரப் பறக்கவிட்டார்கள். மகிழ்ச்சியும் செல்வமும் மிக்க மக்கள் நிறைந்த அயோத்தியின் நடுவே ராமன் தன் தந்தையின் அரண்மனையை அடைந்தான். பிறகு பரதனை நோக்கி அன்புடன் பேசலானான்:

"அந்தப்புரம் சென்று கௌசல்யை, சுமித்திரை, கைகேயி மூவருக்கும் வணங்கு. முத்து, வைடூரியங்கள் இழைத்த என் வீட்டைச் சுக்கிரீவனுக்குக் கொடு" என்றான். பரதன் சுக்கிரீவனைக் கையோடு அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். பிறகு சுக்கிரீவனிடம் ராம பட்டாபிஷேகத்துக்காகத் தூதர்களை அனுப்பும்படி வேண்டினான். உடனே சுக்கிரீவன் ஜாம்பவான், சுஷேணன் முதலிய வானரங்களைக் கூப்பிட்டு நான்கு தங்கக் குடங்களைக் கொடுத்து, நான்கு சமுத்திரங்களிலிருந்தும் நதிகளிலிருந்தும் புண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் நீரை எடுத்துக் கொண்டு வந்து எதிர்பார்த்திருக்க வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

அவை மறுநாள் காலையில் அதே மாதிரி ஏற்பாடுகள் செய்து முடித்ததும் சத்துருக்கினன் மந்திரி

களுடன் சென்று புரோகிதர்களுக்கும் நண்பர்களுக்கும் அதைத் தெரிவித்தான்.

பிறகு வசிஷ்டர் அந்தணர்களுடன் வந்து ராமனைச் சீதையோடு சிம்மாசனத்தில் அமரச் செய்தார். வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், காத்தியாயனர் முதலிய முனிவர்கள் வாசனை நீரால் ராமனுக்கு அபிஷேகம் செய்து வைத்தார்கள். தேவர்களும் லோகபாலர்களும் ஆகாயத்தில் இருந்துகொண்டு அபிஷேகம் செய்தார்கள். பிறகு பிரம்மதேவன் செய்து மநுவுக்கு அளித்து, இட்சுவாகு வம்சத்து அரசர் தரித்து வந்த கிரீடத்தை வசிஷ்டர் ராமனுக்கு அணிவித்தார். சத்துருக்கினன் ராமனுக்கு வெண் கொற்றக் குடை பிடித்தான். சுக்கிரீவனும் விபீஷணனும் இருபுறமும் வெண்சாமரம் வீசினார்கள். இந்திரன் கொடுத்தனுப்பிய முத்து மாலையை வாயு பகவான் ராமனிடம் கொடுத்தார். தேவர், கந்தர்வர் அனைவரும் பாடினார்கள். அப்சரசுகள் நர்த்தனம் செய்தார்கள். ராம பட்டாபிஷேகத்தினால் பூமியில் செடி கொடிகள் செழித்துச் சோபையுடன் விளங்கின. மரங்கள் கனிகள் நிறைந்திருந்தன. மலர்களில் மணம் கமழ்ந்தது.

ராமன் ஆயிரம் குதிரைகளையும் பசுக்களையும் எருதுகளையும் முப்பது கோடி தங்கம், சிறந்த ஆபரணங்கள், விலை உயர்ந்த வஸ்திரங்கள் இவற்றையும் அந்தணர்களுக்கு வழங்கினான். சூரிய கிரணங்கள் போல் ஒளிரும் ரத்தினம் இழைத்த தங்க மாலை ஒன்றை ராமன் சுக்கிரீவனுக்கு அளித்தான். வைடூரியம் இழைத்த இரு தோள் வளைகளை அங்கதனுக்குக் கொடுத்தான். சீதைக்குச் சிறந்த ரத்தினங்களை இழைத்த முத்து மாலையைக் கொடுத்தான். தேவர்களுக்கு ஏற்ற தூய ஆடைகளையும் நல்ல அணிகளையும் சீதை ராமனின் அநுமதியோடு ஹநுமானுக்கு அளித்தாள். ஹாரத்தைக் கழற்றி வைத்துக்கொண்டு கணவனையும் வானரங்களையும் அடிக்கடி பார்த்தாள். அவளுடைய கருத்தை உணர்ந்த ராமன், "சீதே, உனக்கு யாருக்குக் கொடுக்க விருப்பமோ அவனுக்கு இந்த முத்து மாலையைக் கொடு. எப்பொழுதும் தைரியமும் புகழும் வணக்கமும் நீதியும் பராக்கிரமமும் புத்தியும் உள்ளவனுக்கு இந்த மாலையைக் கொடுக்கலாம்" என்றான். சீதை உடனே மகிழ்ச்சியோடு அந்த மாலையை ஹநுமானுக்குக் கொடுத்தாள். பிறகு ராமன் விபீஷணன் முதலிய ராட்சசர்களுக்கும் மைந்தன், துவிவிதன் போன்ற வானரங்களுக்கும் தகுந்தபடி சம்மானம் செய்து உபசரித்தான். எல்லோரும் மகிழ்ச்சியோடு தம் தம் இருப்பிடம் திரும்பிச் சென்றார்கள்.

ராமன் ராஜ்யத்தை முழுவதும் குறைவின்றி ஆண்டுகொண்டு வந்தான். அப்பொழுது லட்சுமணனை நோக்கி, "லட்சுமணா, நீ தர்மம் அறிந்தவன். நீ என்னுடன் இந்தப் பூமியை ஆளுவாயாக. உன்னை இளவரசுப்பட்டத்தில் அபிஷேகம் செய்துவிடுகிறேன்" என்றான். ஆனால் லட்சுமணன் அதை ஏற்கவில்லை. பிறகு பரதனை இளவரசுப் பட்டத்தில் ராமன் அபிஷேகம் செய்தான்.

ராமன் பௌண்டரீகம், அசுவமேதம், வாஜபேயம் முதலிய

யாகங்களைச் செய்துகொண்டு பல பல ஆண்டுகள் அரசு செலுத்தினான். ராமன் ராஜ்யத்தை ஆளும்போது பெண்கள் கணவனை இழந்து வருந்தவில்லை. ஊரில் திருட்டு நடக்கவில்லை. ஒருவருக்கும் கெடுதல் நேரவில்லை. வயதில் பெரியோர் சிறியோருக்கு ஈமச் சடங்குகளைச் செய்யவில்லை. அனைவரும் மகிழ்ச்சியோடு அறத்தில் ஈடுபட்டிருந்தார்கள். மக்கள், ராமனைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். உலகமே ராமமயமாக இருந்தது.

வால்மீகி எழுதிய ஆதிகாவியமும் எல்லா நன்மையைக் கொடுப்பதுமான இந்த ராமாயணத்தைப் படிப்பவர்கள், கேட்பவர்கள் அனைவர் விருப்பமும் முழுவதும் நிறைவேறும். ராமாயணத்தை எப்பொழுதும் படிப்பவருக்குப் பகவான் விஷ்ணு அருள் புரிவார். அந்த நாராயணர்தானே, ராமனாக அவதரித்தார்? ராமாயணத்தைக் கேட்பதால் பிதருக்களும் தேவரும் திருப்தி அடைவார்கள். இதைப் பக்தியோடு எழுதச் செய்பவரும் தேவலோகத்தில் இடம் பெறுவார்.

அவனுந்தான் அப்படியிருந்தான்

ஒரு ஃபில்ம் ஸ்டுடியோவில் எக்ஸ்ட்ரா நடிகனை ஒரு வாலிபனைப் போட்டிருந்தார்கள். அவன் சற்றுப் பயங்கொள்ளி. ஒரு சிங்கத்தோடு சற்று நேரம் அவனைப் படுத்திருக்கச் சொன்னார்கள்.

"நான் மாட்டேன். எனக்கு இந்த நடிப்பு உத்தியோகமே வேண்டாம். இதோ போகிறேன்" என்று சொல்லி அவன் கிளம்பினான்.

"இல்லை, அப்பா. இந்தச் சிங்கம் சாது. உன்னை ஒன்றும் செய்யாது. இது மாமிசத்தைத் தொட்டதேயில்லை; பால் குடித்தே வளர்ந்தது" என்றார் டைரெக்டர்.

"அதெல்லாம் சரிதான். நானும் பால் குடித்தே தான் வளர்ந்தேன். இப்போது மாமிசம் சாப்பிடுகிறேன். முடியாது, ஸார்; முடியாது" என்று சொல்லிக்கொண்டே நடிகன் வெளியேறி விட்டான்.

—டேவிட் டன்னி

க்விஸ்

1. "1900-ஆம் வருஷம் ஜனவரி மாதம், அதாவது இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ....." என்று ஒரு புத்தகத்தில் போட்டிருக்கிறது. இது சரியா?

2. காப்டன், கர்னல் இவருள் எவர் உயர்ந்தவர்?

3 பம்பாய், சென்னை, கல்கத்தா, டில்லி இவற்றின் மொத்த ஜனத் தொகையை விடக் குறைவான ஜனங்களே வசிக்கும் கண்டம் எது?

4. தம் பிறந்த நாளிலேயே இறந்த மகா கவி யார்?

5. டாக்டர் எஸ். ரங்காசாரி, ஸர் சங்கரன் நாயர், ஜஸ்டிஸ் குமாரஸ்வாமி சாஸ்திரியார் இந்த மூவரும் ஒரே நாளில் ஒரு காரியம் செய்து எல்லோரையும் திடுக்கிட வைத்தார்கள். அது என்ன?

6 டெஹ்ரான், வார்ஸா, மாட்ரிட், பாங்காக், அடிஸ் அபாபா-இவை எந்த எந்த நாட்டின் தலைநகரங்கள்?

7. இந்தியாவில் முதல் சர்வகலாசாலை எங்கே, எப்பொழுது தோன்றியது?

8. உலகத்திலேயே மிகவும் பெரிய ஏரி எது?

9. ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளை என்பவர். எந்தத் தமிழ் நாவலில் வருகிறார்?

10. டில்லியைப் புராண காலத்திலும் சரித்திர காலத்திலும் அரசாண்ட குருட்டு அரசர்கள் யார்?

11. பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கு எத்தனை குமாரர்கள்?

12. மகாத்மா காந்தி, ஜூலியஸ் ஸீஸர், ஆப்ரஹாம் லிங்கன், லியாகத் அலிகான் இவர்களைப்பற்றிய பொதுவான ஒரு விஷயம் என்ன?

13. "இரவு மணி பன்னிரண்டு. மேற்கு வானில் குரு அஸ்தமித்துக் கொண்டிருந்தது. கிழக்கு வானில் வெள்ளி எழுந்து கொண்டிருந்தது"- இந்த வர்ணனை சரியா?

14. ஒரு காலணாக் காசை எடுக்கிறீர்கள். (ஓட்டையில்லாத காலணா). படத்தில் உள்ளதுபோல் ஒரு கைக்

குட்டையில் அந்தக் காசைக் கெட்டியாக பிடித்துக்கொள்ளுகிறீர்கள். பற்ற வைத்த ஸிகரெட் தணலை அதில் அழுத்துகிறீர்கள். இப்போது கைக்குட்டையில் ஓட்டை விழுமா, விழாதா? ஏன்?

[விடை 22-ஆம் பக்கத்தில்]

பாங்கியிலே கொள்ளை கொள்ளையாகத் தங்கள் பணம் இருந்தும் அறியாதவர் பலர்!

கேட்பாரற்ற பணம்

டபிள்யு. ஜே. ராஸ்

பிரிட்டனில் நூற்றுக்கணக்கான மக்களுக்கு, பாங்கியில் தங்களுக்குச் சேரவேண்டிய எவ்வளவோ பணம் குவிந்து கிடக்கிறது என்ற விஷயம் தெரியாது. அநேகம் பேர் அந்தப் பணத்தைக் கொண்டு குடும்பக் கஷ்டத்தையெல்லாம் போக்கிக்கொள்ளலாம் என்றால் பாருங்கள்! ஆனால் பாவம், அந்தப் பணம் நியாயமாகத் தங்களைச் சேர வேண்டியது என்று அவர்களுக்குத் துளிக்கூடத் தெரியாது.

உலக பாங்கிகளில், அதுவும் இங்கிலீஷ் மொழி வழங்கும் நாடுகளில், இப்படிச் சுமார் பத்துக் கோடி பவுன் கேட்பாரற்றுக் கிடக்கிறது. இது பாங்கிக்குச் சொந்தமாகாது. இப்படித் தங்கள் பணம் இங்கே தேங்கிக் கிடக்கிற தென்பது உரியவர்களுக்குத் தெரிந்தால் தானே! ஏன், அநேகம் பேர் இதைப்பற்றி மறந்து கூடப் போய்விட்டார்கள். பாங்கி நிர்வாகிகள் பத்திரிகைகளில், இன்ன இன்னார் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று விளம்பரம் செய்து பார்த்தும் ஒரு பலனும் ஏற்படவில்லை. இப்படிக் குவிந்து கிடக்கும் தொகையில் பத்தில் ஒரு பங்குக்காவது வழி பிறக்குமா, உரியவர்கள் அதைப் பெற்றுக் கொள்வார்களா என்றால், அது கூடச் சந்தேகந்தான்.

1700-இல் இப்படி 3,000 பவுனுக்குமேல் கேட்பாரற்றுக் கிடந்தது. அதற்கு 50 வருஷங்களுக்குப் பிறகு 2,90,000 பவுனாக இது பெருகிவிட்டது. 1790-இல் இதுவே 5,40,000 பவுனாகப் பெருகிவிட்டது. அப்போது பிரிட்டிஷ் பொக்கிஷ அதிகாரியாக இருந்த மிஸ்டர் பிட் இதை அரசாங்கச் செலவுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்தார். பார்லிமெண்ட் அங்கத்தினர்களான பர்க், ஃபாக்ஸ் என்பவர்களும் இங்கிலாந்து பாங்கியின் டைரக்டரும் இதை எதிர்த்தார்கள். ஆயினும் பெரும்பான்மையோர் பிட் சொன்ன யோசனையை ஆதரித்ததால் பார்லிமெண்டில் இது நிறைவேறிற்று.

அதற்குப் பிறகும் இந்தமாதிரி கேட்பாரற்ற தொகை பாங்கியில் வருஷத்துக்கு வருஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1815-இல் 1,297,740 பவுன் இப்படிக் குவிந்து கிடந்தது. 1920-இல் இது பற்றிப் பிரிட்டிஷ் சர்க்கார் ஆராய்ந்த போது பாங்கி நிர்வாகிகள்

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகா (ஆங்கிலம்: 4-1-'53), கல்கத்தா.

1914-வரை மொத்தம் சுமார் 8,00,000 பவுன் இப்படிக் கிடப்பதாகத் தெரிவித்தார்கள். முதல் உலக மகா யுத்தத்தின் போது இந்தத் தொகை பின்னும் அதிகரித்துவிட்டது பாங்கியில் பணம் போட்டு வைத்திருந்த பலர் யுத்தத்தில் இறந்து போய்விட்டார்கள்; இந்தப் பணத்தைக் கேட்பார் இல்லை; இந்தத் தொகை ஏராளமாகக் குவிந்துவிட்டது.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்த பிறகும் இதே நிலை ஏற்பட்டு இந்தத் தொகை மேலும் பெருகியது இப்போதுபிரிட்டிஷ் பாங்கி நிர்வாகிகள், யுத்தத்தில் மாண்ட பல பேருடைய உற்றார் உறவினர் எங்கே வசிக்கிறார்கள் என்று விசாரித்தறிந்து வருகிறார்கள். இருந்தாலும் இன்னும் சரியானபடி தகவல் கிடைக்காததால் இதில் சுமார் பாதி அளவுதான் பாங்கியிலிருந்து தரவேண்டியிருக்கும்.

பிரிட்டிஷ் கப்பற்படை அக்கவுண்டண்ட்-ஜெனரலிடம் மட்டுமே ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இப்படிக் குவிந்த தொகை சுமார் 3,00,000 பவுனுக்கு இருக்கிறது: சிற்சில ராணுவ வீரர் பெயரில் தலைக்கு 300 பவுனுக்கு மேல்கூடத் தொகை இப்படிக் கேட்பாரற்று இருக்கிறது என்றால் பாருங்கள்!

நெப்போலியன் காலத்தில் நடந்த யுத்தத்தில் மாண்டவர்களின் சந்ததியார்கூடத் தக்க அத்தாட்சிகளைக் காட்டி நிரூபித்தால் தங்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டு போகலாம். சட்டப்படி உள்ள இந்த உரிமைபற்றிப் பொதுவாக எல்லாருக்கும் தெரிந்திருக்காது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பல ராணுவ வீரர்களுக்குத் தரவேண்டிய 'கிராச்சுவிட்டி' தொகை கேட்பாரற்றுக்கிடக்கிறது. யுத்த ஆரம்பத்தில் உடல்நிலை சரியாக இராததால் ராணுவத்திலிருந்து நீக்கப்பட்ட பல பேருக்கு, இப்படித் தமக்குச் சேரவேண்டிய தொகை ஒன்று இருக்கிறது என்றுகூடத் தெரியாது.

பாங்கிகளில் மட்டுமன்றித் தேசீயக் கடன் கமிஷனர் என்ற அதிகாரியிடமும் கேட்பாரற்று இப்படிச் சுமார் நாற்பதுலட்சம் பவுனும், தான தர்மக் கமிஷன் அதிகாரிகளிடம் இதைவிட ஏராளமான தொகையும் குவிந்து கிடக்கின்றன.

இருபது வருஷங்களுக்கு முன் லண்டனில் நடந்த ஒரு வழக்கில் ஓர் ஆசாமிக்கு 500 பவுன் நஷ்ட ஈடாகத் தரும்படி உத்தரவாயிற்று. இன்னும் அந்த ஆசாமி இந்தத் தொகையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வரவில்லை.

எத்தனையோ பேர் பாங்கியில் பணம் கட்டிவிட்டு உடனே மறந்து விடுகிறார்களென்றால் நம்ப முடிகிறதா? ஆனால் உண்மையாகவே அப்படி நடக்கிறது. அவர்கள் முதலில் கொடுத்த விலாசத்துக்கு எழுதி விசாரித்ததில் ஏதோ சில பேர் தான் அந்தப் பணத்தை வாங்கிக்கொள்ள முன் வந்தார்கள். பாங்கி 'டிவிடெண்ட்' தொகையும் இப்படிக் கேட்பாரற்றுக்

கிடக்கிறது. சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து பாங்கி நிர்வாகிகள் பாங்கியில் பணம் போட்ட சுமார் 60 000 பேருக்கு இதைப்பற்றிக் கடிதம் எழுதித் தெரிவித்தார்கள். சுமார் 12 000 கடிதங்கள் விலாசம் தெரியாமல் திரும்பி வந்துவிட்டன.

அமெரிக்காவில் பல மாகாணங்களில் இப்படிக் கேட்பாரற்றுக் கிடக்கும் தொகையைப் பள்ளிக்கூடப் பொது நிதியில் சேர்த்து விடுகிறார்கள். மற்ற மாகாணங்கள் சிலவற்றில் ஐந்து வருஷம்வரையில் கேட்காமல் இருந்தால் பணம் அரசாங்கத்தைச் சேர்ந்துவிடும்; அதிகப் பட்சம் 30 வருஷத்துக்கு மேல் எந்த மாகாணத்திலும் இப்படிப் பணம் தேங்கிக் கிடந்ததில்லை. என்றாலும் உள்ளூர்ப் பத்திரிகைகளில் எல்லாம் நன்றாக விளம்பரம் செய்த பிறகுதான் இப்படி அரசாங்கம் அதை எடுத்துக்கொள்கிறது.

ஆனால் பிரிட்டனில் அந்த மாதிரி ஒரு சட்டமும் இதுவரை ஏற்படுத்தவில்லை; ஆகவே, இந்த மாதிரி தொகை குவிந்து கொண்டே வருகிறது.

க்விஸ் விடை

(1) தப்பு. 1900 என்னும் வருஷம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வருஷம். 1901-ஆம் வருஷம்தான் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப வருஷம். (2) 'கர்னல்' பதவிதான் உயர்ந்தது. (3) ஆஸ்திரேலியா. (4) ஷேக்ஸ்பியர். (23-4-1564—23-4-1616) (5) இந்த மூன்று பிரமுகர்களும் 24-4-1934 அன்று சென்னையில் மரணமடைந்தார்கள். (6) முறையே பெர்ஷியா, போலந்து, ஸ்பெயின், தாய்லாந்து, அபிஸீனியா என்னும் நாடுகளின் தலைநகரங்கள். (7) மதராஸில் 1852-ஆம் வருஷத்தில். (8) காஸ்பியன். (9) கமலாம்பாள் சரித்திரத்தில். (10) புராணகாலத்தில் திருதராஷ்டிரனும், சரித்திர காலத்தில் பகதூர் ஷாவும். (11) அவருக்குக் குமாரர்களே இல்லை. (12) இந்த நால்வரும் கொலை செய்யப் பெற்று உயிரிழந்தார்கள். (13) இரவு பன்னிரண்டு மணிக்கு வியாழன் அஸ்தமிக்கலாம். சரி. ஆனால் நடு இரவில் வெள்ளி உதயமாகாது. விடியற்காலையில், மூன்று மணிக்குப் பிறகுதான் உதயமாகும். ஆகையால் வர்ணனையின் பின்பகுதி தவறு. (14) விழாது. துணியைவிட உலோகத்தில் சூடு சீக்கிரமாகப் பாயும். அதாவது உலோகம் சூட்டுக்கு நல்ல 'கண்டக்டர்'. துணி தனியாயிருந்தால், கருகிவிடும். உலோகத்தோடு ஒட்டியிருப்பதால், துணி சூட்டை வாங்கிக்கொள்ளுகிறது.

வைத்தியப் புதுமைகள்

★

வைத்திய சாஸ்திரத்தில் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. புதிது புதிதாகப் பல விஷயங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளில் எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டிய சுவாரஸ்யமான சில தகவல்களின் திரட்டு இது.

கொரியாவில் யுத்தம் செய்யும் ஸோல்ஜர்களில் சிலர் காயம் அடைந்து கட்டை விரலை இழந்து விடுகிறார்கள். கட்டை விரல் போனால், அப்புறம் எப்படி ஆயுதத்தைப் பிடித்து உபயோகிக்க முடியும்? அவர்களுடைய ஆள் காட்டி விரலையே கட்டை விரலாக மாற்றிவிடத் தக்க நூதன முறை ஒன்றை அமெரிக்காவில் உள்ள வாலி ஃபோர்ஜ் ராணுவ ஆஸ்பத்திரியில் கை ஆபரேஷன் டாக்டர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

ஆள்காட்டி விரலை நறுக்கிக் கட்டை விரல் ஸ்தானத்தில் பொருத்தி விட்டால், அது மற்ற விரல்களுக்கு எதிராக வேலை செய்து பழகுகிறதாம். இப்படியே பலநாள் வரைக்கும் பழகினால், பிறகு அந்த ஆள் காட்டி விரல், தானே கட்டை தட்டித் தட்டையாகி விடுகிறதாம்.

* *

நாற்பத்தைந்து வயதானதும் படிக்குப் பாதிப் பேருக்கு, ஒன்று அவர்கள் பல் அத்தனையும் விழுந்து விடுகின்றனவாம்; அல்லது அவைகளை நோயாவது பிடித்து விடுகிறதாம்.

சிக்காகோ நகரப் பல்வைத்திய ஆராய்ச்சி நிலைய டாக்டர் சார்லஸ் எம். பெல்டிங், இல்லிநாய்ஸ் யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்த டாக்டர்கள் மாரி,

மாஸ்லர், ஐஸாக் சூர் என்ற மூவரும் 5 144 பேரை ஆராய்ந்ததிலிருந்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். 20 வயது முதல் 80 வயது வரைக்கும் உள்ள பல வயது மனிதர்களை அவர்கள் ஆராய்ந்தார்கள்.

பல்லுக்கு 'ஆர்த்ரைட்டிஸ்' என்ற ஒருவித மூட்டு வீக்கம் ஏற்பட்டால், அதைக் குணப்படுத்துவதற்காகச் சகல பற்களையும் பிடுங்கி விடுகிறார்களாம் சில டாக்டர்கள். நல்ல பற்களையுங்கூட இப்படிப் பிடுங்குவது தவறு என்று

மேலே குறிப்பிட்ட ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டிக்கிருர்கள்.

* *

நாம் சுவாசிக்கும் ஆகாயத்தில் நம்மைத் தூங்க வைக்கக் கூடிய குணம் ஒன்று இருக்கிறதாம். ஆனுல், மயக்க மருந்துகளுக்கு இருக்கும் சில கெட்ட குணங்கள் அதில் இல்லையாம்.

'க்ஸெனுன்' (Xenon) என்ற ஒருவித வாயு மிகச் சிறிய அளவில் ஆகாயத்தில் இருக்கிறது. காற்றிலிருந்து பிராணவாயு, நைட்ரஜன் இரண்டையும்

தனித்தனியே வியாபாரத்துக்காகப் பிரித்தெடுக்கும்போது கிடைக்கும் இடை விளைவு (பை-ப்ராடக்ட்) க்ஸெனுன்.

மற்ற மயக்க மருந்துகளைப் போல இந்த 'க்ஸெனுன்' என்ற வாயு, தீப்பற்றி வெடிப்பதில்லை; மூளைக்குக் கெடுதி செய்வதில்லை. "பிராண வாயுவோடு ஐந்தில் ஒரு பங்கு க்ஸெனுனைக் கலந்து மயக்கமருந்தாகக் கொடுத்து, பல ஆண் பெண்களுக்கு இடுப்பு (பெல்விஸ்) ஆபரேஷன் சௌகரியமாய்ச் செய்ய முடிந்தது" என்று ஸ்டூவர்ட் கல்லன், சார்லஸ் பி. பிட்டிங்கர் என்ற இரண்டு அயோவா நகர டாக்டர்கள் சொல்லுகிருர்கள்.

ஆனுல், இந்தப் புதிய மயக்க மருந்தை எடுப்பதற்கு ஏராளமாகச் செலவாகிறதாம். இதை மலிவாகத் தயாரிக்கக் கூடிய முறை ஒன்றைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் சகஜமாக எல்லாருக்கும் இதை உபயோகிப்பது சாத்தியம் இல்லையாம்.

* * *

நீண்ட ஆயுளோடு வாழ்வதற்கு முக்கியமாக வேண்டிய ஒரு காரியம் நன்ருய்த் தூங்குவதுதான் என்கிருர் ந்யூ யார்க் நகர டாக்டர் ஹாரி ஜே. ஜான்ஸன் என்பவர்.

எழுபது முதல் தொண்ணூறு வரைக்கும் பல தர வயதுள்ள ஆயிரக்கணக்கான ஆண் பெண்களை அவர் விசாரித்து அவர்கள் எப்படி வாழ்கிருர்கள் என்பதை ஆராய்ந்தார்.

"அத்தனை பேருக்கும் பொதுவான ஒரு வழக்கம் இருந்தது. அது தூக்கந்தான். சிலர் மது பானம் செய்பவர்; மற்றவர் செய்யாதவர். சிலர் புகை குடிப்பவர்; மற்றவர் குடியாதவர். சிலர் கடின உழைப்பாளிகள்; மற்றவர் சுகவாசிகள். ஆனுல், அத்தனை பேரும் நன்ருய்த் தூங்க மட்டும் தவறுவதில்லை. வாலிப வயதில், ஒவ்வொரு நாளும் ஒழுங்காக, குறிப்பிட்ட நேரத்தில் தூங்குவதும் ஓய்வெடுத்துக்கொள்வதுமே முக்கியம். ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு நடந்தால், மனித சரீரம்

கெடாதிருக்கும்'' என்று அந்த டாக்டர் சொல்லுகிறார்.

* *

குரங்கிலிருந்தே மனிதன் வந்தான் என்கிறார்களே, அது இன்று நேற்று நடந்த சங்கதி அல்ல. பத்து லட்சம் வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அப்போதுதான் முதல் முதலாக மனிதன் தவழ்வதை விட்டு நிமிர்ந்து நின்று இரண்டே காலால் நடக்கத் தொடங்கினானாம். இதை அவனுக்குப் பெரிய லாபம் என்று சொல்லுவதற்கில்லையாம். இல்லினாய்ஸ் நகர நிபுணர் ஸி. வெண்ட்ரம் என்பவர், இந்த மாறுதலால் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள சில நஷ்டங்களை விளக்கியிருக்கிறார். ஒரு மனிதன் படுத்துக்கொண்டேயிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அவனுடைய ரத்தச் சுழற்சி உறுப்புக்களில் சிறிது கோளாறு இருந்தாலும் போதும்; அவன் சட்டென்று எழுந்து தலையை நிமிர்த்திக் கொள்ளும்போது, மூளைக்கு ரத்தம் ஏறாதாம். உடனே அவனுக்கு மயக்கம் நேர்ந்து விடுமாம். தலைக்குச் செல்லும் ரத்தத்தைத் திரும்பக் கீழே இறங்கி விடாதபடி தடுக்கத் தக்க 'வால்வு' (ஒருவழிக் கதவு) எதுவும் கழுத்துக் குழாயில் இல்லையாம். வேறு சில ரத்தக் குழாய்களும், மனிதன் நிமிர்ந்து நடப்பதற்கு உகந்தவாறு இல்லையாம். மனிதனின் குடலோ நாலு கால் பிராணிகளுக்கு ஏற்றபடியே அமைந்திருக்கிறதாம். நாலுகால் பிராணி நடக்கும்போது, தூளி போல வயிற்றுக்குள் சுகமாகத் தொங்குவதற்குரியது குடல். மனிதன் நிமிர்ந்து இரண்டு காலில் நிற்பதால், ஆதாரமற்றுக் குடல் சரிந்து கிடக்கிறதாம். பிரசவத்தில் பெண்களுக்கு நேரும் சில சிரமங்களுக்குக் காரணம் இடை எலும்புக்கூடு (பெல்விஸ்) சரியாக வளர்ச்சி அடையாதிருப்பதே. நிமிர்ந்து நிற்பதால் குடல் பாரம் தாங்காமல் அந்த எலும்புகள் முறுக்கிக் கொள்வதனால்தான் வளராமல் போகின்றன என்கிறார் டாக்டர் வெண்ட்ரம். முதுகெலும்பு நிலைப்படாததால் முதுகு வலி, சளி சரியாக வெளிப்படாமல் நாசித்துவாரத்துக்குத் தீங்கு, தலைவலி இப்படிப் பல நோய்கள் மனிதனை வாட்டுகின்றனவே; இவை அவன் நிமிர்ந்து இரண்டு காலால் நடப்பதனாலேயே விளைகின்றனவாம்.

ஆனால், மனிதன் நிமிர்ந்து நடக்கத் தொடங்கிப் பத்து லட்சம் வருஷந்தானே ஆகிறது; புதிய பழக்கம் இல்லையா? பரிணாமப் படியில் மனிதன் இன்னும் குழந்தைப் பருவத்திலேதான் இருக்கிறான். இன்னும் ஓராயிரம் பத்துலட்சம் வருஷங்கள் இப்படியே நிமிர்ந்து நடந்து அவன் பழகிக் கொண்டே இருந்துவிட்டால், இந்தக் கோளாறெல்லாம் நீங்கி விடுமாம்; ஆகவே, மனிதன் கவலைப்பட வேண்டியதில்லை.

பல சரக்கு

★

எங்கேயோ போய்க்கொண்டிருந்தார் ஒருவர் தம் ஸைக்கிளில். திடீரென்று டயரில் ஏதோ குத்திப் 'பஞ்சர்' ஆகி விட்டது. கீழே இறங்கினர். 'டியூ'பை அகற்றினர். காய்ந்து போன புல்லை டயரில் வைத்து அடைத்தார். ஸைக்கிள் மீது மீண்டும் ஏறி, விட்டுக்கொண்டு போய்ச் சேர்ந்தார். இது இங்கிலாந்தில் நடந்த ஒரு சம்பவம். "இந்த மாதிரி சமயோசித 'ரிபேர்'கள் இன்னும் பலவற்றை அவரவரே கண்டு பிடிக்க முடியும். உதாரணமாக, ஸைக்கிளையே எடுத்துக் கொள்ளலாம். டயரில் சிறு 'பஞ்சர்' என்றால், தபால் தலையை வைத்து அதில் ஒட்டி விடலாம்; செயின் அறுந்தால் தாற்காலிகமாகக் கெட்டிமுள் ஒன்றையோ ஓர் ஆணியையோ கொண்டு பொருத்திக் கொள்ளலாம்" என்று ஒருவர் யோசனை சொல்கிறார்.

* *

ஜெர்மனியில ஹாம்பர்க் நகரத் தபாலாபீஸில் பொது ஜனங்களின் உபயோகத்துக்காக ஒரு ஜோடி டைப்ரைட்டர் வைத்திருக்கிறார்கள். பக்கத்தில் உள்ள ஸ்லாட் மெஷினில் ஒரு நிக்கல் காசை யார் போட்டாலும் சரி, டைப்ரைட்டர் திறந்துகொள்ளும். சில நிமிஷ நேரம் வரை அதில் டைப் அடித்துக்கொள்ளலாம். பிறகு அது மூடிக்கொண்டு விடும். அந்த இரண்டு டைப்ரைட்டர்களையும் இப்படி உபயோகிப்பதற்காக இரண்டு பெரிய 'க்யூ' வரிசைகள் எந்நேரமும் அணி வகுத்து நின்றுகொண்டிருப்பது தான் விநோதம்.

* *

ஸ்பெயின் நாட்டில் ரஸ்தாக்களில் குறுக்கே செல்வதற்கென்று குறிக்காத இடங்களில் யாராவது நடந்தால், போலீஸ்காரர் உடனே பிடித்துக்கொள்கிறார்கள்; பிடித்த இடத்திலேயே அபராதமும் போட்டு விடுகிறார்கள். இதனால், அங்கே இப்போது ரஸ்தா விபத்துக்கள் மிகவும் குறைந்திருக்கின்றனவாம்; வண்டிப போக்குவரத்துக்களும் சௌகரியமாக நடக்கின்றனவாம்.

* *

ரோமையில் ஈஸ்ட்போர்ன் என்னும் இடத்தில் பல ஆமைகளைக் கை வண்டி ஒன்றில வைத்துக் கொண்டு ஓர் ஆள் விற்பனை செய்துகொண்டிருந்தான்.

மாண்டேகு நாதன் என்ற கனவான் அங்கே வந்தார். "இந்த ஆமைகளை ஜனங்கள் எதற்காக வாங்குகிறார்கள்?" என்று வண்டிக்காரனைக் கேட்டார். "தோட்டத்தில் அட்டூழியம் செய்யும் வண்டுகளைப் பிடித்து இவை தின்றுவிடும் என்பதற்காக" என்றான் அவன். "ஆமை முற்றும் தாவர போஜனமே செய்யும் பிராணி என்பது உனக்குத் தெரியாதா?" என்று விசாரித்தார் கனவான். "நன்

றாய்த் தெரியும். ஆனால், வாங்குகிறவர்களுக்குத் தெரியாது, ஸார்" என்று நிம்மதியாகப் பதிலளித்தான் அந்த ஆள்.

* *

அமெரிக்கக் கடைகளில் பெரும்பாலானவை ஒரு நல்ல வழக்கம் வைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளில் வாங்கிய எந்தச் சாமானையும், வாங்கியவருக்குப் பிடிக்காவிட்டால் திருப்பிக் கொடுத்துவிடலாம், அந்தக் கடைக்காரர்கள் ஒரு வார்த்தையும் மாறு சொல்லாமல் வாங்கிக்கொண்டு பணத்தை வாபஸ் செய்துவிடுகிறார்கள். இதனால் அந்தக் கடைகளின் வியாபாரம் மிகவும் பெருகுகிறதேயொழிய, அவைகளுக்கு ஒரு குறையும் இல்லையாம். நம் நாட்டுக் கடைக்காரர்களில் எத்தனை பேர் இப்படி நடந்துகொள்வார்கள்?

* *

ரேடியோவில் ஒரு நாள் இரவு ஏழே முக்கால் மணிக்கு மிக நல்ல சங்கீதக் கச்சேரி ஒன்று இருக்கிறது; அதே சமயம் நாம் ரெயில் வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்கிறது என்று வைத்துக்கொள்வோம். நமக்கு எவ்வளவு வருத்தம் நேரும்! ஆனால், இத்தாலியருக்கு இந்த வருத்தம் ஒரு நாளும் நேராது. அங்கே ரெயில் வண்டி ஸீட்டுகள் சிலவற்றில், காதில் வைத்துக் கேட்கக் கூடிய 'ஈயர்-ஃபோன்'கள் பொருத்தியிருக்கிறார்கள். துளியும் வண்டியின் கடகடப்புச் சத்தமோ வேறு சத்தமோ காதில் படாமல் எந்தப் பிரயாணியும் சௌகரியமாய் ரேடியோ நிகழ்ச்சிகளை அந்த ஈயர்-ஃபோன் மூலம் கேட்கலாம். ஆனால், நம் நாட்டில் இந்த மூன்றாம் வகுப்பு அவதிகள் தீரவே எவ்வளவு காலம் ஆகப் போகிறதோ! அதற்கு முன் இந்த மாதிரி வசதியெல்லாம் நமக்கு ஆசை எதற்கு?

* *

ஹான்ஸ் க்ரிஸ்தியன் ஆண்டர்ஸென் என்பவர் அற்புதமான குழந்தைக் கதைகள் எழுதிப் புகழ் பெற்ற ஆசிரியர்; டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர். அவருடைய வாழ்க்கை வரலாற்றை மெட்ரோ கோல்ட்வின் என்ற பட முதலாளி, ஸினிமா எடுத்திருக்கிறார். அந்தப் படத்துக்கு என்ன செல

வாயிற்றும், தெரியுமோ? 14 லட்சத்து 30 ஆயிரம் பவுனும். அதில் சில இனங்களைப் பாருங்கள்:

கதை தயாரிக்க 3 லட்சத்து 50 ஆயிரம் பவுன். (சென்ற 15 வருஷ காலத்தில் 22 கதைகள் தயாராயின; அத்தனையும் தள்ளுபடியாயின; அத்தனைக்கும் தயாரித்தவர் முழுப்பணமும் பெற்றுக்கொண்டு விட்டார்கள்.) கோஷ்டி நாட்டியம் ஆடும் 1,500 பேருக்கு ஜோடுகள் தயாரிக்க 4,000 பவுன். ஆகாயத்தில மேகங்கள் திரண்ட சமயம் பார்த்து ஒரு சிறு காற்றுடியைப் பறக்கவிடுவதற்காகக் காத்துக் காத்து வீணான நேரத்தினால் ஏற்பட்ட நஷ்டம் 2,700 பவுன்; ஒரே ஒரு காட்சியில் தோன்றுவதற்காக மழுங்க மொட்டையடித்துக்கொள்ளும்படி எட்டு வயதுச் சிறுவன் ஒருவனை இணங்கச் செய்ய 350 பவுன்; ஒத்திகைக் காலத்தில் ஜீன் மெய்ரா என்ற பிரபல நாட்டியக்காரிக்குக் கால் சுளுக்கிக் கொண்டதால் ஏற்பட்ட ஐந்து நாள் தாமதத்தின் நஷ்டம் 12,000 பவுன்.

ஸ்தலத்திலே இருந்தவன்

டவெண்டியத் ஸெஞ்சுரி ஃபாக்ஸ் ஃபிலிம் கார்ப்பொரேஷன் தலைவரான ஸ்பைரோஸ் ஸ்கௌராஸ் என்பவர் சில வருஷங்களுக்கு முன் ஒரு பெரிய தியேட்டரை மேர்பார்வையிடப் போனார். பத்து லட்சம் டாலர் செலவில் கட்டியது அது. ஆனால் அதில் ரொம்ப நஷ்டம வந்துகொண்டிருந்தது. தலைவர் போனபோது பகல் 11-மணி. அப்போது ஒரே ஒரு வாலிபக் காவலனைத் தவிர, வேறு யாரும் அங்கில்லை. "மானேஜர் எங்கே?" என்று அவனை இவர் கேட்டார்.

"அவர் வர இன்னும் நேரமாகும், ஸார்."

"உதவி மானேஜர் எங்கே?"

"அவரும் வர இன்னும் நேரமாகும்."

"மானேஜரோ, உதவி மானேஜரோ இல்லாத போது, தியேட்டரை யார் பார்த்துக்கொள்கிறார்கள்?"

"நான் தான், ஸார்" என்றான் காவல்காரன்.

"அப்படியானால், இந்த நிமிஷம் முதல் நீயே இதன் மானேஜராக இரு. நான் நியமித்துவிட்டேன்" என்றார் தலைவர்.

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

உலகில் பெரிய பதவி

★

அமெரிக்காவில் ஜனுதிபதி பதவியிலிருந்து ஒருவர் போய் மற்ருெருவர் வந்துவிட்டார். எத்தனை சிரமப்பட்டு ஜனுதிபதி உழைக்க வேண்டியிருக்கிறது என்ற இந்த விவரத்துக்கு ஆதாரம் 'தி டைஜெஸ்ட் அவ் வொர்ல்டு ரீடிங்' என்ற பத்திரிகையில் எட்கர் ஆன்ஸெல் மௌரர் என்பவர் எழுதிய கட்டுரை.

அமெரிக்க ஜனுதிபதி பதவி பெறுவதும் மரண தண்டனை அடைவதும் ஒன்றுதான். கடைசியாக அங்கே ஜனுதிபதி பதவி வகித்த ஆறு பேரில் இரண்டு பேர். பதவிக் காலத்திலேயே இறந்துவிட்டார்கள். மற்ருெருவர் பதவிக் காலத்தில் நோயுற்ருர்; பிறகு குணம் அடையவேயில்லை. பதவிக் காலம் முடிந்தபின் உயிர் வாழும் அதிருஷ்டம் உள்ளவர்கூட நெடுநாள் வாழ்வதில்லை.

உலகத்திலேயே மிகக் கடுமையாக உழைக்க வேண்டியவர் அமெரிக்க ஜனுதிபதிதான். அமெரிக்கா மிகப் பெரிய ராஜ்யம் அதன் தலைவராக அவர் விளங்க வேண்டும். அமெரிக்க அரசாங்க இலாகாக்கள் பல சிக்கல்கள் நிறைந்தவை. அவைகளையெல்லாம் அவர் நிர்வகிக்க வேண்டும். பொதுக்காரியங்களில் அமெரிக்க மக்கள் மிகுந்த சிரத்தை காட்டுகிருர்கள்; அந்தப் பொதுஜன அபிப்பிராயத்துக்குச் சில சமயம் வழிகாட்டுவதும் சில சமயம் அதைப் பின்பற்றுவதும் அவருடைய வேலை. இதெல்லாம் தவிர, தாம் எந்த அரசியல் கட்சியின் சார்பாக அதிகாரம் ஏற்ருரோ அந்தக் கட்சிக்கும் அவரே தலைவராயிருக்க வேண்டும்.

அமெரிக்காவில் ஆட்சி அதிகாரம், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தனித்தனியான மூன்று கிளைகளிடம் இருக்கிறது; சட்டம் செய்யும் கிளை, சட்டத்தை அமல் நடத்தும் கிளை, சட்ட உரிமைகளைக் காக்கும் கிளை - இந்த மூன்று பிரிவுகளும் தனித்தனியே இயங்குகின்றன. இப்படி மூன்றும் தனித்தனியே இயங்குவதுதான் சுதந்தரத்துக்கு நல்ல பாதுகாப்பு என்பது உண்மை. ஆனுல் நடைமுறையில் இதனுல் எவ்வளவோ சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்தக் கிளைகளுக்கிடையே நேரும் சச்சரவுகளைச் சமாளிக்கும் பொறுப்பும் ஜனுதிபதியைச் சேர்ந்ததுதான். இந்த மூன்று கிளைகளும் இணைந்து வேலை செய்யும் நாடுகளில் இவ்வளவு சிக்கல்களுக்கு இடமில்லை.

ஆரம்ப காலத்தில் இப்படி இல்லை. அப்போதெல்லாம் ஜனாதிபதியின் அரண்மனையான 'ஒயிட் ஹௌஸ்' ஒரு போகபூமியாகவே இருந்தது. தம்மைப் பார்த்துக் குசலம் விசாரிக்க வரும் குடி மக்களிடம் தமாஷாகப் பேசிப் பொழுதுபோக்க அப்போது ஜனாதிபதிக்கும் அவர் மனைவிக்கும் நிறைய ஓய்வு இருந்தது. தினந்தோறும் இரண்டு மணி நேரம் கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் சோம்பலாக உட்கார்ந்திருப்பது ஜான் க்வின்ஸி ஆடம்ஸ் என்ற ஜனாதிபதிக்கு ரொம்பப் பிடிக்குமாம். பெஞ்சமின் ஹாரிஸ் என்பவர் பகல் உணவுக்குப்பின் அநேகமாக வேலை ஒன்றுமே செய்ய மாட்டாராம். உழைப்பு அவசியம் என்ற கொள்கையைப் பின்பற்றிய தியோடோர் ரூஸ்வெல்ட்கூட உடற்பயிற்சிக்காகத் தினம் இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக்கொள்வாராம். முதல் மகாயுத்தம் தொடங்குவதற்குமுன் உட்ரோ வில்ஸன்கூட மாலை நேரங்களில் தம் குடும்பத்தாரோடும் நண்பர்களோடும் உல்லாசமாகப் பொழுது போக்குவாராம்.

அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. 'ஒயிட் ஹவுஸி'லுள்ள பொய்கையில் நீந்தத் தமக்கு அரை மணி நேரம் அவகாசம் கிடைத்தால், அதுவே பெரிய பாக்கியமென்று ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட் நினைப்பாராம். ரகசியப் போலீஸார், தமக்குப் பின்னே இரைக்க இரைக்க ஓடிவர, ஹாரி ட்ரூமன் காலையில் சற்று நேரம் விர்விர் என்று உலாத்துவாராம். இதற்குமேல் ஓய்வென்பதே இன்று ஜனாதிபதிக்குக் கிடைப்பதில்லை.

இப்போது 'ஒயிட் ஹவுஸ்' மாளிகை தேசீயக் காரியாலயம் ஆகிவிட்டது. தம்மைப் பார்க்க வரும் குடிமக்களோடு கை குலுக்கிக் குலுக்கி, ஜனாதிபதியின் கையே மரத்துப் போய் விடுகிறது. தலைமை தாங்கி எவ்வளவோ பொதுஜன இயக்கங்களை அவர் தொடங்கி வைக்கிறார். எவ்வளவோ கட்டிடங்களுக்கு அஸ்திவாரக் கல் நாட்டுகிறார். வெளிநாட்டுத் தூதுவர்களையும் காங்கிரஸையும் சந்தித்துப் பேசுகிறார். பல விருந்துகளுக்குத் தலைமை வகிக்கிறார். அமெரிக்காவுக்கு வரும் வெளி நாட்டுப் பெரிய மனிதர்களை உபசரிக்கும் பொறுப்பும் அவருடையதே.

ஜனாதிபதி யார் யாரைச் சந்திக்க வேண்டும் என்ற தினசரிக் குறிப்பைக் கண்டால் நமக்கெல்லாம் பயமே வந்துவிடும். காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையில் கால் மணி நேரங்கூட அவருக்கு ஓய்வு கிடையாது; இந்த நேரத்துக்கு முன்னும் பின்னுந்தான் அவர் தம் உத்தியோக சம்பந்தமான வேலைகளைச் செய்ய முடியும். விளம்பரமாகும் ஜாபிதாவில் பேட்டிச் செய்தி முழுவதும் இருப்பதில்லை. 'ஒயிட் ஹவுஸு'க்கு ஐந்து வாசல்கள் உண்டு. பேட்டி ஏற்பாடு இல்லாமலே, ஏதாவது ஒரு வாசலில் புகுந்து அவரைப் பார்த்துப் பேசுகிறவர்கள் எத்தனையோ பேர்.

நிர்வாகத் தலைவர் என்ற முறையில் அவர் நிர்வாக முறை

களை வகுக்க வேண்டும். இதற்காகக் காபினெட் மெம்பர்களையும் பல ஆலோசகர்களையும் கலந்துகொள்ள வேண்டும். அவர் பார்க்க வேண்டிய கடிதம் முதலிய தஸ்தாவேஜுகளை முதலில் அவருடைய காரியாலய இலாகாக்களில் ஒன்று மேல் பார்த்து, தானே கவனிக்கக்கூடிய விஷயங்களைக் கவனித்துப் பைசல் செய்துவிடுகிறது. என்றாலும், அவர் நேரே கவனித்தாக வேண்டியதற்காக மிஞ்சும் தஸ்தாவேஜுகளே ஒரு பெருஞ்சுமையாகக் குவிந்துவிடுகின்றன.

55 தனி ஃபெடரல் ஸ்தாபனங்களில் நடக்கும் வேலைகளெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். முக்கியமான பதவிகளுக்கு ஆள் நியமிப்பதை அவர் பார்த்து அநுமதிக்கவேண்டும். அரசாங்க நிர்வாகிகள் போடும் உத்தரவுகளை மேல் பார்க்க வேண்டும்; சட்ட சபைக்கு வர இருக்கும் புது மசோதாக்களைப் படித்து அநுமதிக்கவோ, மறுக்கவோ வேண்டும்

அவருடைய நிர்வாகம் சம்பந்தமாகக் காங்கிரஸ் செய்யும் பரிசோதனைக்கு அவர் உட்பட வேண்டும்; இந்தச் சபையினர் சொல்லும் குற்றங்குறைகளை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும்; சில சமயம் இவர்கள் அவர் வேலையில் குறுக்கிடுவதையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். வேறு எந்த நாட்டிலும் தலைமை நிர்வாகிக்கு இந்தத் தொல்லை இல்லை. காங்கிரஸுக்கும் அவருக்கும் ஏற்படும் தகராறுகளையும், தங்கள் பிரச்னைகளை நேரே காங்கிரஸிடம் முறையிடும் நிர்வாக இலாகாக்களிடையே ஏற்படும் தகராறுகளையும், சமாளிக்கவே அவர் நேரம் பெரும்பாலும் செலவாகிவிடுகிறது.

பொதுத் தேர்தல் வந்துவிட்டால் தம் கட்சிக்கு வெற்றி ஏற்படுவதற்கான திட்டங்களை அவர் வகுக்கவேண்டும், அவர் வழி காட்ட வேண்டுமே தவிர, தனித்தனிமாகாணங்களிலுள்ள கட்சிச் சேர்மன்கள் மனஸ்தாபப்படும்படியான எதையும் செய்யக்கூடாது. தேர்தல் பிரசார முறைகள் பல அவர் பார்வைக்கு வரும்போது எது தக்கது என்று அவர்தான் முடிவு கட்ட வேண்டும். தேசத்தின் நன்மைக்குக் கேடு வராத முறையில் அவர் தம் கட்சி நன்மைகளைப் பெருக்க எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பொது ஜன அபிப்பிராயங்களுக்குப் பிரதிநிதி என்ற முறையில் அவர் சில சமயம் தம் அபிப்பிராயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி இவர்களுடைய அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்; இவர்களின் அபிப்பிராயங்களை மற்றும் சில சமயம் அறிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டும். அமெரிக்க அரசாங்கத்தில் பொதுஜன அபிப்பிராயத்துக்கு எவ்வளவு செல்வாக்கு உண்டு என்பது பலருக்குத் தெரிவதில்லை. பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக அரசாங்கம் இங்கே எந்தக் காரியம் செய்தாலும் பலிக்காது. இங்கே ஏற்பட்ட மதுவிலக்குச் சட்டத்தின் கதியே இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

அநேகமாகப் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவது ஜனுதிபதிதான். என்ருலும் சில சமயம் பொது ஜன அபிப்பிராயத்துக்கு அவர் கட்டுப்பட நேர்ந்து விடுகிறது. இஸ்ரேல் ராஜ்யத்தை அங்கீகரித்தது இதற்கு ஓர் உதாரணம். இப்படிப் பொதுஜன அபிப்பிராயங்களுக்கு வழிகாட்டுவதும், தமக்கு விரோதமாகப் பொதுஜன அபிப்பிராயம் திரண்டால் அதற்குக் கட்டுப்படுவதும் அவருடைய முக்கியமான வேலை. அமெரிக்க அரசாங்கத்தின் அஸ்திவாரமே இதுதான்.

'ஒயிட் ஹவுஸ்' என்ற ஜனுதிபதி மாளிகையில் காலத்துக் கேற்றபடி வேலைகள் ஒழுங்காய் நடைபெறும்படி செய்யப் பல முயற்சிகள் நடந்தன. 1939-இல் ஜனுதிபதி ரூஸ்வெல்ட், ஜனுதிபதியின் நிர்வாகக் காரியாலயம் என்ற ஒன்றை அமைத்தார். இதன் மூலமாக ஜனுதிபதி தம் வேலைக்கு அவசியமான சகல இலாகாக்களையும் கவனிக்க முடியும். பதவிக்கு ஆள் நியமனம் செய்வது, பத்திரிகை ரேடியோ தொடர்பு, கடிதப் போக்கு வரத்து இந்த மூன்றையும் கவனிக்க மூன்று காரியதரிசிகள் ஜனுதிபதிக்கு இருக்கிருர்கள். ஜனுதிபதியின் வேலைப் பளுவை இவர்கள் ஓரளவு குறைக்கிருர்கள். என்ருலும், இவருக்கு மிக அதிக உதவி செய்வது 'பட்ஜெட் பீரோ' என்ற சக்தி வாய்ந்த ஸ்தாபனந்தான்.

அந்த ஸ்தாபனத்தில் 400 பேர் வேலை செய்கிருர்கள். புள்ளி விவரம், பொருளாதாரம், நிர்வாகம் இவைகளில் அவர்கள் நிபுணர்கள். அரசாங்க சம்பந்தமான எந்த அலுவலிலும், எந்த ஆபீஸ் வேலையிலும் தலையிட அவர்களுக்கு அதிகாரம் உண்டு. சில ஸ்தாபனங்களை எப்படி மாற்றவேண்டும் என்றும் நிர்வாக முறையில் என்ன மாறுதல் வேண்டும் என்றும் அவர்கள் யோசனை சொல்வார்கள். எல்லா இலாகாக்களிலிருந்தும் வரும் பணத் தேவை எஸ்டிமேட்டுகளை அவர்கள் ஆராய்வார்கள்; அவசியம் என்று தோன்றும் மாறுதல்களைச் செய்து, தங்கள் தீர்மானத்தை ஜனுதிபதியின் பார்வைக்கும் அங்கீகாரத்துக்கும் அவர்கள் அனுப்புவார்கள்.

1946-இல் மூன்று மெம்பர்கள் அடங்கிய பொருளாதார ஆலோசனைச்சபை ஒன்று சட்டபூர்வமாக ஸ்தாபிதம் ஆயிற்று. காங்கிரஸுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய வருஷாந்தப் பொருளாதார அறிக்கையைத் தயார் செய்வதில் இது ஜனுதிபதிக்கு உதவிசெய்கிறது. பற்பல பொருளாதாரத் திட்டங்களையும் ஆராய்ந்து, முடிவான சில திட்டங்களை மட்டும் ஜனுதிபதியின் பார்வைக்கு அனுப்பும் 'வடிகட்டு' வேலையை இது செய்து விடுகிறது.

இவ்வளவு வசதிகள் இருந்தாலும் ஒவ்வொரு நாள் வேலையும் அவர் உயிரை வாங்கிவிடும். முதல் நாள் இரவுச் சாப்பாடு முடிந்தவுடனே, அவர் வேலை ஆரம்பமாகிறது. மறு நாள் கவனிக்க வேண்டிய வேலைகளின் ஜாபிதா அப்போதுதான் தயாராகிறது. படுக்கையில் சாய்ந்து

கொண்டே அவர் பல அறிக்கைகளையும் அவசர தஸ்தாவேஜிகளையும் படிக்கிறார். காரியதரிசிகள் சொல்லியிருக்கும் யோசனைகளை ஆராய்ந்து பார்க்கிறார். காலையில் எழுந்தவுடன் தினசரிப் பத்திரிகைகளைப் பார்க்க வேண்டும்; தமக்குத் துணை செய்பவர்களைச் சந்தித்துப் பேச வேண்டும்; அவர்கள் சொல்லும் விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். இந்த வேலையெல்லாம் 10 மணிக்குள் முடிந்துவிட வேண்டும். 10 மணிக்கு மேல் பேட்டிக்காக எறும்புச் சாரி போல் வருபவர்களைப் பார்க்கும் வேலை தொடங்கிவிடும்.

ஒருவர் எவ்வளவு உடல் வலிமை உடையவராக இருந்தாலும் இந்த வேலைச்சுமையை அவரால் தாங்கிச் சமாளிக்கவே முடியாது. இவ்வளவு பொறுப்புக்களையும் ஒரே சமயத்தில் தாங்குவது சாத்தியமில்லை. சில பொறுப்புக்களை வேறு யாருக்காவது மாற்றிவிட்டு அவர் இரண்டொரு பொறுப்புக்களை மட்டும் ஏற்றுக்கொள்வதுதான் இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம். வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் அமெரிக்க ஜனாதிபதி பதவி போல் கடுமையான உத்தியோகம் எதுவும் இல்லை. பிரிட்டனில் பார்க்க வேண்டியவர்களை ராணி பார்க்கிறாள். உபசரிக்க வேண்டியவர்களை அவளே உபசரிக்கிறாள். அஸ்திவாரக் கல் நாட்டும் விழாவைப் போன்ற சமூக விழாக்களுக்கெல்லாம் அவள் தலைமை தாங்கி நடத்தி விடுகிறாள். ஃப்ரான்ஸ் ஜனாதிபதி செய்யும் வேலையும் கிட்டத்தட்ட இதுவேதான். ருஷியாவில் ஸ்டாலினும் 'போலிட் பீரோ' அங்கத்தினரும் ஆட்சியை நடத்துகிறார்கள். ஜனாதிபதி மைக்கேல் காலினின் என்ற சாதுப் பிரகிருதியே, வருகிறவர்களை வரவேற்கும் வேலையைச் செய்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்த வேலைச்சுமையைக் குறைப்பதற்காகக் கூடிய சீக்கிரம் ஏதாவது சீர்திருத்தம் நடந்தாக வேண்டும் என்று இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்

சத்தம் குறையுமா?

டிராம் வண்டி ஸ்டாப் ஒன்றில் நின்று கொண்டிருந்த ஒரு கருமி, அங்கு வந்த டிராம் கண்டக்டரைப் பார்த்து, "இங்கேயிருந்து ஸ்டேஷனுக்கு என்ன சார்ஜ்?" என்று கேட்டார்.

"இரண்டு காசு."

கருமி ஓடினார். அதே டிராமை அடுத்த ஸ்டாப்பில் எட்டிப் பிடித்தார். "இப்போது ஸ்டேஷனுக்கு என்ன சார்ஜ்?" என்று கண்டக்டரைக் கேட்டார்.

"மூன்று காசு. தப்பான திசையில் நீங்கள் ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்."

—'விஜ்', ஹாலண்டு.

சமீபத்தில் கொண்டாடினோமே சங்கிராந்திப் பண்டிகை. இதை மற்ற இடங்களில் எப்படிக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா?

சூரிய விழா

கோவிந்தமூர்த்தி தேசாய்

பாரத நாடு பல்வேறு நாகரிகங்களையும் பல்வேறு பண்பாடுகளையும் தன்னுள் அடக்கியிருப்பது. ஆனாலும் பல பண்டிகை பருவங்களை ஒரே மாதிரியாகக் கொண்டாடுவதில் ஒற்றுமை பெற்றது. பண்டிகைகளின் தத்துவம் ஒன்றே என்று இதனால் தெரிகிறது. அந்த வகையில் சேர்ந்தது மகரசங்கிரமணம்; இது ஜனவரி மாதப் பாதியில் ஒவ்வொரு வருஷமும் வருகிறது. அன்று சூரிய பகவான் மகரராசியில் பிரவேசிக்கிறார்; தம் பிரயாணத்தின் போக்கை வேறு திசைக்கு மாற்றுகிறார். அன்று உத்தராயணத்தின் முதல் நாள். வருஷத்தின் முதல் நாளாகவும் இதைக் கொண்டாடுகிறார்கள் நம் நாட்டினர். இது தொன்று தொட்டு வரும் பொங்கல் புது நாள். இதை எல்லாரும் ஒருமுகமாக வெகு விமரிசையுடன் கொண்டாடுகிறார்கள். ஆனால் வேறு வேறு பாஷை பேசும் பகுதிகளில் கொண்டாடும் முறைகள் மட்டும் சற்று மாறியிருக்கின்றன; அவ்வளவு தான்.

குஜராத்: இங்கே மக்கள் இந்தப் பண்டிகையைக் கொண்டாடும் தத்துவம் மிக உயர்ந்தது. சங்கிராந்தி என்றால் தான தருமம் செய்வதற்கென்றே ஏற்பட்ட நாள் ஆகும். குஜராத்திச் செல்வர்கள் எல்லாரும் ஏழைகளின் வறுமை நோயைத் தீர்ப்பதில் இன்று தம் முழு மனத்துடன் ஈடுபடுகிறார்கள். தம்மால் முடிந்த மட்டும் ஏழைகளுக்குப் பொருளை வாரி வழங்குகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் புதிதாக மணமான மாப்பிள்ளைகளை மாமனார் வீட்டில் அழைத்துக் கௌரவிப்பார்கள். வருஷத்தில் இந்த ஒரு நாளில் குஜராத்தியர், விதம் விதமான ஹாஸ்யங்களையும் வேடிக்கைகளையும் அநுபவிக்கிறார்கள். சர்க்கரைப் பாயசத்தில் உப்பைக் கலந்துவிட்டுப் புது மாப்பிள்ளைகளுக்கு அதை விருந்திட்டுப் பரிகசிப்பது, தவறாமல் செய்யும் ஒரு வேடிக்கை.

காப்பிரைட்: பிரஜா மத (கன்னடம்), பங்களூர்.

சிறுவர்கள் இன்று ஏராள மாகப் பட்டங்களைப் பறக்க விடுவார்கள். பம்பாய் நகரில் சௌபாத்தி மைதானத்தில் இன்று லட்சக்கணக்கான பட்டங்கள் பறப்பதைப் பார்க்கலாம். அதில் போட்டியும் நடத்துவார்கள். எல்லாரும் சந்தோஷமாக உண்டு உடுக்கும் நாள் இது.

வங்காளம்: வங்காளிகள் இந்த நாளில் கங்காஸ்நானம் செய்து கங்காதேவியைப் பூஜிக்கிறார்கள். ஒவ்வொரு வங்காளியின் வீட்டிலும் இன்று சமையல் விதம் விதமாக இருக்கும். கன்னடத்தாரும் மராட்டியரும் செய்யும் மோதகத்தையும் தமிழ் நாட்டினர் செய்யும் கொழுக்கட்டையையும் போன்ற ஒரு பட்சணத்தை இவர்களும் செய்கிறார்கள்.

உத்தரப் பிரதேசம்: இன்று பருவ நாள் ஆகையால் பிரயாகையில் திரிவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்தால் புண்ணியம் என்பது ஹிந்துக்களின் நம்பிக்கை. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஜனங்கள் திரள்திரளாக அங்கே சங்கிராந்தி ஸ்நானம் செய்யக் கூடுவார்கள். உலகப் பிரசித்திபெற்ற 'மாக மேளா' அன்று தொடங்கி ஒரு மாத காலம் நீடிக்கிறது. இந்த ஒரு மாத காலமும், பிரயாகையில் கங்கையில் ஜனங்கள் ஸ்நானம் செய்தவண்ணம் இருப்பார்கள்.

மகாராஷ்டிரம்: இங்கே இந்தப் பண்டிகை பெண்களுக்கே முக்கியமாக விளங்குகிறது. எல்லாரும் எள்ளைத் தலையில் வைத்து ஸ்நானம் செய்கிறார்கள். தெய்வங்களுக்குப் பூஜை செய்கிறார்கள். பிற்பகலில் அவரவர்களுக்குத் தெரிந்தவர்களின் வீட்டுக்குப் போய் மஞ்சள் குங்குமமும், குழந்தைகளுக்கு வறுத்த எள்ளும் வெல்லமும் கொடுத்துவிட்டு வருவார்கள். இதனால் அன்பும் விசுவாசமும் வளரும் என்பது ஐதிகம். பெரியோர்களுக்குச் சிறியவர்கள் வணங்கி ஆசீர்வாதம் பெறுவார்கள். புது ஆடைகளும் அணிவார்கள்.

கன்னடம்: இந்த இடத்திலும் இதைப் பருவமென்று கொண்டாடுகிறார்கள். ஜனங்கள் தானத்துக்கு உபயோகப்படும் பொருள்களை எடுத்துக்கொண்டு ஸ்நானம் செய்யப் போவார்கள். அங்கே தம் மனம் உவந்த அளவு தானம் செய்வார்கள். மாலை நேரம் வருவதற்கு முன் எள்ளும் வெல்லமும் விநியோகிப்பார்கள். அநேகமாக எல்லா ஜாதியாரும் இப்படியே செய்கிறார்கள். தம் குழந்தைகள் நீண்ட ஆயுளோடும் வாழ்க்கையில் இன்பத்துடனும் இருக்க வேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்திப்பார்கள். அவர்கள் தலையில் பூ, இலந்தைப்பழம், கரும்புத் துண்டங்கள், காசு முதலியவற்றை அபிஷேகம் செய்வார்கள்.

ஆந்திரம்: இங்கும் போகியன்று சிறு குழந்தைகளுக்கு இலந்தைப்பழம், கரும்பு முதலியவற்றைத் தலையில் சொரியும் வழக்கம் இருக்கிறது. பொங்கலன்று பூக்களால் தட்டிய புது வறட்டியின் மேல், ஆழாக்கு அல்லது கால்படி

கொள்ளும் பாத்திரத்தில், தனிப் பால் பொங்கலை வெயில் படும் படியான இடத்தில் கொதிக்க வைத்துச் சூரிய பகவானுக்கு நைவேத்தியம் செய்கிறார்கள்.

தமிழ் நாடு: மார்கழி மாதம் சூனிய மாதம் என்று சொல்கிறார்கள். இந்த மாதத்தில் கல்யாணம் போன்ற சுப காரியங்களைச் செய்வதில்லை. வீடு கட்டத் தொடங்குவதில்லை. இந்த மாதம் முடிந்து சுபமாகத் தை மாதம் பிறக்கப் போகிறதென்கிற உற்சாகம் இங்கே மிகுதியாகக் காணப்படுகிறது. அதனால் அதற்கு முதல் நாளைப் 'போகி' என்ற பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். இது மிக முக்கியமானது. பல கறிகாய்களைக் கொண்டு கூட்டுச் செய்வதும், போகியன்று தொடங்கிச் சங்கிராந்தி, கனு, அல்லது மாட்டுப் பொங்கல் என்று மூன்று நாட்கள் வரையில் சர்க்கரைப் பொங்கல் செய்வதும் இங்கே வழக்கம்.

மழை இல்லாமல் பயிர் விளையாது. இந்திரனே மழைக்கு அதிகாரி என்பது இந்தியர்களின் நம்பிக்கை. இந்திரன் வசிப்பது போகபூமி. போகி என்றால் சுகவாசி; அதாவது வறுமை பிணி இவற்றால் கஷ்டப்படாதவன் என்று பொருள். போகியன்று இந்திரனைப் பூஜித்துத் தாமும் விருந்து உண்டு மகிழும் வழக்கமும் நாடு முழுவதும் இருக்கிறது. மறு நாளான சங்கிராந்தி, சூரிய பகவானுக்கு உரிய நாள். தேரில் சூரிய பகவான் பவனி போவதுபோல் கோலம் போட்டுப் பூஜை செய்யும் வழக்கம் தென்னுடெங்குமே இருக்கிறது. வருஷம் முழுவதும் இந்த இருவருடைய அருள் வேண்டுமென்று நைவேத்தியம் செய்கிறார்கள்.

இப்படிக் கொண்டாடும் முறை பல வகைப்பட்டாலும் இதில் உன்னதமான தத்துவமும் திருப்தியும் அடங்கியிருக்கின்றன. இன்று பகைவர்களுக்குக்கூட வறுத்த எள், வெல்லம் கலந்துகொடுத்தால் அவர்கள் நண்பர்களாகிவிடுவார்கள்.

மதுவை விலக்கியவர்

எப்போதும் குடித்துக்கொண்டேயிருந்த ஒரு கனவான் திடீரென்று அதை நிறுத்திவிட்டார். இதைக் கண்டு ஆச்சரியமடைந்த ஒரு நண்பர், "சட்டென்று குடியை ஏன் நிறுத்தினாய்?" என்று கேட்டார்.

"மாமியாரைக் கண்டாலே எனக்குப் பயம். அவள் போன வருஷம் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு எங்கள் வீட்டுக்கு வந்தது தான் உனக்குத் தெரியுமே?"

"ஆமாம், தெரியும்."

"அவள் வந்து கதவைத் தட்டினதும், நான் போய்த் திறந்தேன். உடனே நான் கண்டது என்ன, தெரியுமா?"

"என்ன?"

ஒரு மாமியார் அல்ல; மூன்று மாமியார்." —ஃப்ரான்ஸிஸ் ராட்மான்

தென்னைப் பாதுகாப்பு

பி. கொச்சப்ப மேனன்

தென்னை வளத்தில் இழந்த பெருமையை மீண்டும் இந்தியா பெறுவதற்கு என்ன வழி என்று காட்டும் இந்தக் கட்டுரை ஆசிரியர் திருவாங்கூரின் தென்னைப் பிரசார ஆபீஸர்.

உலகத்தில் தென்னை மிகுதியாக உள்ள நாடுகளில் இந்தியா ஒரு காலத்தில் முதலாவதாக இருந்தது. இன்று பிலிப்பைன் தீவு முதலிடம் பெற்றிருக்கிறது. இந்தியாவையும் கிழக்கிந்தியத் தீவையும் இரண்டாவதாகக் குறிப்பிடவேண்டும். உலகில் தென்னை பயிராகும் மொத்தப் பரப்பு 80 லட்சம் எச்கர்; இந்தப் பரப்பில் ஓராண்டில் கிடைக்கக்கூடிய தேங்காய் 1430 கோடி. இந்தியாவில் மட்டும் கணக்கெடுத்தால் 15 லட்சம் எக்கர் பரப்பில் தென்னை விளைகிறது. அதில் கிடைக்கும் தேங்காய் 320 கோடி. உலகில் தென்னை விளையும் மொத்தப் பரப்பில் 19 சதவிகிதம் இந்தியாவில் இருக்கிறது. மொத்தக் காய்களில் 22.43 சதவிகிதம் நம் நாட்டில் உற்பத்தியாகிறதென்றால் இன்னும் தெளிவாகப் புரியும். பிலிப்பைன் தீவில் தென்னையின் பரப்பு இந்தியாவைவிட 5 லட்சம் எக்கர் அதிகமாக இருந்தபோதிலும் அங்கே 350 கோடி தேங்காய்களே உற்பத்தியாகின்றன. அங்கே பரப்பு இந்தியாவைவிட அதிகமாயினும் ஓர் எக்கருக்குக் கிடைக்கும் சராசரிக் காய்கள் இந்தியாவை விடக் குறைவே.

ஆனால் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் பிலிப்பைன் தீவும் கிழக்கிந்தியத் தீவுமே இந்தியாவைவிடச் சிறந்து விளங்குகின்றன. இங்கே 50 சதவிகிதக் காய்கள் உணவுப் பொருளாகப் பயன்படுவதால், மீதியுள்ள பேர் பாதியிலிருந்தே எண்ணெய் எடுக்கிறார்கள். எண்ணெய் உற்பத்தி லட்சத்து எழுபத்தாறாயிரம் டன் என்றாலும், நாட்டின் தேவைக்கு லட்சத்து எண்ணாயிரம் டன் பற்றாக்குறையாகவே இருக்கிறது. இந்த உற்பத்தி அளவிலும் 80 ஆயிரம் டன் எண்ணெய் சமையல் காரியங்களுக்குப் பயன்படுகிறது. சோப்புச் செய்வதற்கும் வாசனைத் தைலங்கள் தயார் செய்வதற்கும் லட்சத்து இருபதினாயிரம் டன் எண்ணெய் அவசியமாகிறது. சோப்புச் செயவதற்குரிய எண்ணெய் வகையில் தேங்காய் எண்ணெய் சிறந்தது. சமீப காலத்தில் இந்தியாவில் சோப்புத் தொழில் நன்றாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. மேலே குறித்த தேவைகளுக்காக இந்தியாவில் பின்னும் தேங்காய்

மூலம்: திருவாங்கூர் - கொச்சி ந்யூஸ் (ஆங்கிலம்: 1-11-'52), திருவனந்தபுரம்.

எண்ணெய் இறக்குமதி செய்தாக வேண்டியிருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, தேங்காய் எண்ணெயில் உத்தேசமாக 40 சதவிகிதம் திருவாங்கூர்-கொச்சியில் கிடைக்கிறது. இதற்கு அடுத்தபடியாக உள்ளது சென்னை ராஜ்யம்.

இன்று தென்னை சம்பந்தமான பொருள்களின் விலை குறைந்துவிட்டதனால் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தென்னை இங்கே உள்ள பெருவாரியான மக்களுக்கு வருவாய் தருவதாக இருப்பதே இதற்குக் காரணம். இந்த ராஜ்யத்தின் பொருளாதாரத் துறையைச் சரி செய்ய இலங்கையிலிருந்து இறக்குமதியாகும் கொப்பரைக்கு அதிக வரியை விதிப்பது அவசியம். இதோடு, இங்கே உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் அதிக சிரத்தை காட்ட வேண்டும். நம் விவசாயிகள் அதை இப்பொழுது மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னை ராஜ்யமும் ஏறக்குறைய இதே அளவில் தென்னை சாகுபடி செய்வதனால் உற்பத்தித் துறையில் அதிகக் கவனம் செலுத்துவது அவசியம். ஆனால் மலபார் ஜில்லாவைத் தவிர வேறு இடங்களில் உள்ள விவசாயிகள் இந்தத் துறையில் அதிக சிரத்தை காட்டவில்லை.

திருவாங்கூர் ராஜ்யத்தின் உள்பகுதி, கடற்கரைப் பிரதேசம் இவை இரண்டுமே தென்னை வளர்ப்புக்குச் சிறந்தவை. ஆனால் இந்தப் பிரதேசங்களில் நோய்களின் காரணமாக வளர்ப்பை அதிகமாக்குவது சாத்தியமில்லை. நோய்களிலிருந்து மரங்களைக் காப்பாற்றுவதையே இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஆகவே, உற்பத்தி பெருக்க வேறு இடங்களில் புதிய மரங்களை நட்டுப் பற்றாக்குறையை நாம் சரி செய்துகொள்ள வேண்டும். இங்கே தென்னை வளரும் இடங்களில் மண்ணில் இந்திரிய எருக்கள் (Organic manure) மிகவும் குறைவாகவே உள்ளன. மண் அரிப்பினால் வளம் குன்றிய இடங்கள் ஏராளம். இந்திரிய எருக்களை நாம் மிகுதியாகச் சேர்க்க வேண்டும். தென்னைக்கு மற்ற உரங்களைவிடப் பொட்டாஷ் சத்து அவசியமாகும். இது மரச் சாம்பலில் மிகுதியாக இருக்கிறது. அதனால் மரச் சாம்பலை இந்திரிய எருக்களோடு சேர்த்து நிலத்துக்குப் போட வேண்டும்.

தெருக் குப்பை, கக்கூஸ் குப்பை, தொழுவுரம் இவை இந்திரிய எருக்களே என்றாலும், வேண்டிய அளவுக்குக் குறைவாகவே கிடைப்பதால் இவற்றோடு பசுந்தழைகளை நாம் எருவாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பசுந்தாள் உரப் பயிர்களைத் தென்னை வளரும் இடங்களில் பயிர் செய்து மடக்கி உழுவது அவசியம். அம்மோனியம் சல்பேட் என்ற செயற்கை உரத்தையும் சிறிதளவு பயன்படுத்திக் கொள்ளலாம். பொட்டாஷ் சத்துக்காக மரச் சாம்பலோடு மூரியேட் ஆப் பொட்டாஷ் (Muriate of Potash) என்ற செயற்கை உரத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். இந்த இரண்டு செயற்கை உரங்களும் எல்லா விவசாய டிப்போக்களிலும் கிடைக்கும்.

ஈரப் பாதுகாப்பின் பொருட்டு நிலத்தை அடிக்கடி கொத்திவிட வேண்டும். கோடைக் காலத்தில்

நிலத்தைக் கொத்தி வைத்தால் கோடை மழை நீரை மண் அதிகமாக உறிஞ்சிக்கொள்ளும். மண்ணும் நீண்ட நாள் ஈரங் காத்திருக்கும். மண்ணரிப்பு ஏற்படாதபடி நிலத்தில் சிறு பயிர்களைச் சாகுபடி செய்து வைப்பது நல்லது.

தென்னையைப் பாதிக்கும் நோய்களில் குருத்தழுகல் நோயும், வேர் அழுகல் நோயும் இங்கே அதிகம். குருத்துக்கள் அழுகுவதனல் மரத்தில் மட்டைகள் குறைகின்றன. அதனல் பலனும் மட்டுப்படுகிறது. வேர் அழுகலினல் பிஞ்சுகள் உதிர்வது அதிகமாகிறது. நாளடைவில் மரமே பட்டுப் போகக்கூடும். இலைகள் பசுமை மாறி மஞ்சளாகத் தோன்றுவது இந்த நோயின் அறிகுறியாகும். மேசாக மயில் துத்தக் கலவையை (Bordeaux Mixture) மரங்களின் மேல் தெளிப்பதும், போஷணைக்காக மிகுதியாக உரங்களைச் சேர்ப்பதுமே இந்த நோய்களைச் சமாளிக்கத் தற்காலத்தில் எடுத்துக் கொள்ளும் முறைகள்.

பூச்சிகளில் தென்ன மரத்து வண்டுகள் தென்னையைப் பெரிதும் பாதிக்கின்றன. இவை அழுகிப் போன இந்திரிய எருக்களிலும் மரங்களின பாகங்களிலும் விருத்தியாகின்றன. இவை வளரும் இடங்களாகிய எருக்குழி, தாவரக் கழிவுகளின் குவியல் முதலிய இடங்களில் 'வெட்டபிள் கேமக்ஸன்' (Wettable Gammexane) என்ற மருந்தில் சிறிதளவை நீருடன் கலந்து மூன்று மாதத்துக்கு ஒரு முறை தெளிப்பதால் பூச்சிகள் விருத்தியாகாமல் ஒழிகின்றன.

செந்நிற வண்டுகள் மரத்தின் உச்சியில் மட்டைகள் தோன்றும் இடத்தில் தொளைத்துக்கொண்டு உள்ளே சென்று விடுகின்றன. இவை இளம் பிள்ளைகளையே அதிகமாகத் தாக்குகின்றன. கடைசியில் மரம் வாடிப் பட்டுப் போகிறது. தோப்பில் எதாவது ஒரு மரம் பட்டுப் போனல் அதற்குக் காரணம் செந்நிற வண்டுதான் என்று ஊகித்துக்கொண்டு மற்ற மரங்களுக்கு முன் எச்சரிக்கையாக மருந்து செலுத்துவது அவசியமாகும். 'பைரோகோன்-ஈ. ஏ. லிக்விட்' (Pyrocone-E-A-Liquid) என்ற பூச்சி கொல்லியை மரத்தின் உச்சியில் ஒரு தொளை செய்து செலுத்திய பின், தொளையின் வாயைக் களி மண்ணல் அடைத்துவிட வேண்டும்.

ஓலைகளைக் கறிக்கும் ஒருவகைப் பூச்சிகள் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மரத்தைப் பாதிக்கின்றன. 'டி டி டி' என்ற மருந்து இவைகளை ஒழிக்க ஏற்றது.

குரும்பைகள் உதிரும் நோய் சில இடங்களில் காணப்படுகிறது. மண்ணின் வாசி சரியில்லாவிட்டாலும், பொட்டாஷ் சத்துள்ள எருக்கள் குறைந்தாலும், நீர் சரிவர இல்லாமற் போனலும், குரும்பைகள் இப்படி உதிரும். கோடைக் காலத்தில்தான் அதிகமாக இப்படி நேரும். இந்த மூன்றுவிதக் காரணங்களில் எது மரத்தைப் பாதிக்கிறது என்று கவனித்து, ஏற்ற பரிகாரம் தேட வேண்டும். பூஞ்சக்காள நோயினலும் குரும்பைகள் உதிரலாம். அந்த நோய்க்கு மயில் துத்தக் கலவையைத் தெளிப்பதே ஏற்ற பரிகாரம்.

போட்டியிடச் சென்றேன்

இந்திராணி ரஹ்மான்

உலக அழகி போட்டியில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்று வந்த இந்திய அழகி தன் பிரயாண அநுபவத்தை இதில் சொல்லுகிறாள்.

'மிஸ் இந்தியா'

என் நண்பர்கள் வற்புறுத்தினார்கள்; என் குடும்பத்தினரும் கணவரும் உற்சாகமூட்டினார்கள்; அழகுப் போட்டிக் கமிட்டியின் அங்கத்தினர்களும் என்னை வேண்டிக்கொண்டார்கள். இவ்வளவு காரணங்களும் என்னைத் தூண்டவே, வேண்டா வெறுப்புடன் 'மிஸ் கல்கத்தா' அழகுப் போட்டியில் கலந்துகொண்டேன். போட்டியில் கலந்துகொண்ட நோக்கம் இன்னதுதான் என்று என்னால் தெளிவாகச் சொல்லத் தெரியாது. புதுமையான தீரச் செயலாகவும் சிறிது வேடிக்கையாகவுமே அழகுப் போட்டியைக் கருதினேன்; ஏதோ ஒரு விசேஷ சம்பவமாகவே நினைத்தேன். கடைசியாக, பம்பாயில் நடைபெற்ற அழகுப் போட்டியில் இந்தியாவிலேயே சிறந்த அழகி-மிஸ் இந்தியா-என்று என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்படி நேரும் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை. உண்மையில், அழகுப் போட்டி சம்பந்தமாகப் பம்பாய்க்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அங்கே பொதுஜனங்களுக்கு முன்னால் நீச்சல் உடையில் காட்சி தர வேண்டும் என்றோ வேறு சில காரியங்களைப்பற்றியோ நான் யோசித்ததே இல்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னை அறியாமலே கலந்துகொள்ளவேண்டி இருந்தது.

பம்பாயில் 'மிஸ் இந்தியா'வாக என்னைத்தேர்ந்தெடுத்ததும் ஆனந்த மிகுதியால் அவசரமாகக் கல்கத்தாவிலிருந்த என் கணவருக்கு டிரங்க் டெலிபோனில் நடந்தவற்றைத் தெரிவித்தேன்.

எங்களை ஏற்றிக்கொண்டு உலகம் முழுவதும சுற்றிக் காட்ட, தம்தம் விமான நிலையத்தில் ஜூன் மாதம் 2-ஆம் தேதி பான் அமெரிக்க

மூலம்: ஓரியெண்ட் (ஆங்கிலம்: 23-11-'52), கல்கத்தா.

க்ளிப்பர் விமானம் ஒன்று தயாராக இருந்தது. அகில உலகப் போட்டி நடைபெறும் கலிபோர்னியாவுக்கு அழைத்துச் செல்லும் விமானத்தில் நாங்கள் ஏறிக்கொண்டோம். மத்தியதரைக் கடலை ஒட்டியுள்ள லெபனன் நாட்டில் பீருட் நகரத்தில் விமானம் முதல் முதலில் தங்கியது. பிறகு ரோம் நகரத்துக்குச் சென்றோம். என்னையும் நான் உடுத்திருந்த உடைகளையும் கண்டு அங்குள்ளவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். எங்கே சென்றாலும் எங்களுக்கு ராஜ வரவேற்புக் கிடைத்து வந்தது.

பிரயாணத்தில் நாங்கள் கண்ட இடங்களில் மிகவும் அழகான ஊர் பாரிஸ். பிரெஞ்சுக்காரரின் விருந்தாளிகளாக இருந்த அந்த நான்கு நாளும் தேவலோகத்தில் இருப்பது போலவே தோன்றியது. எங்களுக்கு வேண்டிய சின்னஞ்சிறு வசதிகளையும் பிரெஞ்சுச் சர்க்கார் உடனடியாகக் கவனித்து நிறைவேற்றினார்கள். பாரிஸில் அவசியம் பார்க்க வேண்டிய பல முக்கியமான இடங்களையும் கலைக் கண்காட்சிகளையும் கண்டு களித்தோம். அங்கே புகழ்பெற்ற ஹோட்டல் சிற்றுண்டிகளை ருசி பார்த்து அநுபவித்தோம். பாரிஸின் பிரபல ரெஸ்டாரெண்ட் ஒன்றில்தான் ஹாலிவுட் பிரபல நடிகர் டேனிகே என்பவரைச் சந்தித்தோம். அடுத்த நாள் காலையில் வெளிவந்த ஒரு தினசரியில் என் காலடியில் டேனிகே உட்கார்ந்துகொண்டிருக்கும் புகைப்படம் ஒன்றைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். பாரிஸில் உல்லாசமாக நான்கு நாட்களைக் கழித்த பிறகு லண்டனுக்குச் சென்றோம். அங்கே நான்கு நாட்களிலும் இரவுத் தூக்கமே இல்லை; ஆங்கில முறையில் தயாரித்த உணவும் எங்களுக்கு ஒத்து வரவில்லை.

ஜூன் 15-ஆம் தேதி நாங்கள் நியூ யார்க் போய்ச் சேர்ந்தோம். ஆறு வருஷங்களுக்குமேல் பார்க்காமல் இருந்த என் தந்தையை அங்கே சந்தித்தேன். நான், என் கணவர்,என் தந்தை மூன்று பேரும் வாஷிங்டன் இந்தியத் தூதர் காரியாலயத்தில் இருந்த எங்கள் உறவினரான ஒபைட் ரஹ்மான் வீட்டில் கொஞ்சநேரம் தங்கினோம். என்னுடைய இந்தப் பிரத்தியேக வேண்டுகோளுக்கு எந்தவிதத் தடையும் செய்யாமல் அழகுப் போட்டி நிர்வாகஸ்தர்கள் அநுமதி தந்தார்கள. என்னைக் கௌரவிப்பதற்காக ஒபைட் விசேஷ வரவேற்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். இந்திய ஸ்தானிகர் ஸ்ரீ பி. ஆர். சேன் உள்படப் பல பிரபலஸ்தர்கள் வரவேற்புக்கு வந்திருந்தார்கள். இந்திய பரத நாட்டியத்தை நான் முதல் முதலில் அமெரிக்காவில் ஆடிக் காட்டுவதற்கு இந்த வரவேற்பு எனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் அளித்தது. அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்பு பரத நாட்டியத்துக்கு வேண்டிய பாட்டுக்களை என் ஆசிரியர் பாடி மின்சார நாடாவில் பதித்து வைத்திருந்தார். அந்த மின்சார நாடாப் பின்னணிச் சங்கீதத்துக்கு ஏற்றபடி பரத நாட்டியம் ஆடினேன். அடுத்த நாள் வெளிவந்த தினசரிகளில் எனக்கு அளித்த வரவேற்பைப்பற்றியும் என் பரத நாட்டியத்தைப்பற்றியும் புகழ்ந்து எழுதி இருப்பதைப் படித்து மகிழ்ச்சி

அடைந்தேன். எனவே, வாஷிங்டனில் எனக்குக் கிடைத்த முதல் வரவேற்பை மிக முக்கியமானதாக மதித்தேன்.

பிறகு நாங்கள் மூவரும் நியூ யார்க் நகரத்துக்கு விரைந்து சென்றோம். அன்று மாலை நியூ யார்க் இந்திய கான்ஸலேட்-ஜெனரல் எங்களுக்கு ஒரு வரவேற்பு அளித்தார். அன்றையிலிருந்து 22-ஆம் தேதி வரை அழகுப் போட்டி சம்பந்தமான நிகழ்ச்சிகள் காலையிலிருந்து இரவு வரை நிறைந்திருந்தன. வெளி நாடுகளிலிருந்து வந்து அழகுப் போட்டியில் கலந்துகொள்ளவிருந்த பிரதிநிதிகள் 50 பேரும் நியூ யார்க் வந்து சேர்ந்தார்கள். நியூ யார்க் மேயர் அளித்த விருந்து ஒன்றில் மற்ற அழகுப் போட்டிப் பிரதிநிதிகளுடன் நானும் கலந்துகொண்டேன். நாங்கள் டெலிவிஷனில் தோன்றியது, ஐ.நா. சபைக் கூட்டத்துக்குச் சென்றது போன்ற முக்கிய சம்பவங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன.

ஐ. நா. சபையில் உள்ள இந்தியப் பிரதிநிதியான ராஜேசுவர் தயாள் என்னை 'லஞ்சு'க்கு அழைத்துச் சென்றார். அப்பொழுதே நியூ யார்க் வந்து சேர்ந்த காரணத்தால் 'மிஸ் இத்தாலி' லஞ்சுக்குச் சிறிது தாமதித்தே வந்தாள். அதனால் சிற்றுண்டியில் உடனே கலந்துகொள்ள முடியவில்லை. அழகுப் போட்டிப் பெண்கள் எல்லாரையும் ஒரு முறை கணக்கிட்ட பிறகே 'மிஸ் இத்தாலி'யை லஞ்சில் கலந்துகொள்ள அநுமதித்தார்கள். ஆள் மாறாட்டமோ, வேறு கலவரமோ நேராமல் தடுப்பதற்காகவே நிர்வாகிகள் இவ்விதம் செய்தார்கள். 'மிஸ் தென் ஆப்பிரிக்கா'வைக் கண்டு 'மிஸ் இத்தாலி'க்கு ஒரே வியப்பாக இருந்தது. 'அவளும் வெள்ளை நிறமாக இருக்கிறாளே' என்று 'மிஸ் இத்தாலி' வாய் திறந்து சொல்லிவிட்டாள்.

22-ஆம் தேதி 'லாங் பீச்'சை அடைந்தோம். பசிபிக் மகா சமுத்திரத்தின் வழியாக வந்த மற்றத் தேசத்து அழகிகளை அங்கே சந்தித்தோம். 'மிஸ் அமெரிக்கா' தேர்தலுக்காக அமெரிக்காவின் பல மாகாண அழகிகளையும் அங்கே கண்டோம். அந்த வாரம் முழுவதும் ஊர்வலங்களும் கோலாகல நிகழ்ச்சிகளும் நடந்துகொண்டே இருந்தன. 'மிஸ் அமெரிக்கா' போட்டிக்கும், 'மிஸ் யூனிவர்ஸ்' இறுதிப் போட்டிக்கும் உரிய பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றன. இந்தக் காலத்தில் எந்தப் பெண்ணும் தன் இச்சைப்படி நடந்துகொள்ள இயலாது. போட்டி விதிகள் கடுமையாக இருந்தன.

லாங் பீச்சில் வசிக்கும் குடும்பத்துப் பெண்மணிகள் எங்களைக் கவனித்து வந்தார்கள். அந்தப் போட்டியில் கலந்துகொண்டவர்களில் நான் ஒருத்திதான் மணமானவள்; என் புருஷருக்கு எவ்வளவு கோபம் வந்திருக்கும், பாருங்கள்.

உலக அழகி போட்டி முடிவுகளுக்குப் பிறகு, 'மிஸ் இத்தாலி' தன் நாடு சென்றதும், இந்தப் போட்டி சம்பந்தமாகச் சில குற்றச்சாட்டுகளை வெளியிட்டிருக்கிறாள். அதைக் குறித்து என்னுடைய கருத்து என்ன என்று பலர் விசாரித்துவிட்டார்கள். இதுதான் என் மனப்பூர்வமான பதில்: 'மிஸ் இத்தாலி' சொன்னதுபோல அமெரிக்கப்

பெண்கள்-அதுவும் 'மிஸ் லூசியானு' போன்றவர்கள் - ஜனங்களுடன் சகஜமாகப் பழகினுர்கள். 'மிஸ் லூசியானு' 'மிஸ் யூனிவர்ஸ்' ஆகியிருக்கலாம். ஜனங்கள் 'மிஸ் நியூ யார்க்'கைவிட மற்றவர்களைப் பெரிதும் பாராட்டினர்கள். ஆனல் 'மிஸ் நியூ யார்க்'கே 'மிஸ் அமெரிக்கா' என்று போட்டி நிர்வாகிகள் முடிவு செய்தார்கள். இருந்தாலும் இங்கே ஒன்று சொல்ல வேண்டும். இந்த முதல் போட்டியில் வெளிநாட்டாருக்கு மதிப்புக் கொடுப்பதற்காக அமெரிக்கர் இதில் கலந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம்.

போட்டிக்கு வந்த எல்லா அமெரிக்கப் பெண்களும் சினிமாவில் நடிக்க எப்படியோ ஒப்பந்தம் பெற்றுவிட்டார்கள். 'மிஸ் பின்லாந்து' என்ற பெண்மணியே சிறந்த அழகி என்று நாங்கள் கருதினேம். அவள் தேர்தல் சம்பந்தமாக என்ன உள் விவகாரம் நடந்ததோ எங்களுக்குத் தெரியாது. உப-உலக அழகிகள் என்று 10 பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்தத் தேர்தலிலும் பலருக்கு மன வேறுபாடு இருந்தது.

தான் அமெரிக்கப் பெண்களில் ஒருத்தி என்பதுபோல் பெருமை பாராட்டிக்கொண்டு எங்களோடு கலக்காமல் இருந்தாள் 'மிஸ் ஹவாய்'. அது வெளிநாட்டைச் சேர்ந்த எங்களுக்கெல்லாம் சற்று மனக் கசப்பாகத்தான் இருந்தது. ஆனல் 'மிஸ் அலாஸ்கா' எங்களுடன் இருக்க வேண்டுமென்று விரும்பினள். இது அமெரிக்கக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கு அதிருப்தியாக இருந்தது. எப்படியோ எங்களிடையே ஏதாவது மனஸ்தாபம் இருந்து வந்தது.

கடைசியில், புதிதாகப் பழகிய பல நண்பர்கள், பல தேச அழகிகள், அமெரிக்காவின் உண்மைப் பிரதிநிதிகள் என்று மதிக்கக்கூடிய 'லாங் பீச்' மக்கள் இவர்களிடம் நாங்கள் விடை பெற்றுக்கொண்டோம். அமெரிக்காவை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு ஸான் பிரான்ஸிஸ்கோவுக்குச் சென்று சில தினங்கள் அங்கே இருந்தோம். தாய் நாட்டுக்குச் செல்லும் வழியில் ஹவாய் தீவுகளில் பாதிநாள் இன்பமாகக் கழித்தோம். பிறகு டோக்கியோவில் இரண்டு நாட்கள் தங்கி அங்கே பார்க்கவேண்டிய இடங்களைக் கண்டு களித்தோம். இப்படி உல்லாசமாக உலகத்தைச் சுற்றி இனிய நினைவுகளுடனே கடைசியில் கல்கத்தா வந்து சேர்ந்தோம்.

கார் ரிப்பேர்

ஒரு கனவானை யாரோ டெலிபோனில் அழைத்தார். பரபரப்பான குரலில், "இது காராஜ். உங்கள் காரை உங்கள் மனைவி இதோ ரிப்பேர் செய்ய ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறர்......" என்று சொல்லி முடிக்கவில்லை.

அதற்குள் கனவான் இடைமறித்து, "தெரியும்; தெரியும். அதற்காகும் ரிப்பேர் கட்டணத்தை நான் செலுத்திவிடுகிறேன்" என்றார்.

"அது சரிதான். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. என் காராஜை யார் ரிப்பேர் செய்வது என்றுதான் கேட்கிறேன்" என்றது டெலிபோன் குரல். —அட்ரியன் ஆண்டர்ஸன்

கார்ட்டூன் கதம்பம்



—'சங்கார்ஸ் வீக்லி'

பறக்கும் தட்டு



—'நாஷ்வில் டென்னெஸீயன்'

—'ஃபில்மிண்டியா'

—'ப்ளிட்ஸ்'

விலைக் கட்டுப்பாடு

இர்விங் எஸ். ஓல்ட்ஸ்

'கண்ட்ரோல்', 'விலைக் கட்டுப்பாடு' என்றெல்லாம் சொல்லுகிறார்களே, இது என்னவோ புதுமையானது என்று நினைப்போம். ஆனால் மிகப் பழமையானதாகும். இந்த விஷயத்தில் சரித்திர ரீதியாக மனிதனின் அநுபவத்தை இந்த அமெரிக்கர் ஒரு பிரசங்கத்தில் விவரித்திருக்கிறார். அதன் சாரம் இந்தக் கட்டுரை.

இந்த விலைவாசிக் கட்டுப்பாடு விஷயத்தில் மனிதனுக்கு நாலாயிர வருஷ அநுபவம் இருக்கிறது. இந்த நாலாயிர வருஷ சரித்திரத்தையும் பார்க்கும்போது, எனக்குத் தெரிந்த மட்டில், ஒரே ஒரு தடவை கூடப் பணப் பெருக்கத் தொல்லையை விலைவாசிக் கட்டுப்பாடு தடுத்து நிறுத்தவில்லை. அதற்கு மாறான பலனே விளைந்திருக்கிறது. விலைவாசிக் கட்டுப்பாடு ஏற்பட்டபோதெல்லாம், உற்பத்தி குறைந்தது; பொருள்கள் அரிதாயின. எந்தக் குறைகளைத் தீர்க்க விலைவாசியைக் கட்டுப்படுத்தினார்களோ, அந்தக் குறைகளே மேலும் பெருகின.

இன்று அநேகமாக உலகெங்குமே விலைவாசிக் 'கண்ட்ரோல்'கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் 'கண்ட்ரோல்'களுக்கும் பழங்காலத்துக் 'கண்ட்ரோல்'களுக்கும் அடிப்படையான வித்தியாசம் எதுவும் இல்லை.

நாலாயிரம் வருஷங்களுக்கு முன் பாபிலோன் ராஜ்யத்தில் ஹம்முராபி கோடு என்ற சட்டம் அமலில் இருந்தது. பாபிலோன் ராஜ்யம் எங்குமே இந்தச் சட்டத்தின்படி பொருள்களின் விலைவாசி, உற்பத்தி, விநியோகம் இந்த மூன்றின் மீதும் கடுமையான 'கண்ட்ரோல்'கள் இருந்தன. இந்த மூன்று காரியங்களும் நடைபெற முடியாமல் இவைகளின் மென்னியைப் பிடித்து நெரித்து அழித்துவிட்டன, அந்தக் 'கண்ட்ரோல்'கள்.

ஏதென்ஸ் நகரில் கிறிஸ்துவுக்கு முந்திய நாலாவது நூற்றாண்டில் அங்கிருந்த சர்க்கார், மிகவும் கண்டிப்பாக உணவுத் தானியங்களின்மீது 'கண்ட்ரோல்'கள் ஏற்படுத்தினார்கள். உணவுத்தானிய இன்ஸ்பெக்டர் படை ஒன்றையே துறைமுகத்துக்கு அனுப்பினார்கள். ஒவ்வொரு சிறு வியாபாரத்தையும் கண்காணிப்பது அந்தப் படையினரின் வேலை. இந்த இன்ஸ்பெக்டர்களின் முன்னிலையிலேயே இவர்களுக்குத் தெரியாமல் ஒரு வியாபாரி ஏமாற்றிவிடலாம்; உயர்ந்த விலைநிர்ணய விதியை மீறிவிடலாம். அந்த வியாபாரியின் மோசடியைப் பின்னால் கண்டு பிடித்து விட்டால், அவனுக்கு மரண தண்டனை விதிப்பார்கள்.

ஆனால் இதெல்லாம் பலிக்க வில்லை. 'கண்ட்ரோல்' ஏற்பாடு இறுதியில் அடியோடு குலைந்தது.

கிறிஸ்துவுக்குப்பின் 301-ஆம் ஆண்டில் டயக்லீஷன் என்ற சக்கரவர்த்தி பிறப்பித்த மிக விரிவான விலைவாசிக் 'கண்ட்ரோல்' சாசனந்தான் ரோம் சாம்ராஜ்யத்தையே நாசம் செய்தது. 'லாபத்தை ஒரு வரம்புக்கு உட்படுத்த வேண்டும்' என்று அந்தச் சாஸனம் கூறியது. 'அபரிமிதச் செல்வம்' சேகரிக்கும் வியாபாரிகளை அது கண்டித்தது. அந்த வியாபாரிகள் 'சொந்த லாபம்' கருதி 'நாசகரமாக விலை' வைக்கிறார்கள் என்று குறிப்பிட்டது. இந்த வாசகங்களெல்லாம் என்னவோ இன்று நம் காதில் விழுகிறவை போலவே இல்லையா?

'கண்ட்ரோல்'களையும் இன்றுள்ளவை போலவேதான் அந்தச் சக்கரவர்த்தி ஏற்படுத்தினார். அந்த நாளில் ரோம் நகரில் விற்பனையான ஒவ்வொரு சரக்குக்கும் இன்னதுதான் உயர்ந்த விலை என்று அவர் நிர்ணயித்தார். ஒவ்வொரு தொழிலிலும் உள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் இன்னவிகிதம் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று விதித்தார். இந்த விதிகளை மீறுகிறவருக்கு அந்தக் கால வழக்கப்படி மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்.

இந்தச் சாசனத்துக்குப் பிறகு என்ன நடந்தது என்பது உலகறிந்த சங்கதி. தாங்கள் கொடுத்த விலைக்கும் குறைவாக விலை பெற்றுச் சரக்குகளை விற்க வியாபாரிகள் இஷ்டப்படவில்லை; சரக்குகளை ஒரேயடியாய்ப் பதுக்கி விட்டார்கள். பொருள்களை உற்பத்தி செய்தவர்கள், அவைகளை மார்க்கெட்டுக்குக் கொண்டு வரவில்லை. நகரவாசிகளெல்லாம் சாமான் கிடைக்காமல் தவித்தார்கள். தெருவெல்லாம் கலகங்களும் சச்சரவுகளும் மூண்டன. மேன்மையான 'கண்ட்ரோல்' பரீட்சையில் மற்றொன்றும் தோல்வியுற்றது. டயாக்லீஷன் சக்கரவர்த்தி முடி துறந்தார். மீதி வாழ்நாளை ஒரு கீரைப் பாத்தியில் அவர் கழித்தார். 'மனிதனின் மௌட்டிகத்தையும் விபரீதப் போக்கையுந்தான் என்ன என்று சொல்வது!' என்று மறுகும் ஞானி யாகிவிட்டார்.

'ஆனால் அநுபவம் நமக்குப் புத்தி கற்பிப்பதாகவே தோன்றவில்லை. பன்னிரண்டாவது நூற்றாண்டின் இறுதியில் ரொட்டி, மீன், சாராயம் இந்த மூன்றுக்கும் இங்கிலாந்தில் உயர்ந்தபட்ச விலையை ஒரு சட்டத்தின் மூலம் நிர்ணயித்தார்கள். அடுத்த சில நூற்றாண்டுகளில் அந்தச் சட்டத்தை எப்படி எப்படியோ புதுப்பித்தார்கள்; திருத்தினார்கள்; மறந்தார்கள். இறுதியில் 'பொதுஜன நன்மையை உத்தேசித்து' அதைப் பார்லிமெண்டு முற்றும் ரத்து செய்துவிட்டது.

சில நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த டச்சுப் புரட்சியின் போது, டியூக் அவ் பார்மா என்ற கோமகன், ஆண்ட்வெர்ப் நகரத்தை முற்றுகையிட்டார். நகரத்துக்குள் இருந்த அதிகாரிகள் உடனே சகல பொருள்

களுக்கும் விலைக் 'கண்ட்ரோல்' ஏற்படுத்தினார்கள். ராணுவ தந்திர நோக்கில் இது பெரிய முட்டாள்தனமாய் முடிந்தது. விலைகள் மிகவும் குறைவாயிருந்ததால், சரக்குகளை யெல்லாம் நகர மக்கள் வெகு சீக்கிரத்தில் உபயோகித்துத் தீர்த்தார்கள்; அல்லது வீணடித்தார்கள். வெளியிலிருந்து திருட்டுத்தனமாகச் சாமான் தருவிக்கவும் முடியவில்லை. வெளியிலிருந்து நகரத்துக்கு அனுப்பும் சாமான்கள் சொற்ப விலைக்குத் தானே போகும். அதனால் வெளியிலிருப்பவர் எவரும் இந்தச் சொற்ப லாபத்துக்காக அபாயமான கள்ள வியாபாரம் செய்யத் துணியவில்லை. ஆகவே, பார்மா கோமகன் முற்றுகையிட்டதைவிட மோசமாக, ஆண்ட்வெர்ப் நகரம் தன் முட்டாள்தனத்தால் தனக்குத் தானே முற்றுகையிட்டுக் கொண்டு விட்டது.

இரண்டாவது உலக யுத்தம் தொடங்கியதிலிருந்து ஒன்பது வருஷமாய்ப் பிரான்ஸ் தேசத்தில் பணப் பெருக்கத்தை நிறுத்துவதற்காக விலைக் 'கண்ட்ரோல்'களை அநுஷ்டித்து வருகிறார்கள். அப்படியிருந்தும், பிராங்க் என்ற பிரெஞ்சு நாணய மதிப்பு யுத்தத்துக்கு முன்பு இருந்ததில் பத்தில் ஒரு பங்குக்குமேல் இன்னமும் ஏறவில்லை.

இந்தியா ஒன்றில்தான் ஒரு சமயம் சற்றுப் புத்திசாலித்தனமாய் நடந்துகொண்டிருக்கிறார்கள். 1770-இல் வங்காளத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. தட்சணமே விலைக் 'கண்ட்ரோல்'களைச் சர்க்கார் ஏற்படுத்தினார்கள். அதனால் முந்திய வருஷத்து அறுவடையில் கிடைத்த அரிசி முழுவதையும் ஜனங்கள் வெகு விரைவாகத் தின்று தீர்த்தார்கள். மறு வருஷத்து அறுவடைக் காலம் வருவதற்குள் ஜனங்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பசியால் மாண்டு விட்டார்கள். பதினாறு வருஷத்துக்குப் பிறகு மறுபடியும் அதே மாகாணத்தில் ஒரு பஞ்சம் வந்தது. அதிகாரிகள் இந்தத் தடவை தங்கள் நடைமுறையை மாற்றிக் கொண்டார்கள். விலைக் 'கண்ட்ரோல்' எதுவும் செய்யவில்லை. அதற்குப் பதிலாகத் தேசம் பூராவிலும் எங்கேங்கே தானியங்கள் இன்ன இன்ன விலைக்குக் கிடைக்கும் என்ற விலைப் பட்டியலைப் பிரசுரித்து, நாடெங்கும் வழங்கினார்கள். அதனால் தானியங்களை எங்கே வாங்கி எங்கே விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்று எல்லா ஜனங்களுக்கும் தெரிய வந்தது. சரக்குகளின் ஸப்ளை வேகமாக இடைவிடாமல் நடந்தது. கொழிப்பான இடங்களிலிருந்து அருந்தலான இடங்களுக்கு ஏராளமாகத் தானியங்கள் சென்றன. அபாயம் நேராமல் ஜனங்கள் தப்பித்துக் கொண்டார்கள்.

மனிதனின் நாற்பது நூற்றாண்டு அநுபவத்திலிருந்து, விலைக் 'கண்ட்ரோல்' ஒரு போதும் பலிக்காது என்று நிச்சயமாய்த் தெரிகிறது. விலைக் 'கண்ட்ரோல்'களின் மூலம் பஞ்சமும் நாசமுந்தான் விளைகின்றன.

ரோல்ஸ் - ராய்ஸ் வந்த விதம்

★

கோடீசுவரர்களே வாங்கும் இந்தப் புகழ்பெற்ற காரின் வரலாறு, மிகவும் சுவாரஸ்யமானது. மாரிஸ் சீஸ்வ்ரைட் என்பவர் 'எவ்வரிபடிஸ்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது இந்த விவரம்.

உல்லாசமாக இருந்த காலம் எல்லாம் போய் உலகத்தில் சாமானியமான பொருள்களையே விரும்பும் காலம் இது. இருந்தாலும் ரோல்ஸ் - ராய்ஸ் மோட்டாருக்குள்ள மவுசு இன்னும் அப்படியேதான் இருக்கிறது. ஐரோப்பிய நிலச்சுவான்தார்களான பிரபுக்கள் வாங்கி வந்தது போய், இப்போது ஆஸ்திரேலியாவில் கம்பெனி வியாபாரம் நடத்துவோரும், ஆர்ஜெண்டைனில் ஆடுமாடு வளர்க்கும் பண்ணை முதலாளிகளும், வட அமெரிக்காவில் வாழும் ஆலை முதலாளிகளான கோடீசுவரர்களும் ரோல்ஸ் - ராய்ஸ் வாங்கி வருகிறார்கள்; இதுதான் வித்தியாசம். முன்போலவே அதற்கு இன்னும் கிராக்கி இருக்கத்தான் இருக்கிறது.

ரோல்ஸ் - ராய்ஸுக்கு ஏன் இவ்வளவு மதிப்பு ஏற்பட்டது தெரியுமா? 1904 கோடையின் போது ஒரு நாள் ஒரு ரெயில் வண்டியின் முதல் வகுப்புப் பெட்டியில் சார்லி ரோல்ஸ் என்ற பிரமுகர் மான்செஸ்டருக்குப் போய்க்கொண்டிருந்தார். அவருக்கு அப்போது வயது 27. பெரிய



ஸர் ஹென்ரி ராய்ஸ்

பணக்காரர். பலூனில் பறப்பது, மோட்டார் ஸைக்கிளில் சவாரி செய்வது என்றால் அவருக்கு ஒரு பித்து. தம் பெயரில் ஒரு நல்ல மோட்டார் - கார் தயாரிக்க வேண்டும் என்று அவருக்கு வெகு நாளாக ஆசை. அது சம்பந்தமாகத்தான் ஹென்ரி ராய்ஸ் என்ற எஞ்சினீரைப் பார்க்க, அவர் மான்செஸ்டருக்குப் போய்க் கொண்டிருந்தார்.

ஆறு வருஷம் கழித்து ஓர் ஏரோப்ளேன் விபத்தில் ரோல்ஸ் மாண்டு போனார். பின்னால் ராய்ஸின் பெயரும் தம் பெயரும் சேர்த்து ரோல்ஸ் - ராய்ஸ் என்று கம்பீரமாக வழங்கி, பெருமை

ஆதாரம்: எவ்வரிபடிஸ் (ஆங்கிலம்), லண்டன்.

யின் சின்னமாக விளங்கும் என்று அவரேகூட எதிர்பார்த்திருக்க மாட்டார்; அப்படிப் பிரமாதமாகப் பெயர் எடுத்துவிட்டது ரோல்ஸ் - ராய்ஸ் மோட்டார் கார்.

ஏன், கைக் கடிகாரம், பவுண்டன் பேனா, ரேசர், சிகரெட் பற்ற வைக்கும் 'லைட்டர்' இந்த மாதிரி பொருள்களைத் தயாரிக்கும் கம்பெனிக்காரர்கள்கூடத் தம் பொருள் உயர்வானது என்று காட்ட ரோல்ஸ் - ராய்ஸ் என்ற பெயரைக் கடன் வாங்கினார்கள் என்றால் பாருங்களேன்!

குவீன்ஸ்லந்து சர்க்கார் பொதுக் கடன் கேட்டபோது, "எங்கள் கடன் பத்திரங்களை வாங்குங்கள்: ரோல்ஸ் - ராய்ஸின் பெருமையும் சிறப்பும் இதில் காணலாம்" என்று விளம்பரம் செய்தார்களாம்.

எவ்வளவு செலவானாலும் சரி, சரக்கு உயர்தரமாக இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் ரோல்ஸ் - ராய்ஸ் மோட்டார் தயாரிக்கத் தொடங்கினார் ராய்ஸ். அவர் வைத்துக்கொண்டிருந்த ஃபிரெஞ்சு மோட்டார் கட புடவென்று சத்தம் போட்டுக்கொண்டு, சதா புகை நாற்றத்தைக் கிளப்பிக்கொண்டிருந்தது. அதை நம்பி எங்கேயாவது புறப்படுவதென்றாலும் முடியாது. அதைப் பார்த்து அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. ஆகவே, ஒவ்வொரு பாகமும் மிகவும் சிறப்பாக இருக்கும்படி ஒரு மோட்டார் - கார் தயாரித்தார். ஆனால் செலவு ஏராளமாகப் பிடித்தது. அவரோடு சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவருக்கு அதைப் பார்த்ததும் பகீர் என்றது.

ராய்ஸ் சிறுவயதில் கிளாப்டன் ஸ்டேஷனில் தினசரிப் பத்திரிகை விற்றுப் பிழைத்து வந்தார். எஞ்சினீரிங் கம்பெனி ஒன்றில் வேலை கற்றுக்கொண்டதைத் தவிர அவர் அதிகமாக ஒன்றும் படிக்கவேயில்லை. தம்மிடம் வேலை



ஹைதராபாது நிஜாமின் 50 ரோல்ஸ் - ராய்ஸ் கார்களில் ஒன்று இது. 44 வருஷத்துக்கு முந்தி வாங்கியது. முற்றும் வெள்ளியால் அமைந்தது.



பரத்பூர் ராஜாவின் வேட்டைக்சாகத் தயாரித்த ரோல்ஸ் - ராய்ஸ். ராஜாவும் பிரதம மந்திரியும் நிற்கிறர்கள்.

செய்யும் தொழிலாளரிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நடந்து கொள்வார். சம்பளத்தைக் கொடுக்கும்போது, "கூலிக்கு ஏற்ற வேலை நீங்கள் செய்யவில்லை" என்று சொல்லிவிட்டுத்தான் கொடுப்பாராம். சனிக்கிழமை பிற்பகலில் கூட அவர்களிடம் நன்ருக வேலை வாங்குவாராம். அடிக்கடி மோட்டார் யந்திரத்தின் ஒரு பாகத்தை எடுத்து அது எவ்வளவு உறுதியாக இருக்கிறது என்று பரீட்சிக்க உடைத்துக்கூடப் பார்ப்பாராம். மணிக்கணக்காகவும், சில சமயம் நாள் கணக்கிலும் சிரமப்பட்டுத் தயாரித்த பாகங்களை இப்படிச் செய்வார் என்ருல் பாருங்கள்!

சாப்பிட உட்காரக்கூட அவருக்குப் பொழுது இராது. அந்த நேரத்தையும் வீணுக்கக் கூடாது என்று அவருக்கு ஓர் எண்ணம். இதனுல் அவருக்குப் பின்னுலேயே ஒரு பையன் ரொட்டியும் ஒரு தம்ளரில் பாலும் எடுத்துக்கொண்டு திரிவானும். அப்படிப் பசி எடுத்தால் ஒரு முட்டையை அனலில் வாட்டி உடனே சாப்பிட்டு விடுவாராம்.

இதனுல் பின்னுல் அவருடைய தேக ஆரோக்கியம் கெட்டு விட்டது. இருந்தாலும், உலகத்திலேயே சிறந்த மோட்டார் - காரைத் தயாரித்து 1904 - இல் பாரிஸ் கண்காட்சியில் வைத்தார். "இந்த மோட்டார் போகும்போது உள்ளே எஞ்சின் ஓசை துளிக்கூடக் கேட்பதில்லை. நாம் அதில் போகிருேமா என்றுகூட உணர முடியாதபடி அவ்வளவு சுகமாகப் பிரயாணம் செய்யலாம். முன்னுல் நடந்துபோகிற ஆசாமிக்குப் பின்னுல் கார் வருகிற தென்பதே தெரியாதபடி இது ஓசைப்படாமல் போகிறது" என்று 'டைம்ஸ்' பத்திரிகை அப்போது அதைப் பாராட்டி எழுதியது.

"அற்ப விஷயமாக இருந்தாலும் அதைச் சரியாகச் செய்து முடித்தால் சிறந்து விளங்கும்" என்று அவர் இதைப்பற்றிச் சகஜமாகத்

தம் நண்பரான எரிக் கில் என்ற பிரபல சிற்பியிடம் ஒருதரம் சொல்லியிருந்தார். கில் இதை லத்தீனில் மொழிபெயர்த்து ஸஸ்ஸெக்ஸ் கவுண்டியில் ராய்ஸின் வீட்டிலுள்ள சமையலறையில் பொறித்து வைத்தார்.

முதல் தடவை உடல் நலம் கெட்ட பின் 21 வருஷம் வரை டெர்பியிலுள்ள தம் தொழிற்சாலையில் அவர் கால் எடுத்தே வைக்கவில்லை. ஆனால் 1933-இல் இறந்து போகும்வரை ஒவ்வொரு கார், ஒவ்வோர் எஞ்சின் இவற்றின் 'டிஸைனை'யும் தாமே தயாரித்துக் கொடுத்து வந்தார்.

ஒரு சமயம் டெர்பியிலிருந்து தாம் தயாரித்த ரோல்ஸ்-ராய்ஸ் மாடல் எல்லாவற்றையும் தென் ஃபிரான்ஸிலுள்ள தம் வீட்டுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். அவருக்குப் பிடிக்காதவற்றை உடைத்துத் தீர்த்துவிட்டார். எவ்வளவோ பணச்செலவில் தயாரித்தவையாயிற்றே என்று துளியும் கவலைப்படவில்லை.

அவர் இறந்த பிறகு 'ஆர். ஆர்.' என்று சிவப்புக் குறி போட்டிருந்ததைக் கறுப்பாக மாற்றிவிட்டார்கள்; அவ்வளவுதான். இப்போது அந்தத் தொழிற்சாலையைக் கவனித்து வரும் டைரக்டர்கள் ஏதாவது பிரமாதமான புது யோசனையை யாராவது சொன்னால், "ராய்ஸ் இருந்தால் இப்படிச் செய்வாரா?" என்று ஆலோசிப்பார்கள். கடைசியில், 'இந்தப் புதிய யோசனையை ஏற்பதற்கில்லை' என்றே முடிவு செய்வார்கள். அப்போது ஏனோ சார்லி ரோல்ஸின் நினைவே யாருக்கும் வருவதில்லை. இருந்தாலும் ரோல்ஸின் பெயர் அதோடு சேர்ந்து பிரபலமாக விளங்கியது. அன்று ரோல்ஸ் விரும்பியதும் அதுதானே? அவருடைய கோரிக்கை பூர்த்தியாகிவிட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், அராபிய மன்னரான இபின் சாவுதுக்கு 1945-இல் தம் நட்புக்கு அறிகுறியாக ஓர் ஏரோப்ளேனை அளித்தார். உடனே சர்ச்சில், பிரிட்டிஷாருக்குப் பெருமை தரும் விதத்தில் ஒரு ரோல்ஸ்-ராய்ஸ் காரை அந்த மன்னருக்கு அளித்தார்.

ருஷியச் சக்கரவர்த்தி 2-ஆம் நிக்காலஸ் தமக்கு ஒன்றும், தம் ராணிக்கு ஒன்றும், தம் நண்பனான ரஸ்புட்டீன் என்ற பித்தக்குளிச் சந்நியாசிக்கு ஒன்றும் ஆக மொத்தம் மூன்று ரோல்ஸ்-ராய்ஸ் கார் வாங்கினார். இப்போது ஜப்பானியச் சக்கரவர்த்தியாக இருக்கும் ஹிரோஹிடோவின் தந்தை செர்ரிப் பூவைப் போல் சிவப்பும் அதோடு கறுப்பும் கலந்த ஒரு ரோல்ஸ்-ராய்ஸ் கார் வைத்திருந்தார். அதன் கதவுகளில் பொன்னிறத்தில் இலையோடு கூடிய கிறிஸந்தமம் பூ பொறித்திருந்தது. இது அந்த ராஜ பரம்பரையின் சின்னம்.

ஹைதராபாது நிஜாமிடம் இப்படி 50 ரோல்ஸ்-ராய்ஸ் கார்கள் இருக்கின்றன. 44 வருஷத்துக்கு முன் அவருக்காகத் தயாரான மஞ்சள் நிற ரோல்ஸ் ராய்ஸை இங்கே படத்தில் காணலாம். அதில் பின்புறம் சிம்மாசனம் அமைத்திருக்கிறது. ராஜ பவனியின்போது முழுவதும் வெள்ளித் தகடு அடித்த ரோல்ஸ்-ராய்ஸில்தான் புறப்பட்டுப் போகிறார். உலகத்திலேயே விலை

யுயர்ந்த கார் இது ஒன்றுதான். மேலே அரை வட்ட வடிவமாய் அமைத்து, பொன்னாலேயே அதிலுள்ள பல பாகங்களைத் தயார் செய்திருந்தார்கள். ஆசனமே மெத்தையாகவும் பயன்படும்படி அமைத்திருந்தார்கள்.

மவுண்ட்பாட்டன் பிரபுவுக்காகத் தயாரித்த ரோல்ஸ் - ராய்ஸ்தான் அபாரம் என்று சொல்ல வேண்டும். அதைத் தயாரிக்கும்போது அவரே அங்கிருந்து கவனித்து வந்தாராம். அவருக்கு ஏற்றபடி உயரமாகவும் நன்றாகக் கால் நீட்டும்படியும் விசாலமாக அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

ஹென்ரி ராய்ஸ் ஏராளமான பேர் வாங்குவதற்கேற்றபடி 15 - ஹார்ஸ் பவர் கொண்ட ஒரு மோட்டார் தயாரிக்க விரும்பினார். ஆனால் கம்பெனியின் மற்ற டைரக்டர்கள், "அதனால் ரோல்ஸ் - ராய்ஸின் தனிப் பெருமையே போய்விடும். அது கூடாது" என்று சொல்லிவிட்டார்கள். மொத்தம் 28,000 ரோல்ஸ் - ராய்ஸ் கார்தான் இதுவரை தயாரித்திருக்கிறார்கள். மற்றக் கார் உற்பத்திக் கம்பெனியார்களோ லட்சக்கணக்கில் தங்கள் கார்களைத் தயார் செய்துவிட்டார்கள்.

அமெரிக்கர்களில் அநேகம் பேர் மிகப் பழைய ரோல்ஸ் - ராய்ஸ் கார்கள் இன்னும் வைத்திருக்கிறார்கள். மிஸஸ் கார்னீலியஸ் வாண்டர்பில்ட் 1913 - இல் வாங்கிய 'ஸில்வர் கோஸ்ட்' மிகவும் பிரசித்தமானது. வுல்வொர்த்தில் வசிக்கும் ஒரு சீமாட்டியிடம் 400 பவுன் மதிப்புள்ள எலெக்ட்ரிக் கடிகாரமும் 1000 பவுன் மதிப்புள்ள பெட்டியும் இணைத்த ரோல்ஸ் - ராய்ஸ் ஒன்று இருக்கிறது.

1940 - இல் ராயல் விமானப் படைக்காக ரோல்ஸ் - ராய்ஸ் மெர்லின் எஞ்சின்கள் தயாராயின. இவற்றைச் செய்யும் பொறுப்பைப் பாக்கர்ட்ஸ் என்பவர் ஏற்றுக்கொண்டார். பின்னால் யுத்தத்தின்போது அமெரிக்க விமானப் படைகளுக்கு இது பெரும் பலமாக இருந்தது.

ரோல்ஸ் - ராய்ஸ் ஸ்தாபனத்தார் சொல்லிச் செய்த ஜெட் எஞ்சின்கள் இன்று அமெரிக்காவில் மிகவும் பயன்படுகின்றன. "இந்த எஞ்சின்கள் வெகு வேகமாகப் போகக் கூடியவை. அதோடு உறுதியாகவும் இருக்கின்றன; இயக்குவதற்கும் செலவு அதிகமாகிறதில்லை" என்று தெரிகிறது.

1914 - இல் ரோல்ஸ் - ராய்ஸ் ஒன்றின் பின்புறத்தில் உட்கார்ந்தபடி ஹெய்க், பிரெஞ்சு என்ற ராணுவத் தலைவர்கள் போரிட்டார்களாம். அரேபியாவில் கர்னல் லாரன்ஸ் என்பவர் 9 ரோல்ஸ் - ராய்ஸ் ராணுவக் கார்களை வைத்துக்கொண்டு துருக்கியர்களை எதிர்த்துச் சமாளித்தாராம். "நிறைய டயர்களுடன் ஒரே ஒரு ரோல்ஸ் - ராய்ஸ் மட்டும் இருந்தால் போதும். என் வாழ் நாள் முழுவதும் அதை வைத்துக்கொண்டே காலந்தள்ளி விடுவேன்" என்றாராம்.

1932-இல் ஹென்ரி ராய்ஸ் தயாரித்துக் கொடுத்த ஒரு ரோல்ஸ் - ராய்ஸ் எஞ்சின்தான், பின்னால் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் நேச நாடுகளின் விமான சக்தி நீடித்து நின்றதற்குக் காரணமாக இருந்தது. பிரிட்டிஷ்

டாங்கிகளில் சில, ரோல்ஸ்-ராய்ஸ் தயாரித்தவையே.

யுத்தத்துக்குப் பின் ரோல்ஸ்-ராய்ஸ் ஸ்தாபனத்தார் விமானத்துக்கு வேண்டிய எஞ்சின்களைத்தான் அதிகமாகத் தயாரிக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் உல்லாசக் கார் செய்வதை நிறுத்திவிடவில்லை.

சுமார் 6915 பவுனுக்கு 'ஸில்வர் ரெய்த்' கார் ஒன்றுதான் இருப்பதற்குள் மலிவான ரோல்ஸ்-ராய்ஸ். இதைத்தான் சாதாரணமான பேர்வழிகள் வாங்க முடியும். எட்டுப் பேர் உட்காரக் கூடிய ஒரு மாடலை, மன்னர்கள், கோடீசுவரர்கள் முதலியவர்கள் 'ஆர்டர்' கொடுத்தால் தயாரித்துத் தருகிறார்கள். ஜெனரல் பிராங்கோ, ஆகா கான், குவேயிட் மன்னர் இப்படிப் பல பேர் இந்த மாடல் வைத்திருக்கிறார்கள்.

ரோல்ஸ்-ராய்ஸ்பற்றிய ஒரு ரசமான விஷயம் இது: ஸ்பெயினில் உல்லாசப் பிரயாணம் செய்யப் போயிருந்த ஒருவரிடம் நல்ல ரோல்ஸ்-ராய்ஸ் கார் ஒன்று இருந்தது. பாதிப் பிரயாணத்தில் பின் சக்கர அச்சு ஒன்று முறிந்துவிட்டது. உடனே டெர்பியிலுள்ள ரோல்ஸ்-ராய்ஸ் கம்பெனிக்கு அவர் ஃபோன் செய்தார். மறு நாளே இரண்டு உத்தியோகஸ்தர்கள் ஏரோப்ளேனில் புதிய அச்சோடு வந்து அதைக் காரில் பொருத்திக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

ஆறு மாதம் ஆகியும் அதற்கான 'பில்' வராமற் போகவே, காரின் சொந்தக்காரர் ரோல்ஸ் கம்பெனிக்கு எழுதினார். விரைவில் பதிலும் கிடைத்தது:

"அன்புள்ள ஐயா, உங்கள் கடிதம் கிடைத்தது. எங்களுக்கு விஷயம் புரியவில்லையே! நாங்கள் தயாரிக்கும் அச்சு ஒரு காலும் உடையாது; அவ்வளவுதான். இப்படிக்கு, ரோல்ஸ்-ராய்ஸ் லிமிடெட்" என்று அதில் கண்டிருந்ததாம்.

'ரோல்ஸ்-ராய்ஸ் கம்பெனியே பரீட்சித்துப் பார்த்துச் சம்மதித்த பிறகுதான் எந்த டிரைவரும் அந்தக் காரை ஓட்டவேண்டுமாம்'- இப்படி ஒரு கட்டுக் கதை ரோல்ஸ்-ராய்ஸைப்பற்றி வழங்கி வருகிறது. உண்மையில் யார் வேண்டுமானாலும் ஓட்டலாம்; ஆயினும், கம்பெனியாரிடம் பயிற்சி பெற்று நற்சாட்சி பத்திரம் வாங்கின டிரைவராக இருந்தால் அவனுக்கே ஒரு பெருமைதானே? ஆனால் அப்படி நிபந்தனை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ரோல்ஸ்-ராய்ஸ் வாங்கினவர் அதை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்; அவ்வளவுதான்.

ஓட்டுபவர் தந்த-ஸ்டீயரிங் சக்கரத்தைக் கையில் பிடித்த இந்திய மகாராஜாவாக இருந்தாலும் சரி, சாதாரண விமானம் ஓட்டும் ஃப்ளையிங் விங் என்ற மாடலைச் செலுத்தும் விமானியாக இருந்தாலும் சரி, உயர்ந்த ரக எஞ்சின் என்ற நினைவோடு அதற்குரிய மதிப்புக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

நீரும் குமிழியும் ஒன்றே. குமிழி நீரில் தோன்றி நீரில் மிதந்து முடிவில் நீரில் மறைகிறது. அதுபோலவே ஜீவனும் பரமாத்மாவும் ஒன்றே.

—பரமஹம்ஸர்

நிறச் சிகிச்சை

★

பச்சை, சிவப்பு, ஊதா, மஞ்சள் முதலிய பல நிறங்களிலே குழந்தை முதல் பெரியவர்கள் வரை எல்லாருக்கும் என்னவோ ஒரு வியப்பு உண்டாகிறது. இவை நம் மனத்தை எப்படியெல்லாந்தான் ஆட்டி வைக்கின்றன! அதை விளக்கும் இந்தக் கட்டுரைக்கு ஆதாரம் 'வீக் எண்டு பிக்சர் மகஸின்' என்ற பத்திரிகையில் வாலஸ் வார்டு என்பவர் எழுதியுள்ள விவரங்கள்.

தொழில் துறைகள் வளர்ந்ததன் மூலம் நிறங்களைப்பற்றிய ஆராய்ச்சி மிகவும் முன்னேறியிருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் சில வைத்தியர்களும் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் நம் உடம்பினின்று தோன்றும் 'கலர் ஆரா' என்னும் வர்ண சோபையின் 'அலை நீளம்' (வேவ்லெங்த்) என்ன என்று இருபத்து நாலுமணி நேரம் அளவிட்டு அறிகிறார்கள். (இந்த வர்ண சோபை எப்போதும் நம் நிழல் போல் நம்மைச் சுற்றி இருந்து வருகிறது.) பிறகு இன்ன நிறங்கள் கொண்ட சூழ்நிலையில் நாம் வசித்தால் உடம்புக்கு நல்லது என்று சொல்கிறார்கள்.

தலை வலியில் பலவிதம் உண்டு. அவைகளில் சிலவற்றைப் போக்க நீலம் அல்லது ஊதா ஒளி மிகவும் பயன்படுகிறது. ரத்த அழுத்தம் குறைவாக இருந்தால் சிவப்பு ஒளி அதைச் சரிப்படுத்திவிடும்; ரத்த அழுத்தம் அதிகமாக இருந்தால் லேசு நீலமும் பசுமையும் அதைப் போக்க உதவும். வயிற்றுக்கு நேரே மஞ்சள் ஒளி அல்லது நீலமும் பசுமையும் கலந்த ஒளி பட்டு வந்தால் ஜீரண சக்தியை விருத்தி செய்யும்.

சென்ற நூற்றுண்டின் இறுதியில், பல நிறமுள்ள அறைகளில் சித்தப் பிரமை பிடித்தவர்களைப் பல நிற விளக்கு வெளிச்சத்தில் புழங்க விட்டால், அவர்கள் குணமடைவார்கள் என்ற நம்பிக்கை பரவலாயிற்று. சில நிறங்களைப் பார்த்து வந்தால் மனக் கவலை நீங்கும் என்பது பொதுவாகத் தெரிந்த விஷயம். கவலை நிறைந்தவர்கள் சிவப்பு வர்ணம் பூசின அறையில் கொஞ்ச காலம் வசித்து வந்தால் மனக் கவலை நீங்கிச் சகஜமாகச் சிரித்துப் பேச ஆரம்பிப்பார்கள், அவர்களுக்குப் பசியும் எடுக்கும்

என்று ஆராய்ச்சி மூலம் தெரிந்தது. ஆனால், இதுவே நிரந்தரமான சிகிச்சை என்று எண்ணி விடக்கூடாது. இதே மாதிரி, சில நோயாளிகளையும் நீலம் அல்லது பச்சை நிறம் அமைந்த சூழ்நிலையில் வைத்தால் அவர்களுக்கு நிம்மதி ஏற்படும்.

அமெரிக்காவில் மேரிலாந்து என்ற இடத்தில் வசித்து வந்த ஒருத்திக்கு ஏதோ தீராத நோய்; அது இன்னதுதான் என்று யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவள் உலகம் முழுதும் சுற்றினாள். கடைசியில் ஐரோப்பாவில் இருந்த ஆரோக்கிய தீர்த்தம் ஒன்றில் ஸ்நானம் செய்தபிறகு அது தீர்ந்தது. ஆனால் அங்கிருந்து திரும்பி ஊருக்குச் சென்று இரண்டு மூன்று வாரத்துக்கெல்லாம் மறுபடியும் நோய் அவளைப் பிடிக்கத் தொடங்கியது. அந்த ஆரோக்கிய தீர்த்தத்தை வரவழைத்து உபயோகித்துப் பார்த்தாள். ஒரு பலனும் ஏற்படவில்லை. அவளுக்கு வைத்தியம் பார்த்து வந்த டாக்டர், ஒரு நாள் உள்ளே வரும்போது அவளுடைய வேலைக்காரி, "அப்பப்பா! இந்த வீட்டில் இனிமேல் என்னால் வேலை செய்ய முடியாது. கண் பூத்துப் போகிறது" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். சுவரெல்லாம் பளிச்சுப் பளிச்சென்று வர்ணம்-அதுவும் சிவப்பு நிறம்-பூசியிருந்தது தான் இதற்குக் காரணம் என்று டாக்டர் கண்டுகொண்டார். உடனே அவர் அந்த ஆரோக்கிய ஸ்தலத்து அதிகாரிக்குக் 'கேபிள்' மூலம் செய்தி அனுப்பிச் சில விஷயங்களைத் தெரிந்துகொண்டார். அந்தத் தீர்த்தக் கரையில் இருந்த மாதிரியே வீட்டிலும் மெல்லிய நீலம் பூசச் சொன்னார். நோயால் வாடிய பெண் அந்த நீலம் தனக்குப் பிடிக்கவில்லை என்றாள். என்றாலும் இப்படிச் செய்த பிறகே அவள் உடம்பு குணமாயிற்று.

சிக்காகோவில் விஞ்ஞானப் பித்தர் ஒருவர், ஒரு பெரிய ஹாலில் விருந்து நடக்கும்போது அங்கிருந்த விளக்குகளின் வெண்மையான கிரணங்களிலிருந்து பச்சையும் சிவப்பும் தவிர மீதிக் கிரணங்களையெல்லாம் சிறிது சிறிதாக நீக்கிவிட்டார். கடைசியில் மிஞ்சிய பச்சைச் சிவப்பு ஒளியில், தட்டில் பரிமாறியிருந்த மாமிசத்துண்டு வெளுத்தும், கறிகாய் ஊதாச் சிவப்பாகவும், ஸாலட் என்ற கதம்பம் நீலம் பாரித்தும், பால் ரத்த நிறமாகவும் தோன்றின. வந்திருந்த விருந்தாளிகளுக்குப் பசி மந்தித்துவிட்டது. விருந்துண்ட சிலருக்குக் கடுமையான ஜுரமும் கண்டுவிட்டது.

இது போகட்டும். ஹாலிவுட் வாசிகளைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? சிவப்பும், ஊதாச் சிவப்பும் கலந்த வெளிச்சம் பட்டால் முகத்தில் சுருக்கம் இருந்தாலும் தெரிகிறதில்லையாம். வயதானவர்கள்கூட அழகாகத் தோன்றுகிறார்களாம். 'நைட் கிளப்' என்ற கேளிக்கைச் சங்க நிர்வாகிகளைக் கேளுங்கள்: "அம்பர் (கோந்துபோன்ற மஞ்சள்) நிற விளக்குப்

போட்டுவிட்டால் போதும்; விருந்தாளிகள் நெடுநேரம் இங்கே பொழுது போக்கி விட்டுப் போகிறார்கள்" என்கிறார்கள்.

விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்ததில் நிறம் என்பதும் ஒலியலைகளைப்போன்றே ஒருவித அலைகள்தான் என்று தெரிகிறது. மனித உடலை இந்த நிறங்கள் பாதிக்கின்றன என்று சமீபத்தில் நிரூபணமாகி யிருக்கிறது.

பல தொழிற்சாலைகளில் இப்போதெல்லாம் இதற்கென்றே சில நிற ஆராய்ச்சி நிபுணர்களை நியமித்துத் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடம், பொருள் விற்பனை செய்யும் அறை இவைகளைக் கவர்ச்சியாக இருக்கும்படி செய்து வருகிறார்கள். விற்பனைச் சாமான்களைச் சரியான நிறமுள்ள காகிதங்களிலோ பையிலோ வைத்துக் கட்டிக் கண்ணுக்கு எடுப்பாக இருக்கும்படி செய்து வருகிறார்கள்.

இந்த மாதிரி நிபுணர்கள், விமானங்களில் பழுப்பு, மஞ்சள் நிறங்களைப் பூசாமல் அவைகளுக்குப் பதில் பச்சையும் நீலமும் பூசும்படி சொல்லி வருகிறார்கள்; இதனால் விமானப் பிரயாணத்தின்போது மயக்கமோ, ஜுரமோ வருவதில்லையாம். ஒரு விமானக் கம்பெனியார் மஞ்சள் தலையணை. உறை, போர்வை எல்லாவற்றையுங் கூட எடுத்துவிட்டு வெள்ளை அல்லது பச்சை நிறத்துணிகளை வாங்கிப் போட்டார்கள்; ஏன், விமானத்தில் பிரயாணம் செய்யும்போது, மஞ்சளாக இருக்கிற பண்டத்தைக்கூடச் சாப்பிடக் கொடுக்கவில்லையாம்.

ஒரு தொழிற்சாலையைச் சேர்ந்த போஜனகூடத்தில் ஒரே குளிராக இருக்கிறதென்று சில பெண்கள் கோட்டணிந்து கொண்டே சதா சாப்பிட வந்தார்கள். தொழிற்சாலை எஞ்சினீர் இந்த மாதிரி விஷயத்தில் அநுபவமுள்ளவர். நிற ஆராய்ச்சிநிபுணரைக்கூப்பிட்டு இதற்கென்ன செய்யலாம் என்று கேட்டார். நிபுணர் அங்கே சுவரெல்லாம் நீலநிறம் பூசி யிருப்பதைக் கண்டார். அதற்கேற்றபடி, கீழ் எல்லாம் ஆரஞ்சு நிறம் பூசி, நாற்காலி முதுகுகளில் அதே நிறத்தில் துணி போர்த்து வைக்கச் சொன்னார். விரைவில் அங்கே சாப்பிட உட்கார்ந்தவர்களுக்குக் குளிர் நீங்கிவிட்டது; கோட்டை யெல்லாம் கழற்றி விட்டார்கள்.

சில இடங்களில் நிகழ்ந்த ரசமான சம்பவங்களைப் பாருங்கள். ஒரு பிரபல ஹோட்டலில் சுவரெல்லாம் சிவப்பு வர்ணம் பூசும்படி சொன்னார் நிற ஆராய்ச்சி நிபுணர். அப்படிப் பூசினதும் சாப்பிட வருபவர்களுக்குள்ளே அடிக்கடி சச்சரவு மூள ஆரம்பித்துவிட்டது. பிறகு நிபுணர் வெள்ளி நிறத்தில் சில உருவங்களை இடை இடையே தீட்டச் சொன்னார். அப்புறம் அங்கே வருபவர்கள் சிரித்துப் பேசத் தொடங்கிவிட்டார்களாம்.

சிக்காகோவில் மாமிசம் விற்கும் மார்க்கெட்டில் சுவரில் வெள்ளையும் கூரையில் மஞ்சள் நிறமும் பூசினார்கள். அது முதல் விற்பனை ஒரேயடியாகக் குறைந்துவிட்டது. மஞ்சளைப்

பார்த்துவிட்டுக் காலி இடத்தை நோக்கினல் நீலமாகத் தெரியும் என்ற விஷயம் அந்த மார்க்கெட் முதலாளிகளுக்குத் தெரியாது. அந்தச் சமயத்தில் நல்ல சிவப்பு மாமிசத் துண்டங்கூட ஒருவித ஊதா நிறங்கலந்து கெட்டுப்போனதுபோல் தோன்றும். இதுதான் விற்பனை குறைந்ததற்குக் காரணம். பிறகு நீலமும் பசுமையும் கலந்த நிறம் பூசினர்கள். அப்போது சாதாரணமாகக் காண்பதைவிடப் பின்னும் செக்கச்செவேல் என்று புத்தம் புதிதாக மாமிசத்துண்டு விளங்கியது.

ஞாபகம் இருக்கிறதா?

ஒரு பிரபல நடிகர் தம்முடைய பழைய ஞாபகங்களை எழுதிக்கொண்டிருந்தார். ஒரு நாள் அவருடைய நண்பர் ஒருவர் அவரை டெலிஃபோனில் கூப்பிட்டு, "சார்லஸ், உங்கள் பழைய நினைவுகள் புஸ்தகம் எந்த நிலையில் இருக்கிறது?" என்று விசாரித்தார்.

"அதெல்லாம் ரொம்ப தூரம் எழுதியாயிற்று. கொஞ்சம்தான் பாக்கி. இவ்வளவு அன்பாக நீ விசாரித்தாயே. வந்தனம்" என்றார் நடிகர்.

"வேறென்றும் இல்லை. ஐம்பதாயிரம் பிராங்குகள் உனக்கு ஒரு சமயம் நான் கடன் கொடுத்தேனே. அந்தக் கட்டத்துக்கு வந்துவிட்டாயோ, இல்லையோ என்று எனக்கு ஒரு சந்தேகம். அதை அறியத்தான் கேட்டேன்."

—'லி கூரியெர் டி லிமோஜென்'

பிரார்த்தனையின் பலம்

ஒரு வாலிபச் செம்படவன் சொன்னது இது:

கடல் ஓரேயடியாய்க் கொந்தளித்தது. படகு கவிழாமல் சுக்கானை நான் கெட்டியாகப் பிடித்துச் சமாளித்துக் கொண்டிருந்தேன். பக்கத்திலே அப்பா நின்றுகொண்டிருந்தார். மகா ஆபத்தான நிலையில் நாங்கள் இருந்தோம். "இப்போது வீட்டிலே என் மனைவி என்ன செய்துகொண்டிருக்கிறள், தெரியுமா? 'ஆண்டவனே, உம் உள்ளங்கையிலே இருக்கிறது கடல். அதை அடக்கி என் கணவரையும் மகனையும் மற்றவரையும் காப்பாற்று' என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறள்" என்றார் அப்பா.

சற்று நின்றார். பிறகு, "அவள் பிரார்த்தனை வீண் போகாமல் பலிக்க வேண்டாமா? பாய் மரத்தை மடக்கிப் படகை ஜாக்கிரதையாக எல்லாரும் வலியுங்கள்" என்று கத்தினர்.

—'தி -மான் -ஹூ- லீஸ் ஸ்க்ராப் புக்'

பிரமிக்கத் தக்க இந்த ஸம்பவம் உருக்க மூட்டுவதாயும் இருக்கிறது.

அதிசய இரட்டை

★

இரண்டு குழந்தைகள் சிக்காகோ நகர யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்த இல்லிநாய்ஸ் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தன; இரண்டும் மிக அழகான ஆண் குழந்தைகள். கடைசல் பிடித்தது போன்ற உடம்பு; மினுமினுக்கும் கரு நீலக் கண்கள்; மனங்கவரும் புன்சிரிப்பு-இந்த லட்சணங்களைப் பெற்றிருந்தன. பதினைந்து மாதக் குழந்தைகள்தான். கைதட்டி விளையாடினால், அவர்களுக்கு வெகு சந்தோஷம். 'ஹி', 'மம்மா', 'தத்தா' என்ற வார்த்தைகளை அவைகளுக்குப் பேசத் தெரியும். தவளையின் பெயரை உச்சரிக்கக்கூட அவை இப்போது கற்கத் தொடங்கிவிட்டன. ஏனென்றால், அவைகளுக்கு வேடிக்கை காட்ட, ஆளுக்கு ஒரு ரப்பர்த் தவளையை அம்மாவும் அப்பாவும் வாங்கிக் கொடுத்திருந்தார்கள்.

இரண்டு குழந்தைகளில் ஒன்றுக்கு ராட்னி டீ ப்ராடி என்று பெயர்; மற்றதற்கு ரோகர் லீ ப்ராடீ என்று பெயர். ரோகரைவிட ராட்னி சற்றுச் சிறிய குழந்தை. ஆகவே, ராட்னியிடம் எல்லாரும் சற்று அதிகக் கவனம் செலுத்தினார்கள். இதைக் கண்டு ரோகருக்கு



காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்: 15-12-'52, 5-1-'53, 12-1-'53), கேரெஜ் பில்டிங், டென்வெர் 2, கொலராடோ, யு. எஸ். ஏ.

எரிச்சல் உண்டாகும். ராட்னியை ரோகர் முகத்தில் அறையும்; காதைப் பிடித்திழுக்கும்; கத்திக் கூச்சலிடும். ராட்னி இத்தனை உபத்திரவத்தையும் சகித்துக்கொள்வது மட்டும் அல்ல: சிரித்துக்கொண்டே யிருக்கும். அதை யாராவது திட்டினுல்கூட அதற்குச் சிரிப்புத்தான்.

குழந்தைகளின் இருதயத்தில் ஏதோ முணுமுணுப்பதுபோல் சிறிது இரைச்சல் இருந்தது. வேறு குறைகள் இல்லை. ஆனுல், ஒரே ஒரு விசித்திரம்: அவைகள் மண்டையோடு மண்டை ஒட்டிய இரட்டைக் குழந்தைகள். உடம்புகள் எதிர் எதிர்த் திசையில் நீண்டிருந்தன.

அவைகளின் தாய்க்கு மிஸஸ் ராய்ட் ப்ராடீ என்று பெயர். அவள் ஒரு குடியானவரின் மனைவி. இந்த இரட்டை பிறப்பதற்கு முன், சாதாரணக் குழந்தைகள் மூன்றை அவள் பெற்றிருக்கிருள். இந்த இரட்டைப் பிரவசம்கூட ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் இருந்தது; முதலில் ஒழுங்காக ஒரு குழந்தையின் கால்தான் வெளிவந்தது. போன மாசம் மறுபடியும் சாதாரணமான ஒரு பெண் குழந்தை அவளுக்குப் பிறந்திருக்கிறது.

இந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்த ஆருவது வாரத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்தன. இந்தக் குழந்தைகள் விஷயத்தில் என்ன செய்வதென்று புரியாமல் அது முதல் டாக்டர்கள் தவிக்கலானுர்கள். விஷயம் மிகவும் சிக்கலானது. ஆபரேஷன் செய்து இந்தக் குழந்தைகளைப் பிரிக்கலாமா, கூடாதா? பிரிக்காவிட்டால், இவைகளின் வாழ்க்கை மிகவும் பயங்கர விபரீதமாய்ப் போகுமே! ஆனுல், ஆபரேஷன் செய்யும்போது, குழந்தைகளுள் ஒன்ருே அல்லது இரண்டுந் தானே இறந்துவிட்டால் என்ன செய்வது? "ஆபரேஷன் செய்வது ஆபத்துத்தான்; இருந்தாலும், அதற்குத் துணிய வேண்டியதுதான்" என்று டாக்டர்கள் சொன்னுர்கள். பெற்ருேரும் அதற்குச் சம்மதித்தார்கள்.

1952 டிசம்பர் மாதம் 17-ஆம் தேதி, ஆபரேஷன் செய்ய டாக்டர்கள் ஆயத்தமானுர்கள். இதற்கு முன்பு இதே டாக்டர்கள் இந்த மாதிரி பத்துப் பன்னிரண்டு இரட்டைகளை ஆபரேஷன் செய்து தேர்ந்தவர்கள். அந்த இரட்டைகளில் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித் தனி மூளை உண்டு என்றும், இரண்டு குழந்தைகளுக்கும் பொதுவான ரத்தக் குழாய் எதுவும் இல்லை என்றும் ருசுப்பித்தவர்கள்.

அப்படித் தேர்ந்த டாக்டர்களாயிருந்தும், இந்த இரட்டையின் ரகஸ்யத்தை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. பிரமாதமாக எக்ஸ் ரே முறைகளை யெல்லாம் கைக்கொண்டு இந்த இரட்டை மண்டையைப் பரிசோதித்தார்கள். மண்டையைப் பிளந்தால் உள்ளே என்ன இருக்கும் என்பதை அவர்களால் தெரிந்துகொள்ளவே முடியவில்லை. மெல்ல எலும்புகளை நறுக்கிவிட்டார்கள். ஆனுல், தோலையும் சதையையும் மட்டும் நறுக்கிப் பிரிக்காமல்

அப்படியே ஒட்டிக்கொண்டிருக்கும்படி விட்டுவிட்டு, மறுபடியும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். மண்டை ஒட்டிய இரட்டைகள் இதற்கு முன் இரண்டே இரண்டுதான் வந்திருக்கின்றன. அந்த இரண்டு கேஸ்களிலும் குழந்தைகள் மாண்டுவிட்டன. ஆகவே, டாக்டர்களுக்கு இந்த இரட்டையை ஆபரேஷன் செய்வதில் அவ்வளவாக நம்பிக்கை இல்லை.

இந்த இரட்டையின் இறுதி ஆபரேஷனைத் தொடங்கிய போது 15 பேர் கொண்ட வைத்திய கோஷ்டி சூழ்ந்திருந்தது. நரம்புகளை அறுத்துச் சத்திரசிகிச்சை செய்வதில் வல்லவரான ஆஸ்கர் ஷுகர் என்பவர், தமக்கு உதவியாக நான்கு டாக்டர்களை வைத்துக் கொண்டு, மண்டைகளைக் கவனித்துக் கொண்டார். ரத்தம் பாய்ச்சி உதவுவதில் இரண்டு டாக்டர்கள் ஈடுபட்டார்கள். மயக்க மருந்து கொடுக்கும் வேலையை இரண்டுபேர் ஏற்றுக் கொண்டார்கள். குழந்தை வைத்திய நிபுணர் இரண்டு பேரும் நான்கு நர்ஸுகளும் துணையாக இருந்தார்கள். இந்தப் பதினைந்து பேரும் பத்து மணி நேரம் உழைத்தார்கள். இங்கே சிறிது நறுக்குவார்கள்; அங்கே ஒரு தையல் போடுவார்கள். சதா காலமும் ரத்தம் மட்டும் குழந்தைகளுக்குப் பாய்ச்சிக்கொண்டேயிருந்தார்கள். இந்த ஆபரேஷனால் சிறிய குழந்தை ராட்னி அதிகமாய்க் களைப்படையவில்லை. பெரிய குழந்தை ரோகருக்கு மூன்று முறை சோகம் போட்டுவிட்டது.

இவ்வளவு தூரம் ஆபரேஷனெல்லாம் நடந்து முடிந்த கடைசி நேரத்தில்தான். மிகவும் மோசமான ஒரு விஷயம் டாக்டர்களுக்குத் தெரிய வந்தது. இரண்டு குழந்தைகளுக்கும் தனித்தனி ரத்தச் சுழற்சி (ப்ளட் ஸர்க்குலேஷன்) நடக்க வேண்டுமானால், ஒவ்வொரு குழந்தையின் மண்டை உச்சியிலும் 'ஸாஜிட்டால் ஸைனஸ்' என்ற பெரிய ரத்தக் குழாய் (வேன்) தனித்தனியே முன்னும் பின்னுமாக ஓடவேண்டும். தலையில் உள்ள சிறுசிறு குழாய்களிலிருந்து ரத்தத்தைச் சேகரித்து, 'ஜுகுலர் வேன்' என்ற கழுத்துக்குழாய் வழியாக மீண்டும் இருதயத்துக்கு அனுப்புவது இந்த 'ஸாஜிட்டால் ஸைனஸ்' என்ற குழாயின் வேலை. இந்தத் தலைக்குழாய் இந்த இரட்டைக் குழந்தைகளுள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இல்லை. இரண்டுக்குமாகச் சேர்ந்து ஒரே ஒரு குழாய்தான் இருந்தது. இதை இரண்டு பாகமாய்ப் பிரிப்பதற்கும் வழியில்லை; இன்னொரு குழாய் தயாரிப்பதற்கும் மார்க்கமில்லை. இந்தக் குழாயை ஒரே ஒரு குழந்தைதான் பெற முடியும். அது அநேகமாய் வாழலாம்; மற்றது சாகவேண்டியதுதான். சிறிய குழந்தை ராட்னியிடந்தான் வாழும் குறியிருந்தது. ஆகவே, ராட்னி இந்தக் குழாயை அடித்துக் கொண்டு போய்விட்டது.

வேறு வேறாகப் பிரித்த அந்த இரண்டு சிறு மண்டைகளையும் ப்ளாஸ்டிக், அலுமினியத் தகடு

இவைகளைக் கொண்டு, டாக்டர்கள் மூடி மறைத்தார்கள். பன்னிரண்டு மணி நேரம் கை சோர மனம் பரபரக்க அவர்கள் உழைத்ததோடு ஆபரேஷன் பூர்த்தியாயிற்று. இந்த இரட்டைகளின் வாழ்க்கையிலேயே முதல் முதலாக ராட்னி, ரோகர் இரண்டு குழந்தைகளும் ஒன்றின் பக்கத்தில் ஒன்று தனித்தனியே கிடந்தன. அவைகளை வெவ்வேறு தள்ளு வண்டிகளில் வைத்து ஆபரேஷன் அறைக்கு வெளியே இழுத்துக் கொண்டு வந்தார்கள் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, அவைகளின் தந்தைக்கு உணர்ச்சி தாங்கவில்லை. நெஞ்சடைக்கும் குரலில், ‘குழந்தைகளைத் தனித்தனியே பார்க்கும் போதுதான் நன்றாயிருக்கிறது’’ என்று கத்திவிட்டார்.

ராட்னி வெகு சீக்கிரம் குணமடைந்து வரத்தொடங்கியது. அது பிழைத்து விடும் என்றும், கொஞ்ச காலத்தில் உலோகத்தால் மண்டையோடு செய்து போட்டுவிட்டால் சரியாய்ப் போகும் என்றும் டாக்டர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ரோகருந்தான் உயிர் வாழ மிக்க வீரமாய்ப் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால், இரண்டு வாரம் ஆகிவிட்டது; இன்னும் அதற்கு மூர்ச்சை தெளியவில்லை.

ராட்னி முன்போலவே ஒழுங்காகத் தூங்கி விழித்தது; பலரையும் பொருள்களையும் கவனித்தது; பேசியது ஆனால், கொஞ்சம் கொஞ்சம் மயங்கின மாதிரி கிடந்தது. நிலைமை இன்னும் நெருக்கடியானது தான்.

இந்த நிலையில், ப்ளாஸ்டிக் மூடியோடு மண்டையை விட்டு வைத்தால் சீழ்பிடித்து அபாயம் நேரும். மண்டையில் தோல் ஒட்டி (‘க்ராஃப்ட்’ செய்து) மூடவேண்டும்; ப்ளாஸ்டிக் ஸர்ஜன் பால் டபிள்யூ. க்ரீவி இரண்டாவது ஆபரேஷனைத் தொடங்கினார். முதலில் ராட்னியின் நெற்றியிலிருந்து சதை எடுத்து, மண்டையில் வைத்து மூடினார். பிறகு முதுகிலிருந்து சதையெடுத்து நெற்றியில் ஒட்டினார். இந்த ஆபரேஷன் இரண்டு மணிநேரம் நடந்தது. ராட்னி மிகவும் சௌக்கியமாகவே இருப்பதால், அதைக் கவனித்துக்கொண்டிருந்த பிரத்தியேக நர்ஸுகளைப் போகச் சொல்லிவிட்டார்கள்.

வாரம் மூன்றாகிவிட்டது. ரோகர் மட்டும் மூர்ச்சை தெளியவேயில்லை. எந்த நிமிஷத்திலும் அதற்கு மரணம் நேரலாம் என்று டாக்டர்கள் அஞ்சிக்கொண்டே யிருக்கிறார்கள்.

[இதுவரை உள்ள விவரம் ‘டைம்’ பத்திரிகையில் காண்கிறது. கடைசியாக வந்த யு. பி. ஏ. செய்தியின்படி, ஜனவரி 19-ஆம் தேதி இரவு ரோகர் மாண்டுவிட்டது. ராட்னி மேலும் மேலும் குணமடைந்து வருகிறது.]

பறக்கும் தட்டு

★

சென்னையில் கூட இந்தப் 'பறக்கும் தட்டு'க்களைச் சமீபத்தில் கண்டோம் இவற்றின் உண்மைதான் என்ன? 'எரிநட்சத்திரம்', 'உருவெளி' என்கிறார்கள் சிலர். ரகஸ்யமாய் அமெரிக்கர் பரீட்சிக்கும் 'வாண விமானம்' (ராக்கட்) என்கிறவரும் உண்டு. ஆனால், அந்த அமெரிக்கரே என்ன நினைக்கிறார் கள்? அதை விவரிக்கும் இந்தக் கட்டுரையில் கண்ட விஷயங்கள் 'காரொனெட்' பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றன.

1947-ஆம் வருஷம் ஒரு நாள் கென்னத் அர்னல்டு என்ற ஒரு வியாபாரி, அமெரிக்காவைச் சேர்ந்த வாஷிங்டன் மாகாணத்தில் உள்ள மவுண்ட் ரெய்னியர் என்ற மலையைக் கடந்து தம் விமானத்தில் சென்றுகொண்டிருந்தார். அப்போது அதிசயமான சக்கரம் போன்ற சில, வஸ்துக்கள், நம்ப முடியாத அளவு அதிவேகமாக அணி வகுத்துப் பறந்து கொண்டிருப்பதை அவர் கண்டார். சுழற்றி வீசிய தட்டுக்கள் பறப்பதுபோல், அந்தச் சக்கரங்கள் பறந்தனவாம். அதிலிருந்துதான் இந்தப் 'பறக்கும் தட்டு' (ஃப்ளையிங் ஸாஸர்) விவகாரம் ஆரம்பித்தது. அதற்குப் பிறகு, அமெரிக்கா எங்கும் இருந்து 'பறக்கும் தட்டு'க்களை ஜனங்கள் பார்த்த செய்திகள் வரலாயின. "இதெல்லாம் வெறும் மனக்கற்பனை" என்று சிலர் சொன்னார்கள். "இல்லை; இவை வேறு உலகத்திலிருப்பவர் அனுப்பிய வஸ்துக்கள்" என்று மற்றும் சிலர் சொன்னார்கள். இன்று வரை இந்தப் 'பறக்கும் தட்டு'ப் பற்றிய உண்மையை மட்டும் யாராலும் நிச்சயமாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை.

1948-ஆம் வருஷம் ஜனவரி 7-ஆம் தேதி, கெண்டக்கி மாகாணத்தில் உள்ள மாடிஸன்வில் என்ற நகரத்துக்கு மேலே இந்த மாதிரி வஸ்து மற்றொன்று பறந்தது. உடனே அந்த மாகாணத்துப் போலீஸ்காரர், ஃபோர்ட் நாக்ஸ் என்ற கோட்டையிலுள்ள அதிகாரிகளை டெலிஃபோனில் அழைத்தார்கள். "இந்தப் பறக்கும் தட்டு என்கிறார்களே; இவைகளில் ஒன்று, இதோ தலைக்கு மேலே பறக்கிறது. உங்கள் திசையில் வந்துகொண்டிருக்கிறது" என்று தெரிவித்தார்கள். கோட்டைக்குச் சற்றுத் தூரத்திலிருந்த ராணுவ விமான நிலையத்திலர் கவனித்துப் பார்த்தார்கள். ஆகாயத்தில் சிவப்பு வெளிச்சம் ஒன்று தளதள என்று தெரிந்தது. "இதைச் சோதித்துப்



மாண்டல் துரத்தினார்

பார்'' என்று காப்டன் தாமஸ் மாண்டல் என்ற விமானிக்கு உத்தரவிட்டார்கள். உடனே அவர் தம் விமானத்தில் ஏறினார். அது பேரிரைச்சல் போட்டுக் கிளம்பி, 18,000 அடி உயரத்துக்குமேல் போய்விட்டது. ரேடியோ மூலம், "அது ஒரே உலோக மயமாக இருக்கிறது. பிரம்மாண்டமான உருவம் ..'' என்று கீழே உள்ளவருக்குச் செய்தி அனுப்பினார். அப்புறம் "இதோ 20,000 அடி உயரம் வரைக்கும் வந்துவிட்டேன்'' என்றார். இதுதான் அவர் கடைசியாக அனுப்பிய செய்தி. பிறகு அவரிடமிருந்து செய்தி எதுவும் இல்லை. அன்று தினமே இரவு வெகு நேரத்துக்குப்பின் அதிகாரிகள் தேடிப் பார்த்த போது, கோட்டைக்குச் சிறிது தூரத்தில் விமானியின் விமானம் விழுந்து நொறுங்கிக் கிடந்ததைக் கண்டார்கள். "விடிவெள்ளியையே பறக்கும் தட்டு என்று நினைத்துக்கொண்டு, அதைப் பிடிக்க விமானி ஓடியிருக்கிறார். உயரப் போகப் போக அவர் கண் அவிந்துவிட்டது. இவ்வளவுதான் விஷயம்'' என்று சிலர் சொன்னார்கள். ஆனால் பிராணவாயு இல்லாமல் மிக உயரத்தில் கண்ணவிந்து போக நேரும் என்பது நல்ல அநுபவசாலியான ஒரு விமானிக்குத் தெரியாமலா போகும்? அப்படியானால், அந்த விமானியைக் கொன்றது தான் என்ன? அவர் மரணம் அடைந்து பதினைந்து மாசங்களுக்குப் பின், அதிகாரிகளின் உத்தியோக ரீதியான அறிக்கை பிரசுரமாயிற்று. "அந்த ஆச்சரியமான வஸ்து இன்னதென்று இன்னமும் தெரியவில்லை'' என்று அது கூறியது.

1948-ஜனவரி 22-ஆம் தேதி அமெரிக்க விமானப்படை அதிகாரிகள், தங்கள் யந்திர நுட்ப நிபுணர்களுக்கு ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். அது வரைக்கும் 270 பறக்கும் தட்டுக்கள் தென்பட்டிருப்பதாகவும் அவைகளின் உண்மையைப் பரிசோதிக்கும்படியும் அந்த உத்தரவில் கண்டிருந்தது. 1948 அக்டோபர் 1-ஆம் தேதி லெஃப்டினன்ட் ஜார்ஜ் எஃப். கார்மான் என்பவர், ஓர் ஒளிப் பிழம்பைத் துரத்திக்கொண்டு போனார். அது 14 000 அடி உயரம் வானத்தில் பறந்தேறிக் கடைசியில் மறைந்தே போய் விட்டது. "வெள்ளி என்ற



எதீரியா விமானிகள்

கிரகத்திலிருந்துதான் இந்தப் பறக்கும் சக்கரங்கள் வருகின்றன. இவைகளில் அந்தக் கிரகவாசிகள் சவாரி செய்கிறார்கள். இது நிச்சயம்'' என்று 1949-டிசம்பர் 26-ஆம் தேதி ஒரு பலூன் நிபுணர் சொன்னார். "இந்தப் பறக்கும் தட்டு விஷயம் ஒருவரைப் பார்த்து ஒருவர் மயங்கும் ஜனக்கும்பலின் பிதற்றல்" என்று டிசம்பர் 27-ஆம் தேதி விமானப்படை அதிகாரிகள் முடிவு கூறினார்கள். ஆனால் அடுத்த நாளே புதுமையான உருவம் படைத்த வஸ்து ஒன்று ஆகாயத்தில் பறந்ததை வட கரோலினா மாகாணத்தைச் சேர்ந்த ஹாம்லட் நகரவாசிகள் கண்டார்கள். இதற்குள் இந்தப் பறக்கும் தட்டுச் செய்தி அமெரிக்க நாடெங்குமே பரவி, சகல ஜனங்களும் இது பற்றிப் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள். இந்தப் பறக்கும் தட்டுக்கள் உண்மையானவையா? இவை எங்கிருந்து வருகின்றன? "முன் காலத்திலே உலகெங்கும் வாழ்ந்து மறைந்துபோன வம்சத்து மனிதர்கள் சிலர், பூமியின் துருவத்தில் உள்ள குகைகளில் வாழ்கிறார்கள். காந்த சக்தியால் ஆகாயத்தில் இயங்கக்கூடிய ஒருவித விமானங்கள் அவர்களிடம் இருக்கின்றன. நம்முடைய அணுக்குண்டுகள் வெடித்ததும், பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதைக் கண்ட அந்தக் குகைவாசிகள் கலவரம் அடைந்திருக்கிறார்கள். இது என்ன அதிர்ச்சி என்று ஆராய்வதற்காக வெளியே வந்து உலவுகிறார்கள்" என்று ஒரு கோஷ்டியார் சொன்னார்கள். கட்டுக் கதைகளைத் தோற்கடிக்கும் இந்தக் கற்பனையான ஹேஷ்யங்களைக் கேட்டு ஜனங்கள் திகைத்துக்கொண்டிருக்கும்போதே, மேலும் சில பறக்கும் தட்டுக்கள் தென்படலாயின; மேலும் பல ஹேஷ்யங்களும் கிளம்பின.

வெகு சீக்கிரத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. இந்தப் பறக்கும் தட்டுக்களை ருஷியாதான் ஒருகால் அனுப்பிக்கொண்டிருக்கிறதோ என்று சிலர் எண்ணினார்கள். மோட்டார்-கார் யந்திரங்களை முதல்முதல் உற்பத்தி செய்தவர்களில் ஒருவரான லியோ பெண்ட்ஸ் என்பவர், இந்தச் சமயத்தில் இதற்கேற்றாற்போல் ஒரு சங்கதி சொன்னார்: "இருபது வருஷங்



மேலும் மேலும் தென்படுகின்றன

களுக்குமுன் இந்தப் பறக்கும் தட்டைப் போன்ற விமானம் ஒன்றை ஒருவர் ரகஸ்யமாகச் செலுத்திக் காட்டியதை நான் கண்டிருக்கிறேன். அதை அமைத்தவருக்கு ஜார்ஜ் டி பே என்று பெயர். சூனிய வெளியில் பறக்கக்கூடிய தட்டைக் கல் போன்ற ஒரு விமானம் அமைப்பதற்குரிய பிளான் எல்லாம் இவர் தயாரித்து வைத்திருந்தார். இப்போது இந்த டி பே எங்கேயிருக்கிறார் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால், யுத்தத்துக்கு முன்பு இவர் ருஷியாவுக்குப் போய் விட்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது. இப்போதும் இவர் அங்கேதான் இருக்க வேண்டும்.'' பெண்ட்ஸ் இப்படிச் சொன்னதும், பிரமாதமான வாதப் பிரதிவாதங்கள் கிளம்பின. "நம் ராணுவ ரகஸ்யங்களை உளவறிந்து வருவதற்காக ருஷியர்கள்தான் இந்தப் பறக்கும் தட்டுக்களை அனுப்புகிறார்கள்'' என்று சிலர் சொன்னார்கள். "அதெல்லாம் இல்லை. ருஷியர்களிடம் இந்தத் தட்டுக்கள் இருந்தால், இவைகளை நம்மிடம் இப்படி அவர்கள் அனுப்ப மாட்டார்கள். இவை நம் நாட்டில் தவறி விழுந்துவிட்டால், இவைகளின் அமைப்பு ரகஸ்யத்தை நாம் கண்டு கொள்வோம் என்று அவர்களுக்குத் தெரியாதா? அவர்கள் அவ்வளவு முட்டாள்கள் அல்ல'' என்று மற்றும் சிலர் மறுத்தார்கள். கடைசியில், ருஷியர்களுக்கு இந்தத் தட்டுக்களைப் படைக்கக் கூடிய அளவு விமானக் கலை அறிவில் வளர்ச்சி ஏற்படவில்லை என்ற ஏகோபித்த அபிப்பிராயம் அமெரிக்கருக்கு ஏற்பட்டது. விஞ்ஞானிகள் வேறு வகை ஹேஷ்யங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

இப்போது பார்டர்லாண்டு விஞ்ஞான ஆராய்ச்சி ஸகாக்கள் என்ற சங்கத்தார் வேறொரு விதமாக ஊகம் செய்தார்கள். நம் பூமிக்கும் வெள்ளி என்ற கிரகத்துக்கும் இடையே அதிசயமான ஏழு விமானங்கள் உலவிக் கொண்டிருக்கின்றனவாம். அவைகளில் ஒன்றுக்கு எதீரியா என்று பெயராம். இந்த விமானம் எப்படிப்பட்டது என்றே கண்டு பிடிக்க முடியவில்லையாம். ஆனால் அணுக்குண்டு வெடித்ததும்

எதிரியா விமானிகளின் கவனத்தை இந்த வெடியின் தீ இழுத்ததாம். உடனே பூலோகவாசிகளான நம்மிடம் அவர்கள் சிரத்தை கொண்டு நம்மை வந்து ஆராய்கிறார்களாம். அவர்கள் சவாரி செய்யும் சூனிய வெளிக் கப்பல் (ஸ்பேஸ் ஷிப்), எஃகை விடக் கடினமான ஏதோ ஒருவித உலோகத்தால் அமைந்த உறையைப் பெற்றிருக்கிறதாம். காந்த சக்தி ரேகைகள் (மாக்னடிக் லைன்ஸ் அவ் ஃபோர்ஸ்) வழியே பறந்து, அந்தக் கப்பல் நமது பூமியின் வாயு மண்டலத்துக்குள் நுழைகிறதாம். சிவப்பும் பச்சையுமாக ஜொலிக்கும் தீப்பிழம்பு போல இரவிலும், நம்பமுடியாத அளவு வேகமாய்ச் செல்லும் பறக்கும் தட்டைப்போல் பகலிலும் அதுவே நமக்குத் தென்படுகிறதாம். பார்டர்லாண்ட் ஸகாக்களின் இந்த அபிப்பிராயம் எவ்வளவு தூரம் உண்மையோ? எவ்வளவு தூரம் பொய்யோ? நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை.



அமெரிக்கர் இதைக் கட்டுகிறார்களோ?

1950-ஆம் வருஷ நடுவில் ஃப்ராங்க் ஸ்கல்லி என்ற நூலாசிரியர் ஒரு புதிய சங்கதியைக் கிளப்பி விட்டார். 'பறக்கும் தட்டின் உண்மை' (பிஹைண்ட் தி ஃப்ளையிங் ஸாஸர்ஸ்) என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதினார். தம்மிடம் ஒரு விஞ்ஞானி சொன்னதாக ஆசிரியர் ஒரு நிகழ்ச்சியை அந்த நூலில் வர்ணித்திருக்கிறார். ஆனால், விஞ்ஞானியின் பெயரை மாத்திரம் தெரிவிக்கவில்லை. ந்யூ மெக்ஸிகோ மாகாணத்தின் வனாந்தர வெளியில், பறக்கும் தட்டு ஒன்று விழுந்து கிடந்ததாம். அதை நேரே சிலர் கண்டார்களாம் அந்தப் பறக்கும் தட்டில் 16-குள்ளர்கள் இருந்தார்களாம். அவர்களில் எவனும் 42 அங்குல உயரத்துக்கு மேல் இல்லையாம். 16-பேரும் செத்துப் போயிருந்தார்களாம். தட்டின் குறுக்களவு 99.9 அங்குலமாம்; அதன் பெட்டி (காபின்) 72 அங்குல உயரமாம். தட்டின் மற்ற ஒவ்வோர் அளவும் 9 என்ற எண்ணால் மிச்சமில்லாமல் வகுக்கக் கூடியதே. அதில் இருந்த ரேடியோ கருவிகள், காகித ஸிகரெட் பெட்டி அளவே இருந்தனவாம். போர்க் கருவி எதுவும் அந்தத் தட்டில் இல்லையாம். சூடு புகாத உரமான ஒருவித உலோகத்தால் அதற்கு உறை போர்ட்

டிருந்ததாம். பின்னுல், அதே விஞ்ஞானி இந்த மாதிரி வேறு மூன்று பறக்கும் தட்டுக்களேயும் கண்டாராம். இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? வெள்ளியிலிருந்துதான் என்கிருராம் அந்த விஞ்ஞானி. இந்த விசித்திர வரலாறு முழுவதும் ஆசிரியர் ஸ்கல்லியின் பகற்கனவுதானு? அப்படி யாரும் இன்று வரைக்கும் ருசுப்பிக்கவில்லே.

மேலும் மேலும் பறக்கும் தட்டுக்கள் தென்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. 1950 ஏப்ரல் 27-ஆம் தேதி ஆகாயத்தில் ஒரு தீப்பிழம்பை காப்டன் ராபர்ட் எஃப். மான்னிங் என்ற பழுத்த விமானி கண்டார். அவருக்கு அது என்ன என்றே புரியவில்லே. தம் பக்கத்தில் இருந்த தோழரான ராபர்ட் ஆடிக்ஸ் என்ற மற்ருெரு விமானியை அவர் மெள்ள நிமிண்டினுர். "இதை என்ன என்று நினேக்கிறீர்கள்?" என்று கேட்டார். தோழர் நிமிர்ந்து பார்த்தார். தம் ரேடியோ மைக்ரஃபோனேக் கையில் எடுத்தார். சிக்காகோ நகர விமான நிலேய ரேடியோ அதிகாரியை அழைத்தார். "எங்களுக்கு அருகே வேறு விமானம் ஏதாவது பறக்கிறதா? நிலேய அதிகாரியை விசாரியுங்கள்" என்ருர். 'அப்படி ஒன்றும் பறக்கவில்லே" என்று பதில் வந்தது. சட்டென்று, பிரயாணிகளுக்கு ஆடிக்ஸ் அபாய எச்சரிக்கை செய்தார். மான்னிங் தம் விமானத்தைச் செலுத்தி, அந்தத் தீப்பிழம்பைத் துரத்த முயன்ருர். அவருடைய விமானம் எந்தத் திசையில் திரும்பினுலும் சரி, தீப்பிழம்பு மழுப்பி மழுப்பித் தப்பித்துக்கொண்டே போய்க் கடைசியில் இரவின் இருளோடு இருளாய் மறைந்து விட்டது. விமானம் தரைக்கு வந்து சேர்ந்தபின், அதில் சவாரி செய்த அத்தனே பேரும் அந்த நிகழ்ச்சிபற்றி விரிவாக வர்ணித்தார்கள். இந்தப் பறக்கும் தட்டைக் கண்ட சாட்சிகள் 21 பேர். இதற்குப் பிறகு, ந்யூ மெக்ஸிகோ. அலாஸ்கா, கொரியா இப்படி உலகின் எந்த எந்த மூலேகளிலோ ஜனங்கள் பறக்கும் தட்டைக் கண்ட செய்திகள் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கின்றன. ஜனங்கள் கண்டது மாத்திரமா? பொழுது போக்காக ஃபோட்டோ பிடிக்கும் பலர் இவைகளேப் படமும் எடுத்து அனுப்பியிருக்கிருர்கள். அப்படியிருந்தும், இந்தப் பறக்கும் தட்டு என்பது, ஜனக்கும்பலின் வெறும் பிதற்றல் என்றே இன்னமும் சிலர் பிடிவாதமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள்.

"இந்தப் பறக்கும் தட்டு என்பது புரட்சிகரமான ஒரு புதிய விமானமே தவிர வேறென்றும் அல்ல" என்று ஒரு பத்திரிகையில் செய்தி வெளியாயிற்று. ஜனுதிபதி ட்ரூமன் இதைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிடப் போகிருர் என்ற வதந்தியும் கிளம்பியது. கீ வெஸ்ட் என்ற இடத்தில் உள்ள ஜனுதிபதியின் கோடை மாளிகையை, பத்திரிகை நிருபர் படை ஒன்று உடனே முற்றுகையிட்டது. அப்போதாவது

ரகஸ்யம் வெளியாயிற்று? ஜனாதிபதியின் பத்திரிகைக் காரியதரிசி ஒருவர், இந்த நிருபர்கள் இருந்த அறைக்குள் வந்தார்; "கனவான்களே, இந்தப் பறக்கும் தட்டு எதையும் இந்த நாட்டிலோ வேறு நாட்டிலோ யாரும் அமைத்ததாக எந்தவிதத் தகவலும் ஜனாதிபதிக்குத் தெரியாது. இதை உங்களிடம் சொல்லும்படி அவர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அத்தகைய வதந்திகளுக்கெல்லாம் ஆதாரம் எதுவும் இல்லை" என்றார். தட்சணமே பலவிதஊகங்கள் கிளம்பின. பறக்கும் தட்டுக்களை நம் பூலோகத்திலே யாரும் செய்யவில்லை என்றால், அவை வேறு எந்தக் கிரகத்திலிருந்தோதான் வந்திருக்கவேண்டும். இல்லையா? ஆனால், வான ஆராய்ச்சிப் பௌதிக சாஸ்திரி (ஆஸ்ட்ரோ-ஃபிஸிஸிஸ்ட்) ஒருவர், இந்தத் தட்டு, வெறும் 'உருவெளி' (ஆப்டிக்கல் கோஸ்ட்) என்கிறார். வெப்பமான காற்றின் இடப் பெயர்ச்சி (டிஸ்ப்ளேஸ்மெண்ட்) தான் இந்த உருவெளிக்குக் காரணம் என்பது அவர் கருத்து. அது என்னவோ, இந்தப் பறக்கும் தட்டுமட்டும் மனிதர் கண்ணுக்குத் தட்டுப்பட்டுக்கொண்டே யிருக்கிறது. இது மாத்திரமல்ல; 'ரடார்' திரையில் கூடத் தென்பட்டிருக்கிறது. ஆகாயத்தில் இந்தத் தட்டு எங்கிருந்தோ வந்து தோன்றுகிறது; எங்கேயோ போய் மறைகிறது. வெகு சீக்கிரத்திலேயே ஒருநாள் இதன் முழுக்கதையும் வெளிவரத்தான் போகிறது.

சீமாட்டி சந்தேகம்



அலாஸ்காவில் நரிப் பண்ணை ஒன்றைப் பார்க்க வந்தாள் ஒரு சீமாட்டி. மிகவும் அழகான நரி ஒன்றைப் பார்த்து அவள் வியந்தாள். அவளுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

பண்ணைக்காரரைப் பார்த்து, "இந்த நரியிடம் எத்தனை தரம் தோல் உரிப்பீர்கள்?" என்று கேட்டாள்.

"மூன்று தரம்தான், அம்மா. அதற்குமேல் நரிக்குக் கோபம் வந்துவிடும்" என்று அவர் சிரிக்காமல் பதிலளித்தார்.

—'தி கேபிள் கிராம்'

ரமணர்

வாழ்வும் வாக்கும்



ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

வந்த வழியே போ: ஒரு நாள் ரமண முனிவரைத் தரிசிக்கும் பொருட்டு ஓர் இளைஞன் வந்தான். அவன் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவன். வேதாந்த நூல்களைப் படித்தவன். பல பண்டிதர்களை அணுகிப் பாடம் கேட்டவன். வேதத்தையே வெவ்வேறு கொள்கையை உடையவர்கள் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். ஒரு பகுதிக்கே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பொருள் செய்கிறார்கள். அவற்றைக் கேட்டபோது அந்த இளைஞனுக்கு மனக்குழப்பம் உண்டாயிற்று. "யாரிடம் உறுதியான உண்மையைத் தெரிந்துகொள்வது?" என்று அவன் ஏங்கி நின்றான். அவன் காதுக்கு ரமண பகவானுடைய புகழ் எட்டியது. அவர் அநுபவ ஞானி என்பதை அவன் கேள்வியுற்றான். சாஸ்திரங்களால் அறிவதற்கரிய உண்மையை மெய்ஞ்ஞானி அநுபவத்திலே உணர்கிறான் என்பதை அவன் அறிந்தவன். ஆகவே, பகவானைத் தரிசித்துத் தன்னுடைய ஐயத்தை நீக்கிக் கொள்ள வேண்டுமென்று அவன் நினைத்தான்.

மிக்க ஆர்வத்தோடு நெடுந்தூரம் பிரயாணம் செய்து அவன் திருவண்ணாமலைக்கு வந்தான். ரமணாசிரமத்தை அடைந்தான். அங்கிருந்த அமைதியைக் கண்டபோதே அவன் மனம் குளிர்ந்தது. பகவானைத் தரிசித்து வணங்கினான். "ஸ்வாமி, நான் எத்தனையோ வேதாந்த நூல்களைப் படித்தேன்; படித்தவர்களை அணுகிக் கேட்டேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியைக் காட்டுகிறார்கள். அதனால் என் மனம் குழப்பம் அடைந்துவிட்டது. நான் எந்த வழியிலே செல்வது? இதைத் திட்டமாகச் சொல்லியருளவேண்டும்" என்று பணிவுடன் கேட்டான்.

ரமண முனிவர் புன்முறுவல் பூத்தார். "அப்படியா! சரி. நீ வந்த வழியே போ" என்றார். அருகில் இருந்தவர்கள் இதை வேடிக்கைப் பேச்சென்று நினைத்தார்கள். இளைஞனோ ஒன்றும் தெரியாமல் விழித்தான். 'எவ்வளவு ஆவலோடு

இங்கே வந்திருக்கிறோம்! எத்தனை தூரம் கடந்து வந்திருக்கிறோம்! வந்த வழியே திரும்பிப் போவதற்காகவா வந்தோம்?' என்று அவன் மனம் தத்தளித்தது. மேலே ஒன்றும் கேட்க அவனுக்கு வாய் எழவில்லை. பகவான் அந்தக் கூடத்தில் அமர்ந்திருந்த வரை யில் அவன் மௌனமாகவே இருந்தான். பகவான் வெளி யிலே சென்றவுடன் அவனுடைய உள்ளக் கொந்தளிப்பு அதிகமாயிற்று. அருகில் இருந்த சிலரைப் பார்த்து, 'ஐயா! நான் நெடுந்தூரம் தாண்டி வந்திருக்கிறேன். நம்பிக்கையோடு வந்தேன். மோட்சத்துக்கு உறுதியான வழி ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம் என்ற ஆவலோடு வந்தேன். வந்த வழியே போகச் சொல்வது தர்மமா? இது வேடிக்கைக்குரிய செய்தியா?'' என்று அழாக் குறையாகக் கேட்டான்.

அங்கிருந்தவர்களில் ரமண முனிவரோடு நன்கு பழகிய பெரியார் ஒருவர் அந்த இளைஞனுக்கு விடை கூறத் தொடங்கினர்: ''இங்கே பாருங்கள்! பகவான் சொன்னது வேடிக்கைப் பேச்சு அல்ல. நீங்கள் கேட்ட கேள்விக்கு எது சரியான விடையோ அதுதான் உங்களுக்குக் கிடைத்தது. பகவானுடைய உபதேசங்களில் ஜீவனாக இருப்பது, 'நான் யார்?' என்ற ஆத்ம விசாரந்தான். அதுவே மோட்சத்தை அடைவதற்கு மிகவும் சுலபமான வழி. நீங்கள் 'நான் எந்த வழியே போவது?' என்று கேட்டீர்கள். பகவான், 'வந்த வழியே போ' என்று சொன்னர். நான் என்பது எந்த வழியாக வந்தது? இந்த ஆராய்ச்சியிலே தலைப்படவேண்டும் என்றுதான் பகவான் சொன்னர். நான் என்பதை ஆராயப் புகுந்தால் ஆத்மவிசாரம் ஏற்படும்; அப்போது உண்மை புலப்படும்; மோட்சத்தின் வழி திறக்கும்.''

இவ்வாறு அவர் சொன்னதும், ''நான் யார்?'' என்ற பகவானுடைய உபதேசம் அடங்கிய புத்தகம் ஒன்றை அந்த இளைஞனிடம் கொடுத்தார்கள். பகவானுடைய வார்த்தைகளுக்கு அந்தப் பெரியாருடைய விளக்கம் அவன் மனத்திலே பதிந்தது ஆகவே, 'வந்த வழியே போ' என்பதையே அவன் உபதேசமாகக் கொண்டான்; விடை பெற்றுக்கொண்டு சென்றன். (வாழ்வு)

எல்லோரும் சமம்: ஒரு நாள் ரமணமுனிவரைப் பார்க்கச் சில ஐரோப்பியர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் இரண்டு பேர் பெண்மணிகள். பகவான் கட்டிலின் மேல் அமர்ந்திருந்தார். சிறிது தூரத்தில் பெண்கள் இருந்த இடத்தில் சுவரின்மேல் சாய்ந்தபடி அந்த இரண்டு மேல் நாட்டுப் பெண்களும் உட்கார்ந்தார்கள். நம்மைப்போலத் தரையில் உட்கார்ந்து பழக்கமில்லாமையால் அவர்களில் ஒருவர் தம் காலை நீட்டிக்கொண்டார். ரமண முனிவருக்கு அருகில் நின்று அவருக்கு வேண்டியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் இதைப் பார்த்தார். காலை மடக்கிக் கொள்ளும்படி சாடை காட்டினர். அந்தப் பெண்மணி

உடனே காலை மடக்கிக் கொண்டார்.

அவர் வேண்டுமென்று காலை நீட்டவில்லை; பழக்கமில்லாமையாலும் சம்பிரதாயம் தெரியாமையாலும் நீட்டினுர். பிறகு மடக்கிக்கொண்டார், ஆனுல் அவர் மனத்தில் ஒருவிதமான கவலை பாய்ந்தது. "நாம் பெரிய அபசாரத்தைப் பண்ணிவிட்டோமே!" என்ற எண்ணம் உண்டாயிற்று. அவர் கண்ணில் நீர் ததும்பியது.

இதை ரமணமுனிவர் கவனித்தார். காலை மடக்கச் சொன்ன அன்பரைக் கடிந்து கொண்டார். அவரவர்கள் இயற்கையின்படி இருப்பதையே பகவான் விரும்புவார். ஆகையால் அந்தப் பெண்மணியைப் பார்த்து, "உங்கள் சௌகரியப்படியே காலை நீட்டிக்கொள்ளலாம், பழக்கமில்லாத உங்களுக்குக் காலை மடக்கிக் கொண்டு உட்காருவது கஷ்டமாக இருக்குமே!" என்ருர். அந்த அம்மையார் அப்படிச் செய்ய மனம் கொள்ளவில்லை. தெரியாமல் தப்புச் செய்துவிட்டோமே என்ற வருத்தத்துடன் இருந்த அவர் மறுபடியும் காலை நீட்டத் துணிவாரா?

ஆனுல் முனிவர் பிரானுக்கு மாத்திரம் சமாதானம் உண்டாகவில்லை. அவர் காலை நீட்டியே உட்கார்ந்திருந்தார். அப்போது உடம்பெல்லாம் வாயுப்பிடிப்பு ஏற்பட்டிருந்தது. காலிலும் இந்தப் பிடிப்பு இருந்தது. இருந்தாலும், பகவான் அந்த அம்மையார் படும் கஷ்டத்தைத் தாமும் படத் துணிந்தார். தம் காலை மடக்கிப் பத்மாசனத்தில் உட்கார்ந்துகொண்டார். அப்போது அப்படி உட்காருவது எவ்வளவோ துன்பத்தைத் தருவது. ஆனுலும்,பகவான் அதைப் பொருட்படுத்தவில்லை. அருகில் இருந்த பக்தர்கள், "வாயுப் பிடிப்பு இருக்கிறதே!" என்று சொல்லிப் பார்த்தார்கள். "விதி என்ருல் எல்லாருக்கும் ஒரே விதிதான் இருக்க வேண்டும். இங்கே யாரும் காலை நீட்டக் கூடாது என்ருல் நான் மாத்திரம் அதற்கு விலக்கா?" என்று சொல்லி அன்று முழுவதும் அப்படியே உட்கார்ந்திருந்தார். (வாழ்வு)

அகங்காரமும் மத யானையும்: அகங்காரம் மத யானையைப் போன்றது. அதை மாவுத்தனுல் கூட அடக்க முடிவதில்லை, ஆனுல் சிங்கத்தைக் கண்டால் அது அடங்கி ஒடுங்கி நடுங்கி விடுகிறது. அகங்காரம் நம்முடைய முயற்சியினுல் அடங்குவதில்லை. அடங்குவது போலத் தோன்றினுலும் மறுபடியும் எழும்பி விடும். சிங்கத்தைப் போலக் குருவின் சந்நிதியில் அது தன் வலி குறையும். குருவின் திருவருள் கிடைக்குமானுல் அது அடியோடு அழிந்து விடும்.

(வாக்கு)

பக்தன் இறைவனின் குழந்தை; அவன் உதிர்க்கும் கண்ணீரே அவனுக்குப் பலம்.

—பரமஹம்ஸர்

ஏழையற்ற உலகம்

- ரஸ்கின் கனவு -

எங்கும் இன்பம், எங்கும் கலை, எங்கும் அறம் — இவை நிறைந்ததாக மனித வாழ்க்கை சீர்பெறப் பல நூல்கள் வாயிலாகப் போராடிய ஒருவர் ரஸ்கின். அவருடைய அருங் கருத்துக்களை அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன் விமர்சனம் செய்கிறார்.

இங்கிலாந்தில் 19-ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவால் யந்திரத் தொழிற்சாலைகள் எங்கும் தோன்றின. வியாபாரம் ஓங்கிற்று. செல்வ வெள்ளம் பெருகிச் சிலரிடம் தேங்கிவிட்டது. தொழிற்சாலைகளின் இடையறாத அரவமும், மேகங்கள்போல் சூழ்ந்த புகைப் படலங்களும், அமைதியின்மையும், வாழ்க்கையின் கோர தாண்டவமும், செல்வத்தில் மிதக்கும் முதலாளிக்கும் வறுமையால் உள்ளம் ஒடிந்து சாம்பும் ஏழைத் தொழிலாளிகளுக்கும் இடையே நாளடைவில் பெருகிவரும் கசப்பும் சேர்ந்து சான்றோர்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டன. அவர்கள் உள்ளம் உருகி ஓலமிட்டனர். வாழ்க்கையில் உண்மை ஒளி இல்லை; அமைதியில்லை; இன்பமில்லை. இயற்கை அழகைப் பருகி இன்புறும் தன்மை மக்களிடத்திலிருந்து மெல்ல மறைந்துவிட்டது. பேராசையும் அழுக்காறும் போராட்டமும் தலை விரித்தாடின. உயர்ந்த லட்சியக் குறைவால் வாழ்க்கை கலைத் தன்மையின் பொலிவிழந்து வெறுஞ்சூனியமாய்க் காட்சி அளிக்கத்தொடங்கி விட்டது. கார்லைல் (Carlyle) இந்த நிலையைக் கண்டு சீறி விழுந்தார். அவருடைய இடி முழக்க வீர வாசகங்களுக்கு நாடு முழுவதும் எதிரொலி கொடுத்தது. கார்லைலின் அடிச்சுவட்டைப் பின்பற்றினார் ரஸ்கின். அவர் எழுதிய ஃபார்ஸ் க்ளவிஜிரா (Fors Clavigera) என்ற கடிதத்தொகுதி நூலில் உள்ள பத்தாவது கடிதத்தைப் படித்தால் உண்மை புலனாகும்.

"உங்கள் கார்லைலை நன்கு படியுங்கள்; உங்கள் உள்ளத்தைச் செலுத்திப் படியுங்கள். நியாயமான மார்க்கத்தில் இறங்குங்கள். அழியாப் பெரு நெறியில் நில்லுங்கள். ஒவ்வொருவரும் உழைத்தே தீரவேண்டும். உழைப்புக்கேற்ற உணவை நீங்கள் பெறுவீர்கள் என்று அவர் பகர்ந்த பொன்மொழிகளை உங்கள் மனத்திலே பதித்துக்கொள்ளுங்கள்" என்று தம் நாட்டினரைப் பார்த்துக் கூறுகிறார் ரஸ்கின்.

தொழிலின் சிறப்பு, மோனத்தின் உயர்வு, மன மொழி மெய்களின் தூய்மை, வாய்மையின் அவசியம், நியாயத்தின் அழியாத் தெய்வ வடிவு இவைபற்றியெல்

லாம் கார்லைல் தம் விரிந்த நூல்களில் கூறி வந்தார்.

அந்தப் பெரியாரின் உபதேசத் தேனை உண்டு, ரஸ்கின் மெய் மறந்து போனார். 'அதைப் பருகுங்கள், அதைப் பருகுங்கள்' என்று முரசடித்தார் ரஸ்கின். தம் கடைசி மூச்சு நிற்கிற வரையில் கலை, பொருள், சமுதாயம்-இவைகளைப்பற்றி எழுதிப் பேசிவந்தார்.

ரஸ்கின் லண்டன் மாநகரத்தில் 1819 - ஆம் ஆண்டு ஒரு பணக்காரச் சாராய வியாபாரிக்குப் பிறந்தார். அவர் தம் வாழ்க்கையை மிகக் கவின்பெற ப்ரடிரிடா (Praeterita) என்ற நூலில் சித்திரித்திருக்கிறார். அவர் மனத்தில் எழுந்த லட்சியங்கள், அவர் பெற்றோர்களின் தன்மை, அவர் பெற்ற நன்மைகள், இயற்கையிடம் அவர் வைத்த அளவு கடந்த காதல், கிறிஸ்தவ வேத புத்தகமும், ஸ்காட்டும், போப் மொழிபெயர்த்த ஹோமரும் அவர் மனம் பண்பட உதவிய விவரம் - இவை யாவும் அந்த நூலில் இடம் பெறுகின்றன. ரஸ்கினின் தாய் அவரைப் பைபிளைப் படிக்கும்படி அடிக்கடி தூண்டுவாள். பைபிள் அவருக்கு மனப் பாடமாகிவிட்டது. அதில் தோய்ந்து குடைந்து நீராடிய காரணத்தால், அவர் இயற்றிய நூல்களில் பைபிளின் தெய்விக ஓசை இன்பமும், கற்பகச் சோலையின் நறுமணமும் குழைந்து கரைந்தோடக் காண்கிறோம். அவர் சொல்லின் செல்வர் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய உரை நடையில் கவிதை நயம் பாய்கிறது.

அக்ஸ்போர்டு சர்வகலாசாலைக்கு 1836 - ஆம் ஆண்டு அவர் சென்றார். கடுமையான நோயால் படிப்பை நிறுத்த வேண்டியிருந்தது. ஆறு மாத காலம் இத்தாலி நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்தார். 1842-ஆம் ஆண்டு எம். ஏ. பட்டம் பெற்றார். டேணர் (Turner) என்ற ஓவியப் புலவரோடு நட்புக் கொண்டார். இந்த நட்பு ரஸ்கினின் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு புதிய இதழை மலரச் செய்தது. 1843 - ஆம் ஆண்டு 'நவீன ஓவியப் புலவர்கள்' (The Modern Painters) என்ற நூலின் முதல் பாகம் வெளிவந்தது. இயற்கைச் சித்திரத்தை வரைவதில் டேணர் (Turner) போன்றவர்கள் பண்டைய ஓவியப் புலவர்களை வென்று விட்டார்கள் என்று தக்க சான்றுகள் கொண்டு சாதிக்கத் தொடங்கினார். ஆசிரியரின் தீவிரமும் சிரத்தையும், அவர் கொண்ட புதுமையான கருத்தும், சொல்லின் வன்மையும், நடையில் இருந்த புகழும் சோபையும் மக்கள் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டன. 'கட்டிடக் கலையின் எழு தீபங்கள்' (The Seven Lamps of Architecture) என்ற புத்தகம் 1849 - ஆம் ஆண்டு வெளிவந்தது. 'வெனிஸ் நகரத்துச் சிற்பங்கள்' (The Stones of Venice) என்ற நூலும் எல்லோரும் போற்றத் தகுந்தது. 'செசமியம் லில்லியும்' (Seasame and Lilies) என்ற சிறந்த நூலை நாம் பல காலம் படித்து இன்புற்றிருக்கிறோம்.

இவரது 'கடையனுக்குக் கூட' (Unto this Last) என்ற உயர்ந்த நூல் காந்தயடிகளின் தூய மனத்தைக் கவர்ந்திருக்கிறது. அவர் வாழ்க்கையைப் புனிதமாக்கிய நூல்களில்

இது ஒன்று. 'காட்டு ஆலிவ் மௌலி' (The Crown of the Wild Olive) என்ற நூலில் அவர் கண்ட கருத்துக்கள் மிளிர்கின்றன. 'ஃபார்ஸ் க்ளவிஜிரா' என்ற கடிதத் தொகுதியில், ரஸ்கினின் கடுஞ்சோகமும் ஆழ்ந்த இரக்கமும் நகைச்சுவையும் கரைந்து ஓடுகின்றன. அதில் ஸ்விஃப்ட் என்ற ஆசிரியரின் கசப்பில்லை; கார்லைலின் கோரமான கிண்டற் சுவையில்லை. விளையாட்டாகவே தம் சீற்றத்தை ரஸ்கின் வெளியிடுகிறார். ஃபார்ஸ் என்பது சுடநல நவீன வாழ்க்கைமீது அவர் எழுதிய வசை நூலாகும் என்று கூறலாம். 'ப்ரடிரிடா' என்ற அவர் சுய சரிதத்தில் அவருடைய ஆத்மாவின் ஆழங்கள், மேடு பள்ளங்கள், மூலை முடுக்குகள், உணர்ச்சியின் ஓட்டங்கள், குறுக்கோட்டங்கள் இவற்றை எல்லாம் அப்படியே சிறை செய்திருக்கிறார்.

உடல் பொருள் ஆவி முழுவதையும் சமுதாயச் சீர்திருத்தத்துக்காகவே அர்ப்பணம் செய்தார். பேருழைப்பில் வந்த பிரசவ வேதனைகளையும், கணக்கற்ற இன்னல்களையும் பொறுத்துக் கொண்டார். அவைகளை அவர் பொருட்படுத்தவில்லை. தம் புனிதச் சொற்களெல்லாம் வெறும் வனத்து ஓலமாகப் போய்விட்டனவே என்ற ஓர் ஏக்கந்தான் அவரை வாட்டிவிட்டது. உள்ளம் உடைந்தே சோக வடிவத்தோடு 1900-ஆம் ஆண்டு அவர் உயிர் துறந்தார்.

அந்தப் பெரியார் கண்ட கனவைப் பகற் கனவு என்றும் மனப்பாலென்றும் ஆகாயக் கோட்டை என்றும் கூறிவந்தார்கள். இப்பொழுது அவர் தேர்ந்த தத்துவத்தின் மகிமையை உணர்கிறார்கள்.

'ஏழை மக்கள் வறுமையில் உழல்கின்றபொழுது நாம் விருந்துண்ண முடியுமா?' என்ற முதற் கேள்வியை அவர் கேட்கிறார். மனிதன் துன்புறுகிறவரையில் நாம் இன்புற முடியாதென்ற கொள்கையை உடையவர் அவர்.

'வருங்கால இங்கிலாந்து' என்ற கட்டுரையில் அவர் மிக உணர்ச்சிததும்பப் பேசுகிறார். நம் நகரங்கள் அனைத்தையும், சதா சுழன்று கொண்டிருக்கும் நூல் நூற்கும் யந்திரங்கள் கொண்டு நிரப்பி விட்டோம். ஆனால் உடுக்க உடை இல்லை; பசிய மரங்களையெல்லாம் வெட்டி எரித்துச் சாம்பற் குவியலாகச் செய்துவிட்டோம். ஆனால் மக்கள் கடுங் குளிரினால் மடிகிறார்கள். நம்முடைய துறைமுகங்கள் யாவும் வியாபாரக் கப்பல் நிறைந்து தோன்றுகின்றன; ஆனால் மக்கள் உணவின்றிப் பசிப் பிணியால் வாடி இறக்கிறார்கள். 'ஏனோ இது?' என்று ஏக்க மிக்க குரலில் ஓலமிடுகிறார்கள்.

"மனச் செம்மையும் நல்லறமும் நியாயமும் அருளும் அன்பும் சமுதாயத் தூண்களாகத் திகழ வேண்டும். இவைகள்மீதுதான் மனிதனின் நாகரிகக் கோயில் எழவேண்டும்" என்கிறார்.

'கடையனுக்குங்கூட' என்ற புத்தகத்தில் காணப்படும் விஷயங்கள் ஆராய்ச்சிக்குரியவை. உலக சமுதாயத்தில் பல பேர்கள் செய்ய வேண்டிய தொழில்களைப்பற்றிப் பேசுகிறார்:

அறத்தைக் காப்பாற்ற வேண்டியது போர்வீரனின் கடமை. அதைப் பேணுவதைத்தான் முதல்

தொழிலாகக் கொள்வான்; அடுத்த படியாகவே தன் சம்பளத்தை மதிப்பான். அவன் உயிர் துறந்தாலும் துறப்பான்; தன் கடமையை விட்டுச் சற்றும் அகல மாட்டான்.

கோரமான தொத்து நோய் பரவும்போது உண்மையான மருத்துவன் தன்னுடைய இடத்தை விட்டு ஓடிவிட மாட்டான். நோயைத் தீர்ப்பதே அவனுடைய முதற் கடமை; பிறகுதான் அவன் அடையும் ஊதியம்பற்றிக் கவனிப்பான். பாதிரி அஞ்ஞான இருளை ஓட்ட முயல்வான். உயிர் துறந்தாலும் துறப்பான்; உண்மை உபதேசிப்பதை விட மாட்டான். வக்கீல் அநியாயத்துக்குச் சற்றும் இடங் கொடுக்கமாட்டான். உயிரைத் தியாகம் செய்தாலும் செய்வான்; நீதி வழுவுகிற துறையில் இறங்க மாட்டான். 'வியாபாரிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்கிருர்.

'வியாபாரிகளைச் சுயநலமுடையவர்கள்; பிறர் துன்பங்களில் திளைக்கிறவர்கள்' என்றெல்லாம் அவர்கள்மீது பழிகளைச் சுமத்தாதீர்கள்.

"வியாபாரிகளும் வீரவாழ்வு வாழமுடியும். வறுமைக் காலத்தில் அவர்கள் தியாகம் செய்யமுடியும். வியாபாரத்திலும் வீரச் செயல் உண்டு. மக்கள் துயர் அடையும்பொழுது தங்கள் பொருள்களைத் தியாகம் செய்ய வியாபாரிகள் முன் வருவார்கள். சமுதாயமே நிலைத்து நிற்கும்படியான ஆழ்ந்த அஸ்திவாரமாக வியாபாரம் திகழ வேண்டும்" என்று ரஸ்கின் கூறுகிருர்.

பொய் பொதிந்த வாழ்க்கையை நடத்துகிற கள்ள வியாபாரிகளை நன்னெறியில் செலுத்தக் கூடிய இந்த உண்மையான உபதேசத்தைக் கவனியுங்கள். மனிதனிடத்தில் எத்தனை நம்பிக்கை ரஸ்கினுக்கு! எந்த மனிதனும் தியாக ஒளியைப் பரப்பக்கூடும் என்று எண்ணுகிற பெருந்தன்மை அவரிடத்தில் வேரூன்றி இருக்கிறது. சிறுநெறியைத் 'தூ' என்று தள்ளிப் பெருநெறியில் செல்லும் அவருடைய உள்ளத்தின் காம்பீரியத்தை என்னவென்று சொல்வது? அறத்திலும் நியாயத்திலுந்தான் அமைதி நிலைபெற்றிருக்க முடியும் என்று இடையருது அவர் உபதேசம் செய்கிருர்.

'வேந்தர்களின் பொக்கிஷங்கள்' (Kings' Treasuries) என்ற கட்டுரையில், புத்தகங்களில் பொதிந்து கிடக்கிற ஞானச் செல்வத்தைப்பற்றிப் பேசுகிருர். மேலும், 'முன்னேறுவது என்ருல் என்ன?' என்ற கேள்வியைக் கேட்கிருர். எவனுடைய உள்ளம் இளகிக்கொண்டே போகிறதோ, எவனுடைய ரத்தத்தில் உண்மை உணர்ச்சி பேசுகிறதோ, எவனுடைய ஆத்மா அமைதியில் நிலைபெற்றிருக்கிறதோ, அவனுடைய உள்ள விரிவே உண்மையான முன்னேற்றமாகும். தூய வைணவகுணங்கள் நிரம்பியவனையே முன்னேற்றமடைந்தவனுகக் கருதவேண்டும். இத்தகைய மனப் பண்புள்ளவரே உண்மையான மன்னர் ஆவார்கள் - இதுதான் ரஸ்கின் கருத்து.

உண்மையான போர் வீரர்கள் வேண்டும்; போர்வீரர்களென்ருல் ரத்தவெறி பிடித்துப் பிறரைக் கொல்லுபவர் அல்ல. அறச் சேவையில்தான் அவர்கள் மடிவார்கள். போர்வீரர்கள் மட்டும் போதுமா? உழவுத் தொழில் வீரர்

களும் வேண்டும். வியாபார வீரர்கள், வைத்திய வீரர்கள், நீதிமன்றத்து நியாய வீரர்கள், உண்மையான மதப்பயிர் தழைக்க வைக்கும் வேதாந்த வீரர்கள் இவர்களும் தோன்றவேண்டும் என்பது அவர் விருப்பம்.

உண்மை அரசியலும், சேர்ந்து வாழும் தன்மையும் வாழ்வின் விரிவுக்குத் தக்க வழிகளாகும். குழப்பமும் போராட்டமும் மரணத்துக்கு வழியாகும் என்று 'நவீன ஓவியப் புலவர்கள்' என்ற புத்தகத்தின் கடைசிப் பாகத்தில் சொல்லியிருக்கிறார். அன்பும் இன்பமும் வியப்பும் நிரம்பிய வாழ்க்கையைவிட வேறு செல்வமுண்டோ? சான்றோர்கள் நிறைந்த நாடே செல்வமிக்க நாடு என்று உலகம் கேட்கச் சாற்றுகிறார். இதில் எத்தனை பெரிய உண்மை அரியாசனத்தில் வீற்றிருக்கிறது, நோக்குங்கள். இந்த வரிகளைப் படிக்குந்தோறும், நம் சிந்தை நம் பழைய புறநானூற்றுக்குச் செல்லும். ரஸ்கின் மனத்தின் முன் விரிந்த கனவே, பல்லாண்டுகளுக்குமுன்பு வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவரின் உள்ளத்தில் விரிந்திருப்பதைக்கண்டு உள்ளம் பூரிக்கிறோம்.

'யாண்டுபல வாக
நரையில வாகுதல்
யாங்கா கியரென
வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு
மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென்
இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான்
காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.'

இத்தகைய சான்றோர்கள் வாழும் நாட்டைப் படைக்க வழியையும் வகுத்துக் காட்டுகிறார். சமுதாயத்தைச் சீர்திருத்தினால், அதில் அழகைப் பெய்தால், அன்பைப் பாய்ச்சினால், உயர்ந்த கருத்துக்களாகிய விதைகளை ஊன்றினால், ஓவியங்கள் தாமே மலரும்; கற்களில் துயிலும் சிற்பங்கள் கண் விழித்து நோக்கும்; கவிதை பெருக்கெடுத்தோடும். கலை வேறு, வாழ்க்கை வேறு என்று கருதாதீர்கள். இந்தச் சுருதியில் தான் 'நவீன ஓவியப் புலவர்கள்', 'கட்டிடக் கலையின் ஏழு தீபங்கள்', 'வெனிஸ் நகரத்துச் சிற்பங்கள்' முதலிய நூல்கள் இசைக்கின்றன. கார்லைலின் ஞானபுத்திரன் ரஸ்கின்; ரஸ்கினின் கலைப் புத்திரன் மாரிஸ் என்று சொன்னால் மிகையாகாது. 'ஃபார்ஸி'ல் ஞானி ஜார்ஜ் குழுவைப் (St. George guild) பற்றி ரஸ்கின் கூறுகிறார். அதில் சேர்வோர் கீழ்க்கண்ட கொள்கைக்குக் கையொப்பம் வைக்க வேண்டும். "எல்லாம் வல்ல இறைவனை நம்புகிறேன். அவன் அன்பிலும் அவன் அருளிலும் அவன் வகுத்த நெறியிலும் நான் நம்பிக்கை வைப்பேன். மனிதனின் உயர்ந்த இயல்பிலும், அவனுடைய மகத்தான சக்திகளிலும், அவன் அன்பில் அலரும் மகிழ்ச்சியிலும் நான் நம்பிக்கை கொள்வேன். என்னை நான் எப்படி நேசிக்கிறேனோ அப்படியே பிறரை நேசிப்பேன். எனக்கு ஆண்டவன் அருளிய ஆற்றலுக்குத் தகுந்தவாறு உழைத்தே உண்பேன். என்னுடைய இன்பத்துக்காகப் பிறரை ஏமாற்ற மாட்டேன். ஒரு பிராணியையும் கொல்லமாட்டேன். அழகுவாய்ந்த

எந்தப் பொருளையும் அழிக்க மாட்டேன். என்னுடைய உடலையும் ஆவியையும், தூய்மையான இன்பத்துக்கும் செய்கடனுக்கும் அர்ப்பணம் செய்வேன். போட்டிக்கோ போராட்டத்துக்கோ இல்லாமல், பிறருடைய இன்பத்துக்கும் கௌரவத்துக்கும் என்னைப் பயன்படுத்திக் கொள்வேன். என் வேந்தனுக்கும் அவன் இட்ட கட்டளைக்கும் பணிந்து நடப்பேன் - இந்தக் கதியில் அதில் கண்ட கொள்கைகள் செல்கின்றன.

இந்தக் கொள்கை ஏசுவின் 'மலை உபதேச'த்தை நினைவூட்டுகிறது. மலை உபதேசத்தை உருவாக்கும் வழியையும் ரஸ்கின் காட்டுகிறார். "இயற்கை அன்னையை வழிபட்டு ஓவியங்களைத் தீட்டுங்கள். சம்பிரதாய முறைகளைப் பின்பற்றுதீர்கள். இயற்கை எழிலைப் பாழ்படுத்தாதீர்கள். இயற்கை வனப்பால் அமர நாடாய்த் திகழ்கிற உலகத்தை மனிதன் பாழ்படுத்துகிறான்" என்றெல்லாம் கூறுகிறார். தாய்மார்களை அவர் வேண்டிக் கொள்கிறார்: "நீங்கள் உங்கள் வீடுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுகிறீர்கள். அவைகளில் ஒரு தனி ஒளியும் மணமும் பாய்கின்றன. உலகத்தையே நீங்கள் ஒரு புதிய அமர நாடாகச் சமைக்கலாம். அதில் நிகழும் கோரமான போர்களை உங்கள் கண்ணீரால் அகற்றலாம். நீங்கள் கண்ணீர் விட்டால் எந்தப் போர்வீரர்கள் சமரில் இறங்குவார்கள்? உங்கள் கண்ணீருக்கு அத்தனை ஆற்றலுண்டு. உலகத்தையே எழிலும் இன்பமும் அமைதியும் தாண்டவமாடும் ஒரு பெரிய நந்தவனமாக்குங்கள்" என்று 'ராணிகளின் நந்தவனங்கள்' (Queens' Gardens) என்ற கட்டுரையில் கவிதை நயம்படக் கூறுகிறார். 'அவன் அருள்உலகம் இங்கே தோன்றவேண்டும்' என்று வாசா கைங்கரியம் செய்தால் போதாது.

ஒவ்வொரு கையும் அதைப் படைக்க முன்வரவேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புனிதச் சொல் இடையறாது நம் சிந்தையில் ஒலிக்க வேண்டும். ரஸ்கின் கண்ட கனவு உருவாக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

[இந்தக் கற்பனை உலகக் கட்டுரை வரிசையில் டிசம்பர் '52 'மஞ்சரி' இதழில் வெளியான 'எல்லாம் மாறிய நாடு' என்ற கட்டுரையில் 40-ஆம் பக்கத்தில் 'இன்னிசை பாடும் பாங்கி'க்காரர், அதில் பணம் போட்டவர்களுக்கு வருஷம் 30 ஆயிரம் பவுன் போனஸ் கொடுப்பார்கள் என்றிருப்பது சரியல்ல; 30 ஆயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் போனஸ் கொடுப்பார்கள்.]

யார் சொல்கிறார்கள்?

நார்வே நாட்டு நடிகை : நான் அமெரிக்காவிலேயே தங்கினால், எனக்கு ஐம்பதாயிரம் டாலர் தருவதாகச் சொல்கிறார்கள்?

நார்வே நாட்டுக்காரர் : யார் சொல்கிறார்கள்? நார்வே நாட்டினரா? அமெரிக்கரா?

—'ஃபில்ம் ஜர்னலென்,' ஆஸ்லோ

பாபுராவ் பதில் சொல்லுகிருர்

கேட்பவரின் கேள்விகளுக்கு, ‘ஃபில்மிண்டியா’ ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை ‘ஃபில்மிண்டியா’ டிசம்பர் ’52 இதழில் வெளியானவை.

கேள்வி: பணப் பெட்டிகள் பேசத் தொடங்கினுல்?

பதில்: பணம் சிறைப்பட்ட சோகக் கதையாகத்தான் இருக்கும்.

* * *

கே: பம்பாயில் இப்போது என்ன பண்டம் அதிக மலிவாக இருக்கிறது?

ப: திருட்டு மது. அது அரிசியைவிட விலை குறைவு.

* * *

கே: இந்தியப் படையில் பெண்களையும் சேர்ப்பது ஏன்?

ப: ஒருகால், வேண்டிய போது வீரர்களுக்கு வளையல் அணிவதற்காக இருக்கலாம்.

* * *

கே: வேசியின் மகள், யாரையும் காதலிப்பதில்லையா?

ப: ஜப்பானில் நல்ல அந்தஸ்து உள்ளவர்களே அவர்கள் மணம் செய்து கொள்கிருர்களாம்; அவர்களுடைய பூர்வோத்தரத்தை யாரும் நினைப்பதில்லையாம்.

கே: பணக்காரப் பெண் ஒருத்தியின் காருக்கு அடியில் ஓர் ஏழைப்பையன் அகப்பட்டுக்

கொண்டு, பணக்காரனுக முடியுமா?

ப: சினிமாப் படத்தில்தான் அது முடியும். உண்மையான வாழ்க்கையில், அந்தப் பையன் பரலோகத்துக்குப் போகாமல் தப்பினுல் ஆஸ்பத்திரிக்குத்தான் போவான்.

* * *

கே: ரேஸ் என்ருல் எனக்குப் பெரிய மோகம். நான் ஒரு வாலிபன். எனக்கு ஒரு யோசனை சொல்வீர்களா?

ப: அதிவேகமாக ஓடும் குதிரையின் வாலில் ரூபாய்

ஒட்டிக் கொள்ளாது, தம்பி, விழுந்து விடும்.

வீட்டு விளக்கு

மராட்டி ஆசிரியர்: **வி. ஸ. காண்டேகர்**
தமிழாக்கியவர்: **கா. ஸ்ரீ. ஸ்ரீ.**

மராட்டி வாசகர்களிடம் எவ்வளவு புகழோ அவ்வளவு புகழைத் தமிழ் வாசகர்களிடமும் பெற்றிருப்பவர் காண்டேகர். அவருடைய நாவல்கள் எல்லரம் பல பதிப்புக்கள் தமிழில் விற்றிருக்கின்றன; விற்று வருகின்றன. அவருடைய சிறுகதைத் தொகுதிகளும் அப்படியே. அவைகள் அனைத்தையும் நேர்த்தியான தமிழ் நடையில் மொழி பெயர்த்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. நாவல், சிறுகதை எதைக் காண்டேகர் எழுதினாலும் அதில் ஓர் உண்மை புதைந்து கிடக்கும். அதற்கு இந்தச் சிறுகதையே ஓர் அத்தாட்சி.

ஊரைத் தாண்டி வெகுதூரம் வந்தாயிற்று. வைகறையின் மங்கிய நிலவிலே அது வர வர மறைந்துகொண்டே வந்தது. சற்று நேரத்துக்கு முன்பு ஸ்டாண்டில் பஸ் அசையாமல் நின்றிருந்த போது, கோந்துவின் மனம் பம்பாய் வழியை நோக்கி ஓடியது. இப்பொழுது பஸ் அந்த வழியில் ஓடியபொழுது அவன் மனம் பின்னுக்குத் திரும்பியது.

கோந்து ஜன்னல் திரையை விலக்கி நிமிர்ந்து பார்த்தான். வானத்தில் மேகங்கள் இல்லை.

திடீரென்று அவனுக்கு என்னவோ போல இருந்தது. வீட்டிலிருந்து ஸ்டாண்டுக்கு வரும் வரையில் அவன் தலையில் குடை போல் கவிர்திருந்த தென்ன மரங்களின் வரிசை இப்போது மறைந்துவிட்டதை அவன் உணர்ந்தான். பதினேழு வருஷகாலம் அவன் தென்னந்தோப்புகளிலே வளர்ந்தான், உலாவினான், புரண்டான், விளையாடினான். தென்னையைக் கற்பகமரம் என்கிறார்களே! அது எவ்வளவு பொருத்தம்! எந்த ஊருக்குப் போனாலும் தென்ன மரங்கள் தன்மேல் கையை நீட்டி ஆசி கூறுவதை அவன் கண்டிருந்தான். இதற்கு முன்னால் அவன் அந்த மரங்களை விட்டு இவ்விதம் பிரிந்ததில்லை.

‘வீட்டிலிருந்து புறப்படும்போது பாட்டி கூறிய ஆசி பொய்யாகுமா? பம்பாயில் மாமா வீட்டில் அடியெடுத்து வைத்ததுமே நமக்கு வேலை கிடைத்து விடும். மாதம் இருபது ரூபாய் என்ன, இருபத்தைந்துகூட நாம் பாட்டிக்கு அனுப்பலாம். அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆயினும் முதல் மணியார்டரை அவள் பெயருக்குத்தான் நான் அனுப்புவேன். அந்தப் பணத்

காப்பிரைட்: கிர்லோஸ்கர் (மராட்டி), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

தைப் பெற்றுக்கொள்ளும்போது அவள் கை மகிழ்ச்சியினால் நடுங்கும் - காலையில் எனக்கு ஆசி கூறிய போது நடுங்கியதுபோல!' என்று அவன் நினைக்கலானான்.

பாட்டியைப்பற்றிய பல நினைவுகள் அவன் மனத்தில் வரிசையாக எழுந்தன. அவற்றிலே துன்பம் இருந்தது; இன்பமும் இருந்தது. இளம்வயதில் அவளுடைய ஒரே மகன் காலமாகிவிட்டான். மழைக்காலத்தில் தென்னமரத்தில் ஏறிக் கால் வழுக்கி விழுந்து தகப்பன் செத்தபோது, கோந்துவுக்கு வயது ஏழு. அவனுக்கு மூன்று தம்பி தங்கைகள். கிழவி துணிச்சலோடு மருமகளுக்கு ஆறுதல் கூறி, அந்தக் குடும்ப வண்டியை நடத்தலானாள். அவள் இருந்திரா விட்டால், கோந்து- அந்த ஊரிலே பள்ளிக்கூடம் இருந்தும்- எஸ். எஸ். எல். சி. தேறியிருக்க முடியாது; ஆலையில் தொழிலாளியாக வேலை செய்ய அவன் பம்பாய்க்குத்தான் போக வேண்டியிருந்திருக்கும். இன்று அவன் அங்கே போவது நல்ல உத்தியோகம் செய்ய!

அவன் கண்ணை விழித்துப்பார்த்தான். அந்தப் பள்ளிக்கூடம் எங்கும் தென்படவில்லை. ஸ்டாண்டிலிருந்து புறப்பட்டதும் பள்ளிக்கூடத்து வாசலில் சில பிரயாணிகளை ஏற்றிக்கொள்ள, பஸ் நின்றது. அப்பொழுது அவன் பள்ளியைப் பார்த்திருக்கலாமே! ஊரிலிருந்து புறப்படும்போது அவன் கோவிலுக்குக் கை கூப்பினான்; பாட்டியை வணங்கினான்; பள்ளிக்கூடத்தை வணங்கமட்டும் மறந்துவிட்டான். அவனுடைய அறிவை வளர்த்த அந்தப் பள்ளியை அவன் மறந்துவிடுவதா? பஸ்ஸிலிருந்து அப்படியே இறங்கி ஓடிப்போய், பள்ளிக்கூடத்து மண்ணை நெற்றியில் இட்டுக்கொண்டு வரவேண்டுமென்று அவனுக்குத் தோன்றிற்று. குழந்தைத்தனமாக இப்படி எண்ணியதை நினைந்து அவன் சிரித்துக்கொண்டே, பள்ளி இருந்த திசையை நோக்கிக் கை கூப்பினான்.

கோந்து இப்பொழுதுதான் பம்பாய்க்கு முதல் முதலாகப் போகிறான். ஆனால் அவனுக்குப் பிரயாணத்தைப்பற்றிய பயம் துளியும் இல்லை. முன் வீட்டில் உட்கார்ந்திருந்த ராமு பம்பாயில் ஏதோ ஒரு கம்பெனியில் ஹெட் கிளார்க்காக இருந்தார். அவர் அவனை நேரே மாமா வீட்டுக்குக் கொண்டுவிடுவதோடு அவன் வேலைக்கும் துணை செய்வதாக இருந்தார்.

ஆம்போலி மலைத்தொடரில் கார் மேலே ஏற ஆரம்பித்தது. முத்துமாலைகள் போன்ற மலர்கள் குலுங்கும் காட்டு மல்லிகையைக் கண்டதும் அவனுக்குத் தன் தங்கையின் ஞாபகம் வந்தது. யசோதாவுக்கு அலங்காரங்கள் செய்துகொள்வதில் வெகு ஆசை. இப்பொழுது அவள் அவனுடன் வந்திருந்தால், "இந்தப் பஸ்ஸைச் சற்று நிறுத்தச் சொல், அண்ணா! இந்த மல்லிகை மலர்களை நாம் பறித்து வந்தால் நான் மாலையாக அணிந்துகொள்வேன்" என்று சொல்வாள்.

"பத்தரை!" என்று யாரோ சொன்னது அவன் காதில் விழுந்தது. இந்தப் பூக்களைக் கோத்தால் பத்து அல்லது பதினொரு மாலைகளாகலாம்; பத்தரை எப்படியாகும்?-அவன் திடுக்கிட்டுச்

சுற்று முற்றும் பார்த்தான். ஒரு பிரயாணி இன்னொருவரை, "மணி என்ன?" என்று கேட்க, அவர் தம் பொன் கைக்கடிகாரத்தை ஒய்யாரமாகப் பார்த்துக் கொண்டே, "பத்தரை!" என்றார்.

'பத்தரை மணி! பாட்டியும் யசோதாவும் இப்பொழுது வயலிலிருந்து திரும்பியிருப்பார்கள். பாட்டிக்கு அடிக்கடி என் ஞாபகம் வரும். ஊரிலிருந்து நான் புறப்பட்டபோது வானம் நிர்மலமாகத்தான் இருந்தது. ஆனால் இந்த மழையை எப்படி நம்புவது? கொட்டும் மழையிலே யசோதா நனைந்து வீட்டுக்கு வரலாம். அவளுக்கு ஜுரம் வந்தால் பாட்டியும் அம்மாவும் படாத பாடு படுவார்கள். அதெல்லாம் இல்லை. முதல் சம்பளத்திலேயே அழகான குடை ஒன்று வாங்கி யசோதாவுக்கு அனுப்பிவிடவேண்டும். அதைப் பார்த்து அவள் ஆனந்தத்தால் குதிப்பாள். ஆனால் குக்கிராமத்திலே அந்தமாதிரி குடை பிடித்துக் கொண்டு யாராவது வயலில் வேலை செய்வார்களா?' என்று அவன் எண்ணலானான்.

"மணி பத்தரை!"

'இன்னுமா மணி பத்தரை? எல்லாருடைய கடிகாரங்களும் நின்றுவிட்டனவா?' ஆம்போலியிலிருந்து அவன் பெல்காமுக்கு வந்தான்; ஹோட்டலில் சாப்பிட்டான்; செம்மண் பாதையில் நடந்தான். பிறகு ரெயில் வண்டியில் உட்கார்ந்தான். சிறிது நேரம் கழித்துச் செம்மண் மறைந்து, கருமண் நிறைந்த வயல்கள் தண்டவாளத்தோடு ஓடின. இவ்வளவும் ஆன பிறகும், அருகில் இருக்கும் ஒருவன், "மணி பத்தரை!" என்கிறான்.

கோந்து நன்றாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். மிரஜ் என்ற ஸ்டேஷனின் பெயர் கொட்டையாகத் தெரிந்தது. அங்கே இறங்குகிறவர்களைவிட ஏறுகிறவர்களே அதிகம். எவனைக் கேட்டாலும் பம்பாய்க்குப் போகிறேன் என்கிறான். அந்தப் பம்பாய் நகரம் எவ்வளவு பெரிதாக இருக்குமோ, எவ்வளவு அழகாக இருக்குமோ! ராமு இண்டர் வகுப்பில் உட்கார்ந்துவிட்டார். இல்லா விட்டால் அந்த நகரத்தைப்பற்றி அவன் அவரை எத்தனையோ



எங்கே பார்த்தாலும் பொறிகளே!

கேள்விகள் கேட்டிருப்பான்.

இத்தனை நாளும் தன் வாழ்க்கை வீணாகிவிட்டதாக அவனுக்குத் தோன்றிற்று. 'பம்பாயில் வேலையானதும் நம் தம்பிகள் இருவரையும் அங்கே அழைத்துப் போய்ப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் படித்துப் பெரியவர்களானதும் நல்ல வேலை கிடைக்கும். இதெல்லாம் சரி, அங்கே நமக்கு இடம் கிடைக்குமா? முந்தாநாள் பம்பாய்க்காரன் ஒருவன் பாட்டியிடம், "வேலையாகி எழு வருஷம் ஆகியும் என் மனைவியை அழைத்துக்கொண்டு போகப் பம்பாயில் இடம் கிடைக்கவில்லை" என்று சொன்னானே!'

கோந்து முதல்முதலில் பம்பாயைப் பார்த்தபொழுது ஒரே திகைப்பாக இருந்தது; கொஞ்சம் பயமும் தோன்றிற்று. எங்கே பார்த்தாலும் கார்கள் ஓடிய வண்ணமாக இருந்தன. ரெயில் வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகக் 'கடகட' வென்று ஓடின. லிப்டுகள் மாடிகளிலே ஏறியும் இறங்கியும் இயங்கிக்கொண்டிருந்தன. ஒரு கணத்திலே பல விதமான ஒலிகள் அவன் காதில் விழுந்தன. மனிதக் கடல் எங்கும் பரவியிருந்தது. அதன் அலைகள் அமைதியாக முன்னும் பின்னும் போய் வந்தன.

பரேலில் நாலாவது காலனியில் முப்பத்திரண்டாம் நெம்பர் அறையில் ராமு அவனைக் கொண்டு போய் விட்டதும், மாமா அவனை நகை முகத்தோடு வரவேற்று, "என்ன கோந்து, எல்லாரும் சௌக்கியமா?" என்றார்.

நாலைந்து நாள் காலையிலும் மாலையிலும் கோந்து பம்பாயைப் பார்த்தான். மாமாவின் மகன் அவனை அழைத்துப் போய், "இது விக்டோரியா தோட்டம்; இது அப்போலோ பந்தர்" என்றெல்லாம் காண்பித்தான். 'பம்பாய் என்பது ஒரு பெரிய பட்டணம் மட்டுமல்ல; அது ஒரு பிரம்மாண்டமான, அற்புதமான கோட்டை. அதில் எங்கே பார்த்தாலும் பெரிய பெரிய அரண்மனைகளும், அழகிய சிலைகளும், மென்மையான ரத்தினக் கம்பளங்களும், நறுமண மலர்களும் இருக்கின்றன' என்று அவனுக்குத் தோன்றிற்று.

எழெட்டு நாட்களில் கோந்து பம்பாயைப்பற்றி ஓரளவு அறிந்து கொண்டான். மாமா நாள் தோறும் கடிதங்களைக் கொடுத்து அவனை வெளியே வேலை தேட அனுப்பினார். ராமுவும் தம்மால் ஆனமட்டும் முயன்று வந்தார். எதிரே வந்த ஒவ்வொருவரிடமும், "மருமான் ஊரிலிருந்து வந்திருக்கிறான். எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்திருக்கிறான். பாவம், இவனுக்குத் தகப்பன் இல்லை. இவனை நம்பி ஐந்து பேர் வாழவேண்டும். எங்காவது ஒட்டவைத்து விடுங்களேன்!" என்று மாமா சொல்வார்.

'பார்க்கலாம்', 'என்னால் முடிந்த வரையில் பார்க்கிறேன்', 'பம்பாயில் கிடைக்காத வேலையா? முயற்சி செய்துகொண்டே இருக்க வேண்டும்', 'முப்பத்தைந்து லட்சம் ஜனங்கள் வாழ்கிற இடத்திலே இவன் ஒருவன்தானா பளுவாக இருக்கப் போகிறான்?' என்ற பதில்கள் வந்தன. இப்படியே வாரங்கள் கடந்து, இரண்டு மாதங்கள் ஆயின. தான் எங்கோ அந்தரத்தில் தொங்குவதாகக் கோந்துவுக்குத் தோன்றிற்று. மாமாவும் ராமுவும் அனுப்பிய

இடங்களுக்கு அவன் பயந்து கொண்டே போனான். முதலில் அவன் பம்பாயைப் பார்த்தபோது உண்டான பயம் வேறு; இது வேறு! அப்பொழுது பம்பாயின் பிரம்மாண்டமான வடிவையும் அழகையும் கண்டு அவன் பயந்தான். இப்போதோ மனிதர்களைக் கண்டு அவன் பயந்தான். அவன் சந்திக்கப் போன மனிதர்கள் அவனை அசட்டையோடு பார்த்தார்கள்; அலட்சியமாகப் பேசினார்கள்; சிகரெட்டை ஊதிக்கொண்டு அவனுக்கு விளங்காத ஆங்கிலத்தில் கேள்வி கேட்டார்கள். மனிதர்களோடு பேசுகிறோமா, யந்திரத்தோடு பேசுகிறோமா என்றே கோந்துவுக்குப் புரியவில்லை.

பல இடங்களில் மாடிப்படிகளில் ஏறி இறங்கியபோது தன்னைப் போலவே பல இளைஞர்கள் வேலைக்குத் திண்டாடுவதை அவன் தெரிந்துகொண்டான். எங்கே போனாலும் 'இல்லை' என்ற பதில் தான் அவனுக்குக் கிடைத்தது. வேலை காலியாக இருந்த சில இடங்களில் ஜாதிப்பிரிவினைகள் தாண்டவமாடின.

அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. மாமாவும் ராமுவும் தாங்கள் நினைத்த இடங்களிலெல்லாம் முயன்று பார்த்து அலுத்துவிட்டார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே கூட்டமும் ஓட்டமும் யந்திர வாழ்க்கையுமே புலப்பட்டன. சிறுவயது முதல் அவன் கண்டு வந்த மனிதத் தன்மையோ, தென்ன மரங்களின் நிழலோ, செம்மண்ணின் பரிவோ, சோலை மலர்களின் சிரிப்போ அங்கே எங்கும் தென்படவில்லை. அவன் தனக்குள்ளே, 'பம்பாய் என்பது பிரம்மாண்டமான, அற்புதமான கோட்டையல்ல; அது பிரம்மாண்டமான, அற்புதமான ஓர் எலிப்பொறி. இந்தப் பொறியில் விழுந்த லட்சக்கணக்கான எலிகள் இங்கும் அங்கும் ஓயாமல் ஓடுகின்றன. இந்த ஓட்டத்தையும் கலவரத்தையும் நாம் நகரத்துச் சுக வாழ்க்கை என்று எண்ணியிருக்கிறோம்' என்று கூறிக் கொண்டான்.

விரைவில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. சில இடங்களில் ஆறு மாதம் பொறுத்து வேலை தருவதாகச் சொன்னார்கள். அவன் வந்து இரண்டரை மாதம் ஆகிவிட்டது. மாமா அவனை ஊருக்குப் போகும்படி குறிப்பாகச் சொன்னார். அவனுக்கும் பம்பாய் அலுத்து விட்டது.

வண்டி கல்யாண் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டபோது பின்னால் தங்கிவிட்ட பம்பாயைப் பார்த்து அவன் ஆறுதலாக ஒரு பெருமூச்சு விட்டான். பொறியில் சிக்கிய எலி எவ்விதத்திலும் வெளி வர முடியாது. தான் பாக்கியசாலியாதலால் அது முடிந்தது என்ற ஆறுதல் அவனுக்கு இருந்தது.

பெல்காமைத் தாண்டியதும் கோந்துவுக்குப் புதிய எண்ணங்கள் உதித்தன. இன்று இரவு பரேலில் நாலாவது காலனியில் முப்பத்திரண்டாம் நெம்பர் அறையில் செருப்புகள் வைக்கும் இடத்திலே அவன் முடங்கித் தூங்க வேண்டியிராது. அவனுடைய வீடு மண் வீடாக இருந்தாலும் காற்றோட்டமும் ஆரோக்கியமுமான இடம். அம்மா சாணத்தால் நன்றாக மெழு

கிய அந்த முற்றத்திலே துளசிச் செடியைப் பார்த்துக்கொண்டு தாழ்வாரத்தில் தூங்கும்பொழுது அவனுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! வீட்டுத் தோட்டத்தில் இப்பொழுது புடலங்காயும் பாகற் காயும் ஏராளமாக இருக்கும். யசோதா அந்தக் கொடிகளை மூங்கி லில் ஒய்யாரமாகப் படர விடுவாள்.

தன் வீட்டுக்கு எதிரே இருந்த தென்னந்தோப்பு அவன் ஞாபகத் துக்கு வந்தது. தந்தை இறந்த போதும், அம்மா நோயுற்ற போதும், வருஷப் பரீட்சையின் போதும், பஞ்சத்தில் குடும்பம் வருந்தியபோதும் அந்தத் தோப் பைப் பார்த்ததும் அவனுக்கு எவ்வளவோ ஆறுதல் உண்டாகும். அந்தத் தோப்பை இன்று அமைதி யாகப் பார்த்துக்கொண்டே இரவில் தூங்கலாம் என்ற எண் ணம் அவனுக்குப் பேரின்பம் தந்தது.

ஊர் நெருங்கி வந்தது. மங்க லான மாலை ஒளியில் அது மெல்ல மெல்ல மறைந்தது. ஆனால் அதன் எல்லையிலிருந்த பள்ளிக்கூடக் கட்டிடம் நன்றாகத் தெரிந்தது. பம்பாய்க்குப் போகும்போது அவன் இந்தப் பள்ளிக்கூடத்துக் குப் பக்தியோடு கை கூப்பினான். இப்பொழுது அதைப் பார்த்ததும் சிந்தனைப் புயல் எழுந்தது. இந்தப் பள்ளிக்கூடந்தான் அவனுக்குக் கல்வி கற்பித்தது. அந்தக் கல்வி யோடு அவன் பம்பாய்க்குப் போய் வேலை கிடைக்கவில்லை என்று திரும்பி வந்திருக்கிறான். இந்தக் குக்கிராமத்தில் அவனுக்கு அந்தக் கல்வி எப்படிப் பயன்படப் போகிறது?

பள்ளிக்கூடத்துக்கு எதிரே பஸ் பஞ்சராகி நின்றுவிட்டது. சிலர் அது ரிப்பேர் ஆவதற்குக் காத் திராமல் மூட்டைகளை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் போனார்கள். பாட்டியையும் அம்மாவையும் தம்பி தங்கை களையும் விரைவில் பார்க்கவேண் டும் என்ற ஆசை கோந்துவுக்கும் இருந்தது. ஆனால் அவனுடைய பழைய எஃகுப் பெட்டி பெரிதாக வும் பளுவாகவும் இருந்தது. அதைக் கையால் தூக்கி எடுத்துக் கொண்டு போக முடியாது. வண்டி ரிப்பேர் ஆவதை எதிர்பார்த்துக் கொண்டு அவன் பள்ளிக்கூட வாசலில் உட்கார்ந்தான்.

படிக்கும் நாளில் அவன் இந்தப் படிகளில் ஏறியபோது எவ்வளவோ இன்பக்கனவுகள் கண்டிருந்தான். ஆனால் வேலை கிடைக்கும் என்ற முதற் கனவுகூடப் பலிக்கவில்லை. வேலை கிடைக்காமல் அவன் வீட் டுக்குத் திரும்பி வந்திருக்கிறான்!

"யாரடா அது, கோந்துவா? பம்பாயிலிருந்து எப்பொழுதடா வந்தாய்? உனக்கு என்னடா சம்பளம் கிடைக்கிறது? ஏனடா இங்கே உட்கார்ந்திருக்கிறாய்?" என்ற கேள்விகள் அடுக்கடுக்காகக் காதில் விழுந்ததும் கோந்து திரும் பிப் பார்த்தான். ஆரம்பப் பள்ளி யில் அவனோடு படித்த தாமுதான் அவன். இவன் ஆங்கிலம் படிக்கப் போனான். அவன் சொந்த வயல் களைக் கவனிக்கலானான்.

பஸ் ரிப்பேராக இருப்பதால் கோந்து அங்கே உட்கார்ந்திருக் கிறான் என்பதைக் கண்டதும், "இப்படிக் கொண்டா அந்தப் பெட்டியை!" என்று தாமு சிரித் துக்கொண்டே சொல்லி, அதைத் தன் தலையில் சுமந்துகொண்டு நடக்கலானான். கோந்து பேசாமல் அவன் பின்னால் சென்றான்.

தாமுவோ ஓயாமல் பேசினான்: "இந்த வருஷம் நல்ல மழை; நல்ல அறுவடை. திருவிழாவில் வாண வேடிக்கை ஜோராக ஜமாய்க்கப் போகிறார்கள்!"

கோந்து ஒன்றும் பேசாமல் இருக்கவே, தாமு திரும்பிப் பார்த்து, "உனக்குத் தந்தி கிடைத்ததா?" என்று கேட்டான்.

"தந்தியா? என்ன தந்தி?"

"உன் பாட்டி மிகவும் நோய் வாய்ப்பட்டிருக்கிறாள்."

"பாட்டி நோயாளியாக இருக் கிறாளா?"

"வெங்கூரிலிருந்து பெரிய டாக்டரை அழைத்து வர வேண்டுமென்று எல்லாரும் சொல் கிறார்கள். நீ வந்தது நல்லதாகி விட்டது. பணம் இல்லை என்று கிழவி, பெரிய டாக்டர் வேண்டா மென்கிறாள். நீயே அவளுக்குச் சொல்லு!"

வீடு கூப்பிடு தூரத்தில் இருந் தது. தாமுவினுடைய வீட்டு வழி அந்த இடத்திலிருந்து பிரிகிறது. கோந்து கரகரத்த குரலில், "நீ எதற்காக அப்பா வருகிறாய்? நானே பெட்டியை எடுத்துக்கொண்டு போகிறேன்" என்றான்.

தாமு போய்விட்டான். ஆனால் கோந்துவுக்கு வீட்டுக்குப் போக வேண்டுமென்று தோன்றவில்லை. பெட்டியைத் தரையில் வைத்து அதன்மேல் உட்கார்ந்து அவன் சிந்திக்கலானான்.

'பாட்டி படுத்த படுக்கையாக இருக்கிறாள். இப்பொழுது வயல் வேலைகளை யார் செய்கிறார்களோ? நாளையிலிருந்து நான் வயலுக்குப் போகவேண்டியிருக்குமே! அங்கே போய் நான் என்ன செய்ய முடி யும்? ஏழு வருஷமாகச் சேற்றிலே காலை வைக்காதவன், கையில் அரிவாளை எடுக்காதவன், பசு மாடு களின் சாணத்தைத் தொடாத வன், இனிமேல் பாட்டியின் வேலை கள் முழுவதையும் எப்படிச் செய்ய முடியும்?

'பாட்டி படுத்த படுக்கையாக இருக்கிறாள். வெங்கூரிலிருந்து பெரிய டாக்டரை அழைத்து வர வேண்டும். டாக்டர் பீஸுக்கும், அவருக்கு டாக்ஸி சத்தத்துக்கும் அவர் எழுதிக்கொடுக்கும் விலை யுயர்ந்த மருந்துகள் வாங்கவும் பணம் எங்கிருந்து வரும்? எங்கா வது கடன் வாங்கினாலும் பாட்டி அதைச் செலவிட அநுமதிக்க மாட்டாளே? "பட்டினியிருந்தா லும் கடன் வாங்காதே" என்று அவள் சிறுவயதிலிருந்து எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறாள். கம்பு அடையைத் தண்ணீரில் தோய்த் தாவது அவள் சாப்பிடுவாளே தவிர, அயல் வீட்டில் கடன் வாங்கப் போக மாட்டாள். பேரனுக்கு வேலை கிடைத்திருப்பதாகத் தெரிந்தால்தான் அவள் டாக்ட ரைக் கூப்பிடச் சம்மதிப்பாள். அவளுக்கு உடம்பு சரியானதும் என் பாசாங்கு எப்படி நீடிக்கும்? மறுபடியும் பம்பாய்க்குப் போவதா? அங்கே போய் என்ன செய்வது? ஏதாவது ஆலையில் வேலை பார்க்கலாமா?'

இப்படி நினைத்ததும் கோந்துவுக் குத் தூக்கி வாரிப்போட்டது. ஆலை யில் வேலை செய்வதற்காகவா அவன் இத்தனை வருஷம் கஷ்டப் பட்டு ஆங்கிலம் படித்தான்? அவ னுக்குத் தன் வருங்கால வாழ்க்கை முழுவதும் புகை மூடியதாகத் தோன்றிற்று.

'பம்பாய்! அந்தப் பிரம்மாண்ட மான எலிப் பொறியில் மறுபடியும் போய் விழுவதிலே என்ன பயன்?

அங்கே போகாவிட்டால் இங்கேயே இருக்க வேண்டும். இங்கே இருந்து என்ன செய்வது? பொறியில் சிக்கிய எலியைப் போலக் கண்ணை மூடிக்கொண்டு இங்கு மங்கும் ஓடித் துடிப்பதா?

'பம்பாய் பெரிய எலிப்பொறி என்றால், நம் ஊர் சின்னப்பொறி. உலகத்திலே எங்கே பார்த்தாலும் பொறிகளே இருக்கின்றனவா? இங்கிருந்து எங்கே போவது? எதைத் தின்பது? இங்கே வறுமை; பம்பாயில் வேலையில்லாத் திண்டாட்டம்! அதைவிட...'

கோந்து பெட்டியிலிருந்து எழுந்து நின்றான். அந்தப் பெட்டியை அங்கேயே போட்டுவிட்டு எங்காவது தொலைவில் ஓடிவிடலாமா என்று அவனுக்குத் தோன்றிற்று. நோயாளியான பாட்டி இராத இடத்துக்கு, அநாதையான தம்பி தங்கை இராத இடத்துக்கு, வேலை கேட்டால் 'இல்லை' என்று சொல்லாத இடத்துக்கு, முழங்காலளவு சேற்றிலே வேலை செய்ய வேண்டியிராத இடத்துக்கு, யந்திர ஓசையினால் காது செவிடு படாத இடத்துக்குப் போய்விட அவன் எண்ணினான்.

அந்தப் பழைய பெட்டியை அவன் அசட்டையோடு பார்த்தான். இதுவரைக்கும் அவனுடைய வாழ்க்கைக்குச் சாட்சியாக இருந்தது அது. அதைப் போட்டுவிட்டு அவன் தொலைவில் போய்விட இருந்தான். மறுபடி ஒரு போதும் அந்தக் குக்கிராமத்தில் அடியெடுத்து வைக்க அவன் விரும்பவில்லை.

வந்த வழியே அவன் திரும்பினான். ஒரே ஒரு தடவை தான் பிறந்து வளர்ந்த அந்த வீட்டைக் கண்ணாரக் காண வேண்டும் என்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் திரும்பி வந்து நின்றான். இருட்டில் வீடு தெளிவாகத் தெரியவில்லை. முற்றத்திலே ஒரு விளக்குப் பளிச்சென்று எரிந்தது. துளசிச் செடியின் முன்னால் யசோதா வைத்த விளக்கு அது! பாட்டிக்கு உடம்பு சரியாக வேண்டுமென்று அவள் எவ்வளவு நேரம் அங்கே நின்று வேண்டியிருப்பாளோ!

தொலைவிலிருந்து தோன்றிய அந்த மங்கலான வெளிச்சம் வர வரப் பெரிதாவதாக அவனுக்குத் தோன்றிற்று. அந்த வெளிச்சத்தில் பாட்டி, அம்மா, யசோதா, இரண்டு தம்பிகள் எல்லாரும் அவன் கண்ணுக்குத் தெளிவாகத் தென்பட்டார்கள். பாட்டியின் கண்ணில் ஒளியே இல்லை. அம்மாவின் கண்ணீர் ஆறாகப் பெருகியது. யசோதா முகத்தை மூடிக்கொண்டு உள்ளுக்குள்ளே குமுறி அழுதாள். தம்பிகள் அம்மாவைக் கட்டிக்கொண்டு கவலையோடு பார்த்தார்கள்.

அந்த விந்தையான ஒளியை அவனால் பார்க்க முடியவில்லை. கூரிய அம்புபோல அதன் கதிர்கள் தன் நெஞ்சைக் குத்துவதாக அவனுக்குத் தோன்றியது.

அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். வீட்டுக்கு எதிரே இருந்த தென்னந்தோப்பு எப்போதும் போல நகைத்தது. உயரத்திலிருந்து தென்ன மட்டைகள் வான்பிறையோடு குலாவின.

மிகவும் உயரத்தில் இருந்த தென்னமரத்தின் உச்சியில் தன் தந்தை உட்கார்ந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவர் கோபத்தோடு ஏதோ பேசுவதாகத் தோன்றவே அவன் கண்ணை மூடிக்

கொண்டான். அவர் பேச்சு அவன் காதில் தெளிவாக விழுந்தது.

"அடே பயங்கொள்ளி! இருபத்தைந்து தலை முறைகளாக வாழும் இந்த மண்ணை விட்டு நீ எங்கே ஓடிப்போகிருய்? வயலில் வேலை செய்யும்போது உன் கொள்ளுப் பாட்டனுடைய விரலைப் பாம்பு தீண்டியது. அவன் அங்கேயே அரிவாளால் அந்த விரலை வெட்டி உயிரைக் காத்துக்கொண்டான். சாவுக்குப் பயந்து அவன், சோறு போடும் தாயை விட்டு எங்கும் ஓடிப் போகவில்லை. இரவிலே மலைச்சாரலில் புலிக்குப்பயந்து உன் பாட்டனுடைய எருதுகள் வண்டியிலிருந்து திமிறிக்கொண்டு ஓடின. வண்டி படு பாதாளத்தில் விழும் என்று தெரிந்தவுடனே, உன் பாட்டன் எகிறிக் குதித்தான். நாலு நாள் அவன் பேச்சு மூச்சில்லாமல் கிடந்தான். புலிக்குப் பயந்து அவன் வண்டியோட்டும் தொழிலை விட்டுவிடவில்லை. உன் தகப்பன் கால் நழுவித் தென்ன மரத்திலிருந்து விழுந்து இறந்தான். ஆனுல் அவன் ஆண்டவனிடம், 'என்னை மறுபடியும் இந்த ஊரிலேயே பிறப்பித்துவிடு. நான் மறுபடியும் உயரமான தென்ன மரங்களில் ஏறித் தேங்காய்களையெல்லாம் பறிக்கப் போகிறேன்' என்று வேண்டுகிருன். நீ என்னடா என்ருல்..."

கோந்து அங்கிருந்து 'விர்' ரென்று நடந்து போய், வேகமாக அந்தப் பெட்டியைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு, வீட்டை நோக்கி நடந்தான்.

இருவருக்கும் ஒரே பாடம்

கொரியாவில் ஒரு சிறிய நகரம் அடிக்கடி அமெரிக்கரிடமும் சீனரிடமும் கை மாறிக்கொண்டது.

அங்கே ஒரு சமயம் அமெரிக்கர் திரும்பி வந்தபோது, பழகிய ஒரு முகத்தை அமெரிக்க ஸார்ஜெண்ட் ஒருவர் கண்டார்.

"என்ன அப்பா, நீ இன்னமும் உயிரோடிருக்கிருயா? எப்படி?" என்று கேட்டார்.

"ஒரு சுலபமான தந்திரத்தைக் கைக் கொள்கிறேன். அதனுலேயே கம்யூனிஸ்டுகள் வந்தால், 'நல்ல வேளை வந்தீர்களே, எங்கள் பாக்கியம்' என்று வரவேற்கிறேன். நீங்கள் வந்தால், உங்களிடமும் அதே பாடந்தான்."

"அப்படியா! கம்யூனிஸ்டுகளுக்கும் எங்களுக்கும் நீ ஒரு வித்தியாசமும் காட்டவில்லையா?"

"ஒரே ஒரு வித்தியாசம். உங்களிடம் நான் படிப்பதும் ஒரே பாடந்தான் என்று அவர்களிடம் நான் சொல்ல மாட்டேன்."

—'முயென்ச்னெர் இல்லஸ்ட்ரியெர்ட்'

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

குண்டும் கணித நிபுணரும்

★

முதல் உலக யுத்தகாலத்தில் ஃபிரெஞ்சுக் குடியரசின் ஜனாதிபதியாயிருந்த ப்வான்கரே (Poincare) என்பவரைப் பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். அவருக்குச் சொந்தக்காரரான மற்றொரு ப்வான்கரே இருந்தார். அவர் ஒரு ப்ரொஃபஸர்; கணித நிபுணர்.

பாரிஸ் நகரில் கணித நிபுணரின் வீட்டைச் சூழ ஒரு சமயம் இரவும் பகலும் ஜெர்மன் குண்டுகள் சரமாரியாக விழுந்துகொண் டிருந்தன. அவருடைய தோழர்களெல்லாம் இந்தக் குண்டு மழையின் பலனாக வாடி இளைத்துப் போனார்கள். நிபுணர் மட்டும் கவலையற்ற ஆரோக்கியமாய் முக மலர்ச்சியோடு இருந்தார்.

"இதன் ரகஸ்யம் என்ன?" என்று கணித நிபுணரை ஒரு நிருபர் விசாரித்தார்.

நிபுணர் சொன்னார்: "குண்டுச் சப்தம் கேட்டதும் என் தோழர்களெல்லாம் பயந்து நடுங்கிப் போகிறார்கள்; தப்பித்துக் கொள்வதற்காக வாசலிலே கிளம்பி அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். வெயிலிலும் பனியிலும் நடமாடுவதால் அவர்களுக்கு ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும்; கப ஜ்வரம்கூட வந்து விடுவதுண்டு. அதனால்தான் அவர்கள் இப்படி அநியாயமாய் இளைத்துப் போகிறார்கள்.

நிருபர்: அது சரிதான். உங்கள் விஷயத்தை இல்லையா நான் கேட்டேன்."

நிபுணர்: என் விஷயமா? அது ரொம்பவும் சாமான்யமான சங்கதி. நானே ஒரு கணித நிபுணன். இன்ன இன்ன நிலைமைகளில் ஒரு நிகழ்ச்சி நிகழக் கூடிய சான்ஸ் என்ன என்பதைக் கணனம் செய்து விடக்கூடிய ப்ராபபிளிட்டீஸ் (ஸம்பாவித விகிதக் கணக்கு) என்ற ஒரு கணித வகை உண்டு. அந்தக் கணக்குப்படி பார்த்தால், என் தலைமீது குண்டு விழக்கூடிய சான்ஸ் விகிதம் மிகவும் அற்பம். இந்த உண்மை எனக்குத் தெரியும். ஆகவே, நான் இருந்த இடத்தை விட்டு அசைவதேயில்லை. கவலைப்படுவதும் இல்லை.

February '53 Regd. No. M. 4975

மஞ்சரி

நந்தன - மாசி

ஊரும் உலகமும்		1
குழந்தையின் கண்	பேரெண்ட்ஸ் மகஸீன்	3
நூதனக் கருவிகள்		7
அபூர்வக் கல்யாணம்	மாடர்ன் ரெவ்யூ	8
ராம பட்டாபிஷேகம்		14
க்விஸ்		19
கேட்பாரற்ற பணம்	அமிர்தபஜார் பத்திரிகா	20
வைத்தியப் புதுமைகள்		23
பல சரக்கு		26
உலகில் பெரிய பதவி		29
சூரிய விழா	பிரஜா மத	34
தென்னைப் பாதுகாப்பு	திருவாங்கூர்-கொச்சி ந்யூஸ்	37
போட்டியிடச் சென்றேன்	ஓரியெண்ட்	40
கார்ட்டூன் கதம்பம் (படம்)		44
விலைக் கட்டுப்பாடு		46
ரோல்ஸ்-ராய்ஸ் வந்த விதம்	எவ்வரி படீஸ் வீக்லி	49
நிறச் சிகிச்சை		55
அதிசய இரட்டை	டைம்	59
பறக்கும் தட்டு		63
ரமணர்: வாழ்வும் வாக்கும்		70
ஏழையற்ற உலகம்	ரா. ஸ்ரீ. தேசிகன்	73
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	பில்மிண்டியா	79
வீட்டு விளக்கு	வி. ஸ. காண்டேகர்	80
குண்டும் கணித நிபுணரும்		(3-ஆம் அட்டை)